பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 வள்ளுவர் ஆண்டு 2048 தை 15, சனிக்கிழமை 28.01.2017 கதிர் 84

மீண்டும் புதுப் பொலிவுடன்
சாறிகளின் சாம்ராஜ்ஜியம்
சரவணா
ரெக்ஸ்
இல.526,529 பருத்தித்துறை வீதி,
நல்லூர்,யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0778448045
இல.171, பிரதான வீதி,
நெல்லியடி.
தொ.பே.: 021 226 2992

## நுகேகொடையில் பெருக்கெடுத்த ஜனவெள்ளம் மத்தியில் உரை

# உத்தேச அரசமைப்பு நாட்டைத் துண்டாடும்

## மஹிந்த அறிவிப்பு

கொழும்பு, ஜனவரி 28

“இந்த அரசின் உத்தேச புதிய அரசமைப்பினால் நாடு துண்டாடப்படும் நிலைமையே ஏற்படும். யுத்தத்தில் நாட்டுக்குக் கிடைத்த சரித்திர வெற்றியைப் பாதுகாப்பது நாட்டின் தலைவர்களினதும் மக்களினதும் கடமையாகும். ஆகையால்தான் மக்கள் இவ்வளவு எண்ணிக்கையில் இங்கு திரண்டு இந்த மோசடித்தனமான அரசமைப்பு மாற்ற முயற்சியை நிறுத்துமாறு செய்தி சொல்லியிருக்கின்றார்கள்.”

- கொழும்பு நுகேகொடையில் கூட்டு எதிரணி நேற்று நடத்திய பொதுக் கூட்டத்தில் பல்லாயிரக் கணக்கில் ஜன வெள்ளமாகத் திரண்டிருந்த மக்களிடையே உரையாற்றுகையில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இவ்வாறு அறிவித்தார்.

பக்கம் 20 »



### முதலில் வந்த மஹிந்தவின் ‘டம்மி’ வாகனம்

முன்னாள்ஜனாதிபதிமஹிந்த ராஜபக்ஷ இல்லாமல் அவரது வாகனம் மாத்திரம் முதலில் நுகேகொடை பொதுக்கூட்டத்திற்குக் கொண்டு வரப்பட்டது என நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்னான்டோ

பக்கம் 20 »


### மஹிந்தவின் கூட்டத்தில் கருணா உரை

கொழும்பு, ஜன.28

நுகேகொடையில்நேற்றுநடைபெற்ற ஒன்றிணைந்த எதிரணியின் ‘புரட்சியின் ஆரம்பம்’ பேரணியில் முன்னாள் அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் கலந்து கொண்டு உரையாற்றினார்.

இந்தக் கூட்டத்தில் தான் தமிழ் மொழியில் உரையாற்றுவதற்கு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த

பக்கம் 20 »



நுகேகொடையில்நேற்றுநடைபெற்ற கூட்டு எதிரணியின் ‘புரட்சியின்ஆரம்பம்’பேரணியில் கலந்துகொண்ட முன்னாள் ஜனாதிபதிஉட்பட்டஎதிரணியின் முக்கியஸ்தர்களையும் பெருந்திரளான மக்கள் கூட்டத்தையும் படங்களில் காணலாம்.

### யாழ்.சர்வதேச வர்த்தக சந்தை ஆரம்பம்



நேற்று ஆரம்பமான யாழ். சர்வதேச வர்த்தக சந்தையைக் கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சர் ரிசாட் பதியுதீன், யாழ். இந்தியத் துணைத் தூதுவர் ஆ.நடராஜன், நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன், யாழ். வர்த்தகத் தொழிற்றுறை மன்றத் தலைவர் வீ.கே.விக்னேஸ் ஆகியோர் இணைந்து நாடா வெட்டித் திறந்து வைத்தனர்.(21)

### தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிராக யாழ். பல்கலை மாணவர்கள் நேற்று பேரணி

*வடக்கு முதல்வர், ஆளுநர், அரச அதிபருக்கு மனுக்கள் கையளிப்பு*




யாழ்ப்பாணம், ஜன.28

மாலபே ‘சைட்டம்’ தனியார் மருத்துவக்கல்லூரிக்கு எதிராக யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்கள் நேற்று நடைபவனி ஒன்றை மேற்கொண்டனர். யாழ்.பல்கலைக்

பக்கம் 20 »

### கச்சதீவில் கடற்படையினர் மீனவரைத் தாக்கவேயில்லை!

*மறுப்புச் செய்தியில் தளபதி தெரிவிப்பு*

‘கச்சதீவில் ஒதுங்கிய நெடுந்தீவு மீனவரை கடற்படையினர் மோசமாகத் தாக்கினர்’ என்ற தலைப்பில் கடந்த 24 ஆம் திகதி ‘காலைக்கதிர்’ நாளிதழின் முதலாம் பக்கத்தில் வெளியான செய்தி குறித்து திருத்தம் கோரி

பக்கம் 19 »

### அளப்பு அருணாசலம்





உவர்...‘நான் திரும்பி வந்துட்டேன்னு சொல்லு...!’ எண்ட மாதிரியெல்லோ கர்ச்சிக்கிறார்...

காலைக்கதிர் Kalaikkathir



# இந்திய அமைதிப் படையினரின் நினைவிடத்திலும் குடியரசுத் தினத்தன்று மலரஞ்சலியும் மரியாதையும்





இந்தியாவின் 68 ஆவது குடியரசுத் தினமான நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத்துணைத்தூதரகத்தின் ஏற்பாட்டில் பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற்றன. அதன் ஓர் அங்கமாக நேற்றுக்காலை இந்தியத் துணைத் தூதுவர் ஆ.நடராஜனும் தூதரக அதிகாரிகளும் பலாலியில் அமைந்துள்ள - மறைந்த இந்திய அமைதி காக்கும் படையினரின் நினைவிடத்தில் - மலரஞ்சலி செலுத்தி மரியாதைசெய்தனர். அப்போது எடுக்கப்பட்ட படம்.

இந்த நிகழ்வில் இலங்கைப் பாதுகாப்புப் படையினரும் தளபதிகளும் பங்குபற்றினர்.

# பொருத்து வீடுகள் பொருத்தமற்றவை அமைச்சர் ரிசாட் யாழில் தெரிவிப்பு

## மக்கள் விரும்பாதவைகளை திணிக்கக்கூடாது என்கிறார்

- எஸ்.நிதர்சன் -

வடக்கு, கிழக்கு மக்களுக்கு பொருத்து வீடுகள் பொருத்தமானவை அல்ல என்று தெரிவித்த அகில இலங்கை மக்கள் காங்கிரஸ்கட்சியின்தலைவரும்கைத்



தொழில், வாணிபத்துறை அமைச்சருமான ரிசாட் பதீயூதீன், தான் மீள்குடியேற்ற அமைச்சராக இருந்திருந்தால் இவ்வாறான வீட்டுத் திட்டங்களை மக்களுக்கு வழங்கமாட்டார் என்றும் கூறினார்.

அரசாங்கம் தனக்கு மீள்குடியேற்ற அமைச்சை வழங்கத் தயாராக இருந்த போதிலும் இலங்கைத் தமிழரசுக் கட்சியே அதனைத் தடுத்து நிறுத்தியது என்றும்அவர்குற்றம்சாட்டினார்.

யாழ். சர்வதேச வர்த்தக கண்காட்சியின் ஆரம்ப நாள் நிகழ்வுகள் யாழ். பொது நூலகத்தில் நேற்று நடைபெற்றன. இந்த நிகழ்வை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய அமைச்சர் ரிசாட் பதியுதீன், பின்னர் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் - நானும் கடந்த காலங்களில் மீள்குடியேற்ற அமைச்சராக இருந்திருக்கின்றேன். அப்போதும் சரி, இப்போதும் சரி, மக்களுக்கு பல சேவைகளை வழங்கி வருகின்றேன். மக்களின் விருப்பம் எதுவோ அதற்கேற்பவே எனது சேவைகள் அமைந்தன.

தற்போது மீள்குடியேற்ற அமைச்சு எமது மக்களுக்கு பொருத்து வீடுகளை வழங்க நடவடிக்கைஎடுத்துவருகின்றது. அந்த வீடுகள் பொருத்தமானவை அல்ல. எனக்கு மீள்குடியேற்ற அமைச்சு வழங்கப்பட்டிருந்தால் இந்த நிலை ஏற்பட்டிருக்காது. - என்றும் அவர் கூறினார்.

தற்போதைய மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் பொருத்து வீடுகளைத்தான் மக்களுக்கு வழங்குவார் என்று விடாப்பிடியாக நிற்கின்ற நிலையில், அமைச்சர் ரிசாட் பதியுதீனின் இந்தக் கருத்து முக்கியத்துவம் பெற்றுள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (ம)

## யாழ். மத்திய கல்லூரி மாணவர் கவனத்துக்கு

யாழ்ப்பாணம், ஜன.28

யாழ். மத்திய கல்லூரியிலிருந்து இம்முறை ஜிசீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்கு இரண்டாம் தடவை தோற்றவிருக்கும் மாணவர்கள் உடனடியாக கல்லூரி அலுவலகத்தில் விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுஎதிர்வரும்3ஆம்திகதிக்கு முன் விண் ணப்பிக்குமாறு அதிபர் கேட்டுக்கொண்டுள்ளார். (இ)

## ஜீவாதார நிகழ்ச்சித்திட்டம் இன்று அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், ஜன.28

ஹேலீஸ் அக்ரிக்கல்சர் நிறுவனத்தின் ஜீவாதார நிகழ்ச்சித் திட்ட வைபவம், இன்று சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அங்குரார்ப்பணம் நடைபெறவுள்ளது.

நாவற்குழிமகாவித்தியாலய மண்டபத்தில் மேற்படி நிகழ்ச்சி இடம்பெறும் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (அ)

## பிற்போடப்பட்டது

யாழ்.மாவட்டசர்வோதயநிலையத்தில் இன்று சனிக்கிழமை நடைபெறவிருந்தஎம்.ஜி. ஆரின் 100 வயதுப் பூர்த்தி விழாவும், கலைஞர்கள்கௌரவிப்புநிகழ்வும்காலநிலைசீரற்றகாரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

விழாநடைபெறும்தினம்பின்னர் அறிவிக்கப்படும் என்றும் ஏற்பாட்டாளர்கள்தெரிவித்தனர். (இ-19)

# புலனாய்வாளர்களின் அச்சுறுத்தலால் சுதந்திரமாக செயற்பட முடியவில்லை

## முல்லை. பிரஜைகள் உரிமைக்கான அமையம் குற்றச்சாட்டு

முல்லைத்தீவு, ஜன.28

இலங்கைப்புலனாய்வாளர்களின்தொடர்அச்சுறுத்தல்கள், அதீததலையீடுகள்காரணமாக தங்களால்சுதந்திரமாக இயங்க முடியவில்லை எனவும் இதனால் தங்கள் அமைப்பு தற்போது முடக்கப்பட்டுள்ளது எனவும் முல்லைத்தீவு பிரஜைகள் உரிமைக்கான அமையம் குற்றம்சாட்டியுள்ளது.

மேற்படி அமைப்பு நேற்று வெள்ளிக்கிழமைமுல்லைத்தீவு சிலாவத்தைபொதுநோக்குமண்டபத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தது.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் எந்தவிதமான முன்னேற்றகரமாக செயற்பாடுகளும் இடம்பெறவில்லை. தீர்வுகளும் கிடைக்கவில்லை. காணாமல்ஆக்கப்பட்டவர்களின் குடும்ப உறுப்பினர்கள் முன்னெடுக்கும் போராட்டங்கள் தொடர்பாக அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவில் பொதுமக்களின் பெரும்பாலான காணிகளை முப்படையினரும் சுவீகரித்துள்ளனர். இதனால் பலர் இன்னமும் இடைத்தங்கல் முகாம்களில் வாழ்கின்றனர். அத்துடன்சட்டவிரோதகாடழிப்பு மற்றும் மீன்பிடி வளங்களைச் சூறையாடுதல்போன்றபல்வேறு சட்டவிரோதச்செயல்கள்திட்டமிட்டுநடத்தப்படுகின்றனஎன்றும் அவர்கள் அந்த ஊடகவியலாளர் சந்திப்பில் சுட்டிக் காட்டினர்.

மேலும் புனர்வாழ்வளிக்கப்பட்டமுன்னாள்போராளிகள், போரினால்பாதிக்கப்பட்டநிலையில் தற்பொழுது உடல் நலக் குறைவுடன்உள்ளார்கள். இந்த விடயத்தில் இதுவரை எந்தவிதமான முன்னேற்றங்களும் ஏற்படவில்லை என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

பல்வேறு அச்சுறுத்தல்கள் காரணமாகதங்கள்செயற்பாடுகள் தாமதம் அடைகின்ற போதிலும், தொடர்ந்தும் தாங்கள் மக்கள்சேவையைமேற்கொள்வார்கள் என்றும் அவர்கள் தெரிவித்தனர். (ம-70)

## 31 இற்கு முன்னர் ஆதனவரி செலுத்தினால் 10 வீதம் கழிவு

சாவகச்சேரி, ஜன.28

சாவகச்சேரி நகர சபை எல்லைக்குட்பட்ட காணிகள், வீடுகள் மற்றும் வர்த்தக நிலையங்களுக்கான ஆதன வரியை எதிர்வரும்31ஆம்திகதிக்குமுன்னர் செலுத்துமாறு சாவகச்சேரி நகராட்சிமன்றசெயலாளர்பா.சண்முகதாசன் அறிவித்துள்ளார்.

31 ஆம் திகதிக்கு முன்னர் ஆதன வரியை செலுத்துபவர்களுக்கு 10 வீதச் சலுகை வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-21)

## குடிதண்ணீர் கட்டணம் இனி ரூ.64.80 சதம்

யாழ்ப்பாணம், ஜன.28

யாழ்.மாநகரசபையின்பொது நீர்கட்டணம்4ரூபா80சதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது. என்று யாழ்.மாநகரசபைஆணையாளர் பொ.வாகீசன் அறிவித்திருக்கின்றார்.

ஜனவரி முதலாம் திகதி முதல் ஒருகுடும்பத்திடம்ரூ.64.80சதம் கட்டணமாகப் பெறப்படும் - என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# மனிதன் - பன்றி இணைத்து புதுமையான உயிரினம்?

மனிதனையும், பன்றியையும் இணைத்து புதுமையான உயிரினம் ஒன்றை விஞ்ஞானிகள் வெற்றிகரமாக உருவாக்கியுள்ளனர் என இணையத்தளச் செய்திகள் தகவல் வெளியிட்டிருக்கின்றன.

மனிதனின் அணுக்களை பன்றியின் கருமுட்டைக்குள் செலுத்திய விஞ்ஞானிகள், மீண்டும் கருமுட்டையை பன்றியின் உடலுக்குள் செலுத்தினர்.

இந்த உயிரினத்துக்கு Chimera என்று பெயரிட்டுள்ள விஞ்ஞானிகள், எதிர்காலத்தில் மனிதனுக்குத் தேவையான உடல் உறுப்புகளை பிற உயிரினங்களிடம் இருந்து வளர்க்க முடியும் என்பதைக் கண்டறியவே குறித்த சோதனையை மேற்கொண்டுள்ளனர்.

இந்த முயற்சி மட்டும் வெற்றி பெற்றால், எதிர்கால தொழில்நுட்பத்தில் மாபெரும் புரட்சி ஏற்படும். எனவே இந்த ஆய்வு வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

# ஜாலியவின் பிணை மனு நிராகரிப்பு

அமெரிக்காவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் ஜாலிய விக்கிரம சூரியவைத் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு கோட்டை நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

ஜாலிய விக்கிரமசூரியவின் தரப்பால் தாக்கல் செய்யப்பட்ட பிணை மனுக் கோரிக்கையை நிராகரித்த நீதிபதி லங்கா ஜயரத்ன அவரை எதிர்வரும் 9ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவராகச் செயற்பட்ட காலப்பகுதியில் தூதுவர் காரியாலயத்திற்காக கட்டடம் ஒன்றைக் கொள்வனவு செய்த வேளையில் 3 லட்சத்து 20 ஆயிரம் அமெரிக்க டொலர்களுக்கும் அதிகமான தொகையை முறையற்றவகையில்கையாண்டார் என அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டு கடந்த நவம்பர் 18ஆம் திகதி பொலிஸ் நிதிமோசடி விசாரணைப்பிரிவினரால்ஜாலியவிக்கிரமசூரிய கைது செய்யப்பட்டிருந்தார். (ஒ)

## கொக்குவில் இந்துவில் தரம் 6 புதுமுக மாணவர் பங்குபற்றும் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜன.28

கொக்குவில் இந்துக் கல்லூரி தரம் 6 புதுமுக மாணவர்களுக்கான 'மகிழ்ச்சிகரமான பாடசாலைச்சூழல்இசைவாக்கம்'நிகழ்ச்சித் திட்டம் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணிக்கு பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்ச்சி கொக்குவில் இந்துக் கல்லூரியின் க்னடா வாழ் பழைய மாணவர்கள் ரகுதேவராஜா,திருமதிசுகன்ஜாதேவராஜா ஆகியோரின் அனுசரணையுடன் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# ஓட்டோக்களுக்கான விதிமுறைகள் ஏப்ரல் 1 முதல் நடைமுறைக்கு வரும்

முச்சக்கரவண்டிகள்தொடர்பாக விதிக்கப்பட்டுள்ள புதிய சட்டதிட்டங்கள்எதிர்வரும்ஏப்ரல் முதலாம்திகதிமுதல்அமுலுக்கு வரும்என்று அரசு அறிவித்துள்ளது.

இதுதொடர்பானவர்த்தமானி அறிவித்தல் அண்மையில் வெளியிடப்பட்டிருந்தபோதிலும் அது அமுல்படுத்தப்படும் திகதி அறிவிக்கப்பட்டிருக்கவில்லை.

இந்நிலையில்எதிர்வரும்ஏப்ரல் முதலாம் திகதி முதல் அந்த புதியசட்டதிட்டங்கள் அமுலுக்கு வரும்என்று அரசு அறிவித்துள்ளது.

அதன்படிபயணிகள்போக்குவரத்துக்குப்பயன்படுத்தப்படும் அனைத்து முச்சக்கர வண்டிகளிலும் மீட்டர் பொருத்தப்பட்டிருக்க வேண்டும்.

அனைத்துமுச்சக்கரவண்டிகளிலும் சாரதி ஆசனத்திற்குப் பின்புறமாக வாகனத்தின் பதிவிலக்கம், சாரதியின் பெயர், சாரதியின் புகைப்படம் என்பன காட்சிப்படுத்தப்பட வேண்டும்.

அத்துடன் பயணிகளை ஏற்றிக்கொண்டு பயணிக்கும் போது குறுகிய தூரமுள்ள வீதிகளினூடாகப் பயணிப்பதற்கு சாரதி கடமைப்பட்டுள்ளார் என்றும் இதுதொடர்பில்வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

# மரண அறிவித்தல்



## அமரர் E.S. பேரம்பலம் கணேசலிங்கம்

**(உரிமையாளர், E.S.P & Company, யாழ்ப்பாணம்; E.S.P & Company, கொழும்பு)**

**(அகில இலங்கை சமாதான நீதிவான், வணிகமாமணி, இறைபணி செம்மல், சிவதொண்டன்)**

வாரிவளவு, காரைநகரைப் பிறப்பிடமாகவும், கொழும்பு பம்பலப்பிட்டியை வதிவிடமாகவும், கொண்ட E.S. பேரம்பலம் கணேசலிங்கம் கடந்த 23.01.2017 திங்கட்கிழமை இரவு இந்தியாவில் இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற E.S. பேரம்பலம் (தொழிலதிபர், E.S.P & Company), காலஞ்சென்ற மாணிக்கம் தம்பதியரின் அருமைப் புதல்வனும் வேலுப்பிள்ளை கதிரவேலு, காலஞ்சென்ற கார்த்திகேயனி ஆகியோரின் அன்பு மருமகனும் சுமதியின் பாசமிகு கணவரும், அபிராமி (C/ Ramanathan Hindu Ladies college), செந்தூரன் (Colombo International School), வைஷிகா (Holy Family Convent, Bambalapitiya) ஆகியோரின் அன்புத் தந்தையும் பராசக்தி, பரமேஸ்வரி, சௌந்தராம்பிகை, நாகரத்தினம், அன்னபாக்கியம், காலஞ்சென்ற பாலாமணி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்ற திருஞானசம்பந்தன், சதாசிவம், சோமசுந்தரம், தங்க மலர், சண்முகராஜா, சுதாகரன், சுபாஸ்கரன்,சுபோதினி ஆகியோரின் அன்பு மைத்துனரும், சைலா, அறிவழகன் ஆகியோரின் உடன்பிறவா சகோதரரும், கஜேந்திரன், கஜமுகன், கமல நேசன், கமலநாதன், கமலரூபன் ஆகியோரின் அருமைச் சித்தப்பாவும், சண்முகநாதன், காலஞ் சென்ற சண்முகராசா, பவானி, சண்முகரட்ணம், சிவராசன், சிவகுமாரி, சிவரூபன், சிவகணேசன், நந்தினி, சாந்தகுமார், சிவகுமார், ராஜசுலோசினி, கலைமகள், வாசுகி, அச்சுதன், உமாசுதன், சங்கவி ஆகியோரின் பாசமிகு மாமனும் ஆகாஷ், ஆர்த்தி ஆகியோரின் அருமைப் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (28.01.2017) சனிக்கிழமை அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, நாளை (29.01.2017) ஞாயிற்றுக்கிழமை காலை 07.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இறுதிக்கிரியைகள் இடம்பெற்று காலை 10.00 மணியளவில் பொரளை (கனத்தை) இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

இல.11, பெதெஸ்டா வீதி, கொழும்பு. 05.
0771106323, 0776757178

**தகவல்: குடும்பத்தினர்**

காலைக்கதிர் Kalaikkathir




நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, editor@kalaikkathir.lk
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600


# புலம்பெயர் தமிழர்களை புறம் ஒதுக்க முடியாது!

"புலம் பெயர்ந்தோர் மற்றும் புலம் பெயர் அமைப்புகள் மீதான தடையை முற்றாக நீக்கி, அவர்களையும் இணைத்துச் செயற்படுங்கள்." - இவ்வாறு யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவிடம் பகிரங்க நிகழ்வில் வைத்துக் கோரிக்கை விடுத்திருக்கின்றார் வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன்.

சரியான சமயத்தில், சரியான தரப்பிடம், சரியான முறையில் இந்தக் கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது.

வடக்குத் தமிழ் மக்களுக்கு உதவும் வகையில் வெளிவிவகார அமைச்சின் பிராந்திய அலுவலகம் ஒன்றைத் திறப்பதற்காக யாழ்ப் பாணத்துக்கு வந்த வெளிவிவகார அமைச்சரிடம், வடக்கு மாகாண முதல்வர் என்ற உரிமையோடு இக் கோரிக்கையை நீதியரசர் விக்னேஸ்வரன் முன்வைத்திருக்கின்றார். அதுவும் தமிழர்களின் தலைவராக விளங்கும் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனையும் முன்னால் வைத்துக்கொண்டு இந்தக் கோரிக்கையை அவர் சமர்ப்பித்திருக்கின்றமை மேலும் முக்கியத்துவம் பெறுகின்றது.

இலங்கைத் தமிழர்களின் விடுதலை கோரிய - உரிமைக்கான - ஆயுதப் போராட்டம், அரச ஆயுதப் படைகளால் வெற்றி கொள்ளப்பட்டமையை அடுத்து, இனப் பிரச்சினைக்கு மாற்றுவழித் தீர்வாக அமைதி முயற்சிகள் முன்னெடுக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்ட சமயத்தில், போர்த் தடை அறிவிப்பை முன்னைய மஹிந்த ராஜபக்ஷ அரசு விடுத்தமை பலருக்கும் நினைவிருக்கலாம்.

இலங்கையில் இனப் பிரச்சினைக்கு அமைதி வழித் தீர்வு என்பது சமாதானப் பேச்சுகள், புரிந்துணர்வு, நல்லிணக்கம், விட்டுக்கொடுப்பு போன்றவற்றின் அடிப்படையில்தான் அமைய வேண்டும். ஆயுத முனையில் வெற்றியீட்டிய தரப்பு அதனால் கிடைத்த மேலாதிக்கத்தை வைத்துக்கொண்டு, ஆயுதப் போராட்டத்தில் பின்னடைவைக் கண்ட - எண்ணிக்கையில் சிறுபான்மை இனத்தவரான - தரப்பு மீது திணிப்பதற்குப் பெயர் அமைதித் தீர்வோ அல்லது நல்லிணக்க உடன்பாடோ அல்ல.

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்தபோது - அவரது சகோதரர் 'சர்வவல்லமை படைத்த' பாதுகாப்புச் செயலாளராகப் பணியாற்றிய சமயம் - புலம் பெயர்ந்த தமிழர்களின் அமைப்புகள், நிறுவனங்கள் போன்றவை மீதும் எழுநூறுக்கு மேற்பட்ட புலம் பெயர் தமிழர்கள் மீதும் தடை விதிக்கும் தான்தோன்றித்தனமான நடவடிக்கை இலங்கை அரசுத் தரப்பால் முன்னெடுக்கப்பட்டது. அப்போதைய அரசின் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸும் இந்த நடவடிக்கைக்கு ஒத்து ஊதினார்.

யுத்த வெற்றியின் மமதையால் வந்த பெரும் திமிர் நடவடிக்கையாகவே அது அப்போது பார்க்கப்பட்டது; விமர்சிக்கப்பட்டது.

வடக்கு, கிழக்கில் வாழும் இலங்கைத் தமிழர்களும் தென்னிலங்கையோடு கைகோத்தமையால் 2015 ஜனவரியில் மஹிந்த ராஜபக்ஷ வீட்டுக்கு நடையைக் கட்டினார்.

அந்த ஆட்சி மாற்றத்தின் விளைவாக மேற்படி தடைபோன்ற எதேச்சதிகார நடவடிக்கைகள் மாற்றியமைக்கப்படும்; புரிந்துணர்வை ஏற்படுத்தக் கூடியதாக நிலைமை மாற்றப்படும் என்றெல்லாம் தமிழர்கள் எதிர்பார்த்தார்கள்.

ஆனால், அது நடக்கவேயில்லை என்பது எம் எல்லோரினதும் துரதிஷ்டமாகும்.

புலம் பெயர்ந்தோர் மற்றும் புலம்பெயர்ந்த அமைப்புகள் மீதான தடையிலும் ஒரு சில தரப்புகள் மட்டுமே உள்வாங்கப்பட்டுத் தடை நீக்கப்பட்டது. ஏனைய தரப்புக்கான தடை நீடிக்கப்படும் என்றே வெளிவிவகார அமைச்சு அறிவித்திருந்தது.

இதனையே வேதனையோடும், விசனத்தோடும் வெளிவிவகார அமைச்சருக்கு, அமைச்சர் பங்குபற்றிய நிகழ்ச்சி ஒன்றில் வைத்துத் தமது உரை மூலம் உணர்த்தியிருக்கின்றார் விக்னேஸ்வரன்.

இனப் பிணக்கு, யுத்தம் மற்றும் கொடூர வன்செயல்கள் ஆகியவற்றுக்குப் பயந்தே நமது சகோதரர்கள் பலர் குடும்பம், குடும்பமாக மேற்கு நாடுகளுக்கு இடம்பெயர்ந்து, அங்கு புகலிடம் பெற்று, புலம்பெயர் தமிழர்களாயினர். நாட்டுக்குத் திரும்பும் உரிமை (Right to return) அவர்களுக்கு உண்டு. அது மறுக்கக் கூடியதல்ல.


இலங்கை இனப் பூசலுக்கு - ஏழு தசாப்த காலப் பிணக்குக்கு - காணப்படக் கூடிய அமைதி வழித் தீர்வு எதுவும், புகலிடத் தமிழர்களை ஒதுக்கி முன்னெடுக்கப்பட முடியாதது என்பதை சம்பந்தப்பட்ட தரப்பினர் உணர வேண்டும்.

புலம்பெயர்ந்தோருடன் கலந்துரையாடாமல் - அவர்கள் பக்க ஆதங்கங்கள், கருத்துகள், நிலைப்பாடுகள், குறைகள் போன்றவற்றைச் செவி மடுக்காமல் - காணப்படக் கூடிய தீர்வு எதுவும் நின்று, நிலைத்து, நீடித்து நிற்கப் போவதில்லை என்பது தெளிவு.

வடக்கு, கிழக்குத் தமிழர்களைப் பொறுத்தவரை புலம்பெயர் தமிழர்கள் அவர்களின் பிரிக்கப்படவே முடியாத அங்கம். பல வகைகளில் வடக்கு, கிழக்குத் தமிழர்களின் பெரும் பலமும், மூலமும் கூட அவர்களே. ஆகவே, அவர்களை விட்டு விட்டு - அல்லது புறம் ஒதுக்கி விட்டு - தீர்வு காண்பது என்பது துர்லபமே.

அதை, வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவுக்குப் புரியவைக்கும் இலக்குடனேயே மேற்படி தடை நீக்கம் பற்றிய கோரிக்கையை வடக்கு மாகாண முதலமைச்சர் முன்வைத்தார்.

வெளிவிவகார அமைச்சருக்கு அது புரிந்தால் சரி...!



# முன் அறிவிப்பின்றி மீண்டும் போராட்டத்தில் குதிப்போம்!

## தபால் தொழிற்சங்கங்கள் விடுவிக்கும் எச்சரிக்கை

கொழும்பு, ஜன.28

முன் அறிவித்தல் இன்றி தொழிற்சங்கப் போராட்டம் நடத்த நேரிடும் என்று தபால் தொழிற்சங்கங்கள் எச்சரிக்கை விடுத்துள்ளன.

தபால் ஊழியர்களின் பிரச்சினைகள் குறித்துப் பேச்சு நடத்த பிரதமர் மற்றும் ஜனாதிபதி ஆகியோர் ஒருவார காலத்துக்குள் நேரத்தை ஒதுக்கித்தர தவறினால் அறிவிக்காமல் தொழிற் சங்கப் போராட்டத்தை நடத்த நேரிடும் என்று தபால் தொழிற்சங்கங்கள் ஒன்றிய கூட்டமைப்பின் அழைப்பாளர் சின்தன பண்டார தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்று தொழிற் சங்கப் போராட்டம் தொடர்பாக எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இதன்போது அவர் மேலும் கூறியவை வருமாறு:-

''பேச்சு நடத்த நேரத்தை ஒதுக்கித் தருமாறு கோரி எழுத்து மூல கோரிக்கைகள் ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் அனுப்பி வைக்கப்படும்.

தபால் ஊழியர்களின் பிரச்சினைகளுக்குக் காத்திரமான தீர்வுத் திட்டம் ஒன்றை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அரசு உரிய நடவடிக்கை எடுக்கத் தவறினால் பணிப் புறக்கணிப்பு வரையிலான தொழிற் சங்கப் போராட்டங்களை முன்னெடுக்க நேரிடும். என்றார். (எ)

# இன்னும் நான்கு ஆண்டு காலத்தில் வனப் பகுதி 32வீதம் அதிகரிக்கும்

## பொலன்னறுவை வீட்டுக்கும் ஜனாதிபதி இல்லத்துக்கும் சூரியசக்தி மின்சாரமே என்கிறார் மைத்திரிபால

கொழும்பு, ஜன.28

நாட்டின் வனப்பிரதேசத்தை அடுத்த 4 வருடங்களில் 32 வீதமாக அதிகரிப்பதே எனது திட்டம் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

உலகிலுள்ள ஏனைய நாடுகளில் போன்று எமது நாட்டிலும் காலநிலை மாற்றங்களால் மனிதன் உள்ளிட்ட அனைத்து உயிரினங்களும் சவால்களுக்கு முகம்கொடுத்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பசுமை பாடசாலை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கொழும்பு ஆனந்தாக் கல்லூரியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள உயிர்வாயு, சேதனப் பசளை, பசுமை விவசாயம் மற்றும் சூரிய மின்சக்தித் திட்டத்தை நேற்று முற்பகல் ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

''பாடசாலையில் கிடைக்கும் பாடத்திட்டக் கல்வியைப் போன்றே அதற்கு வெளியிலிருந்து கிடைக் கும் அறிவு மற்றும் திறன்களை தமது நாளாந்த வாழ்க்கையுடன் தொடர்புபடுத்திக்கொள்ள வேண்டியதன் அவசியத்தை மாணவர்களுக்கு விளக்கிய ஜனாதிபதி, மன உறுதியுடனும் தன்னம்பிக்கையுடனும் செயற்படுவதற்கு மாணவர்கள் சிறு பராயம் முதல் பழகிக் கொள்ள வேண்டும்.

சக்திவலுவின் முக்கியத்துவத்தை அனைவரும் இன்று நன்றாக அறிந்துகொண்டுள்ளனர். பொலன்னறுவையில் உள்ள எனது வீடும் கொழும்பில் உள்ள ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லமும் சூரிய சக்திக்கு மாற்றப்பட்டு தேசிய மின்கட்டமைப்புக்கு மின்சாரத்தை வழங்கப்படுகிறது.

இந்தத்திட்டத்துக்குப் பங்களிக்கக்கூடிய பிள்ளைகள் தமது வீடுகளையும் அதற்குத் தயாராக்குவதன் அவசியத்தையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

பொருளாதார சுதந்திரத்தை அடைவது அரசியல்வாதிகளுக்கும் அரச அதிகாரிகளுக்கும் மட்டும் உரியதல்ல. பாடசாலை பிள்ளைகள் முதல் அனைத்துப் பிரஜைகளும் அதற்காகப் பங்களிப்பு வழங்க முடியும்.''-என்றார்.

இதேவேளை பசுமை உதயம் நிகழ்ச்சித்திட்டத்துக்கு பங்களித்தவர்களுக்கான விருதுகள் ஜனாதிபதியால் வழங்கப்பட்டன.

அமைச்சர்களான ரஞ்சித் சியாம்பலாபிட்டிய, மாலைதீவு, ஜேர்மனி ஆகிய நாடுகளின் தூதுவர்கள் மற்றும் ஆனந்தாக் கல்லூரியின் அதிபர் எஸ்.எம் கீர்த்திரத்ன, ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர் (எ)


டெங்கு நோய் இறப்புக்களைத் தடுப்போம்

நீர் தேங்கி இருக்கக் கூடிய கொள்கலன்களான யோகட் கோப்பைகள், ஒரு நாள் Cups (One Day Cups), டயர், சிரட்டை, ரின், போத்தல்கள், பொலித்தீன் பைகள் ஆகியவற்றைத் தேடி அழிப்போம் அல்லது குழியினுள் புதைப்போம்.

டெங்கு நுளம்புகள் பெருகுவதைத் தடுக்கும் பொறுப்பு எம் எல்லோருக்குமுள்ளது. அதனை நிறைவேற்றுவோம்.

தகவல் - சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை - யாழ்ப்பாணம்


## நாளை

29.01.2017
ஞாயிற்றுக்கிழமை
நட்சத்திரம் : அவிட்டம் பி.இ 12.06 வரை
திதி : துதியை பி.இ 6.28 வரை
சுபநேரம் : 09.36 – 11.06 வரை
இராகுகாலம் : 05.06 – 6.36 வரை

# ஊழலுக்கெதிரான துரித விசாரணைகளுக்கு தனியான நீதிமன்றங்கள் அமைப்பது அவசியம்

## அமைச்சர் அசோகா அபயசிங்க கூறுகிறார்

மஹிந்த ஆட்சியில் ஊழல் புரிந்தவர்களுக்கு எதிரானவிசாரணையைத் துரிதப்படுத்துவதற்கு ஏதுவாகத் தனியான நீதிமன்றம் அமைக்க வேண்டும். அல்லது இருக்கும் நீதிமன்றங்களில் சிலவற்றைத் தெரிவு செய்ய வேண்டும்.

-இவ்வாறு அமைச்சர் அசோகா அபயசிங்க தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

ஆட்சி மாற்றம் ஏற்பட்டு இரண்டு வருடங்கள் கடந்துள்ள போதிலும், மஹிந்த ஆட்சியில் ஊழல் புரிந்தவர்கள் இன்னும் தண்டிக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டு எம் மீது சுமத்தப்படுகின்றது. நாம் அவர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டுதான் இருக்கின்றோம்.

சுமார் 15 பேரளவில் இப்போது பிணையில் இருக்கின்றனர். அவர்களுக்கு எதிராகக் குற்றப்பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டதும் 2018 அல்லது 2019 இல் அவர்களுக்குத் தண்டனை வழங்கப்படலாம். அதை நீதிமன்றம் தீர்மானிக்கும்.

இந்த விசாரணையைத் துரிதப்படுத்துவதற்கு தனியான நீதிமன்றம் அமைக்கப்படவேண்டும். அல்லது இருக்கும் நீதிமன்றங்களில் ஒன்று அல்லது இரண்டைத் தெரிவு செய்து தொடர்ச்சியாக விசாரணைகளை மேற்கொள்ளவேண்டும்.

குற்றவாளிகள் தண்டிக்கப்படுவார்கள் என்று நாம் மக்களுக்கு வாக்குறுதி வழங்கியுள்ளோம். அந்த வாக்குறுதியை நாம் நிறைவேற்றுவோம். அதற்காக அரசியல் பழிவாங்கல்போல் அவசரமாகச் செய்ய முடியாது. நீதிமன்றங்களுக்கு அழுத்தம் கொடுத்தும் செய்ய முடியாது. எல்லாம் சட்டப்படியே இடம்பெறும். - என்றார். (ஐ)

# மைத்திரி ஆட்சியைக் கவிழ்க்க கறுப்பு பணத்தால்தான் முடியும்

## பிமல் ரத்நாயக்க எம்.பி. தெரிவிப்பு



கொழும்பு, ஜன.28

கறுப்புப் பணம் மூலம் தான் ஆட்சியைக் கவிழ்க்க முடியும். ஆட்சியை இப்போது கவிழ்ப்பதற்கு அதைத் தவிர வேறு வழி இல்லை.

-இவ்வாறு ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார். இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

இந்த ஆட்சி கவிழ்க்கப்பட வேண்டிய ஆட்சிதான் என்பதற்கு மாற்றுக் கருத்துக் கிடையாது. இது மக்கள் நேய ஆட்சி இல்லை. மஹிந்த ஆட்சியைப் போல் இந்த ஆட்சியிலும் ஊழல்கள் மலிந்து கிடக்கின்றன. மத்திய வங்கி பிணை முறி மோசடியில் தொடங்கி இப்போதுவரை ஊழல்கள் இடம்பெறுகின்றன.

மத்திய வங்கி பிரச்சினை ஒருபுறம், மறுபுறம், அரச சொத்துக்கள் தனியாருக்கு-வெளிநாடுகளுக்கு விற்கப்படுகின்றன. இதனால், இந்த அரசை விரட்டுவதற்கு மக்கள் முடிவு செய்துள்ளனர்.

இந்த அரசை விரட்டிவிட்டு ஆட்சியை மீண்டும் மஹிந்தவிடமா கொடுப்பது? இரண்டு அரசுகளும் ஊழல்மிக்க அரசுகள் தான். மாற்று அரசுஒன்றைஅமைப்பது தான் ஒரே வழி. அதற்காக அனைவரும் ஒன்றுபட வேண்டும்.

மஹிந்த கூறுகின்றமை போல் இந்த வருடம் இந்த ஆட்சியைக் கவிழ்க்க முடியாது. அப்படிக் கவிழ்ப்பதாக இருந்தால் நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவை. அப்படி இல்லை என்றால் கறுப்புப் பணத்தைக் கொண்டு எம்.பிக்களை விலைக்கு வாங்கித்தான் ஆட்சியை மாற்ற வேண்டும். இதை மஹிந்தவும் செய்யலாம்; ஆட்சியைத் தக்கவைக்க ரணிலும் செய்யலாம்.

இதைத் தவிர ஆட்சியைக் கவிழ்க்க வேறு வழி இல்லை. கடந்த காலங்களில் மஹிந்த செய்ததுதான் இது.- என்றார். (ஐ)

# கொக்குவிலில் இன்று ஆய்வரங்கு

கொக்குவில், ஜன.28

தேசிய கலை இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில் ஒக்ரோபர் புரட்சியை முன்னெடுக்கும் முகமாக கலை இலக்கிய ஆய்வரங்குத் தொடரின் முதலாவது ஆய்வரங்கு 'மக்கள் இலக்கிய வரிசையில் மாக்சிம் கார்க்கியின் தாய் நாவல்' என்ற தலைப்பில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கொக்குவில் சந்தியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

இந்த ஆய்வரங்கில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ச)


**மணமக்கள் விபரம்**

☎0114320017- 8
திங் - வெள் : 08.30 a.m - 05.00 p.m
சனி : 08.30 a.m - 02.00 pm

| மணமகன் விபரம் | மணமகள் விபரம் |
| --- | --- |
| **7029 \| ப**<br>1979 \| பருத்தித்துறை \| 169cm<br>Teacher \| இலங்கை<br>உத்தராடம்(மகரம்) \| கி.பா: 56 \| செவ்:7 | **6014 \| வே**<br>1984 \| காரைநகர் \| 126 cm<br>Account Assistant \| இலங்கை<br>பூரம் (சிம்மம்) \| கி.பா: 15 |
| **3725 \| வ**<br>1974 \| கிளிநொச்சி \| 163 cm<br>Teacher \| இலங்கை<br>கேட்டை (விருச்சிகம்) \| கி.பா: 16 \| செவ்:4 | **5195 \| வே**<br>1978 \| நல்லூர் \| 162 cm<br>Teacher \| இலங்கை<br>சதயம் (கும்பம்) \| கி.பா: 30 \| செவ்: 4 |
| **4162 \| வே**<br>1973 \| யாழ்நகர்<br>Driver \| இலங்கை<br>கிறிஸ்தவம் \| 169cm | **4612 \| ப**<br>1978 \| அல்வாய் \| 162 cm<br>Teacher \| இலங்கை<br>சதயம் (கும்பம்) \| கி.பா: 51 \| செவ்: 1 |
| **6566 \| க**<br>1969 \| கண்டி<br>Vehicle Business \| இலங்கை<br>கிறிஸ்தவம் \| 152 cm | **6370 \| வே**<br>1976 \| நெல்லியடி \| 165 cm<br>Lecture \| இலங்கை<br>அனுஷம் (விருச்சிகம்) \| கி.பா: 43 |
| **7272 \| வே**<br>1969 \| கொடிகாமம் \| Divorced<br>Clearing \| இலங்கை<br>ஆய்யிலியம் (கடகம்) \| 168 cm | **5896 \| வே**<br>1975 \| வட்டுக்கோட்டை \| 167 cm<br>Teacher \| இலங்கை<br>சுவாதி (துலாம்) \| கி.பா: 42 |

அருந்ததி
இணைய திருமண சேவை
www.arunthathee.com | 077 716 45 24
480 /2c, காலி வீதி, வெள்ளவத்தை 011 406 32 82 | 20, கே.கே.எஸ் வீதி, கொக்குவில் 021 492 75 27


# மெய்வன்மைப் போட்டிகள்

கோண்டாவில் றோ.க.த.க பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் க.நித்தியானந்தன் தலைமையில் இடம்பெறும். முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் கலந்து கொள்வார். (ச)

★ ★ ★

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை கல்லூரி அதிபர் தி.வரதன் தலைமையில் கல்லூரி மைதானத்தில் காலை 9 மணிக்கு இடம் பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக பிரான்ஸ் பழைய மாணவர் சங்கத் தலைவர் திருமதி கமலாதேவி முருகானந்தமும், சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்வி வலய உடற் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கோசலை குணபாலசிங்கமும் கலந்து கொள்வர்.

★ ★ ★

தென்மராட்சி மட்டுவில் சாந்தநாயகி வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் திருமதி ஜெ.தேவேஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ளன. பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் அ.பரஞ்சோதியும் சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் அ.மனோ ரஞ்சிதனும் கலந்து கொள்வர். (ஐ-21)

★ ★ ★

புற்றளை மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் ஆ.சிவநாதன் தலைமையில் இடம்பெறும். பிரதம விருந்தினராக பழைய மாணவரும், சட்டத்தரணியுமான நாகலிங்கம் விஷ்ணுகாந்தன் கலந்து கொள்வார்.

★ ★ ★

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் எஸ். கிருஷ்ணகுமார் தலைமையில் இடம்பெறும்.


edexcel PEARSON CIOB RICS



INTAKE NOW ON

UGC அங்கீகாரம் கொண்ட
UK Degree
பட்டப்படிப்புகளை
இலங்கையிலேயே
பூர்த்தி செய்து கொள்ளும் வாய்ப்பு...

HND — BUSINESS MANAGEMENT MARKETING | HRM — Leading to BA (Hons) from the UK Universities
HND — QUANTITY SURVEYING — Leading to BSc (Hons) from the UK Universities
HND — BIOMEDICAL SCIENCE BIOTECHNOLOGY — Leading to BSc (Hons) from the UK Universities
HND — CIVIL ENGINEERING — Leading to BEng / BSc (Hons) from the UK Universities
HND — TELECOM ENGINEERING — Leading to BEng (Hons) from the UK Universities
HND — COMPUTING — Leading to BSc (Hons) from the UK Universities
HND — ELECTRICAL & ELECTRONIC ENGINEERING — Leading to BEng / BSc (Hons) from the UK Universities
LLB — LAW — Leading to LLB (Hons) from the UK Universities

FOUNDATION PROGRAMMES
• Diploma in IT (DIT) • Diploma in CAD & BS • BMAc • Certificate in English • Diploma in English • National Dip. in Engineering

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

Jaffna Campus, 16, Point Pedro Road, Jaffna.
City Campus, 256, Galle Road, Colombo 6. T: 011 236 4459
Mount Campus, 54, Galle Road, Mt. Lavinia. T: 011 272 8082
Kandy Campus, 344, Peradeniya Road, Kandy. T: 081 222 4731
JAFFNA 077 710 2131 / 077 960 3753 — COLOMBO 077 283 4595
Batti Campus, 294, 1/4, Trinco Road, Batticaloa. T: 065 222 8451
Wayamba Campus, 103, Dambulla Road, Kurunegala. T: 037 223 3339
18 YEARS — ISO 9001:2008
Corporate Office, 32, Dharmarama Road, Colombo 6. T: 0112597217
Kalmunai Campus, 392/1, Main Street, Kalmunai. T: 067 222 6899

Platinum Partner No.1 BTEC Centre in Sri Lanka by Pearson UK @ BTEC Higher Education Forum 2016
Educational Institute with Best Academic & Industry Interface by South Asian Partnership Summit & Business Awards 2016
Academic Impact Winner by QSI - UK 2016
Ranked as No.1 Higher Education Provider (Private Sector) - Survey by LMD 2014
BTEC Gold Partner by Pearson - UK 2013
Performance Excellence Award by Pearson - UK 2011
Fastest Growing BTEC Centre by Pearson - UK 2010

HOTLINE : 021 221 9910 | Visit us on Facebook | info@bcas.lk | www.bcas.lk

## கிழக்கு மாகாணத்தில் அடைமழை தொடர்கிறது

# குளங்கள் உடைப்பால் வீதிகளில் வெள்ளம்: போக்குவரத்துத் தடை; மக்கள் இடம்பெயர்வு;

### சில இடங்களில் இயந்திரப் படகுச் சேவை





சீரற்ற காலநிலை காரணமாக இலங்கையின் பலபகுதிகளிலும் பரவலாக மழை பெய்து வருகிறது. இந்நிலையில் கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள அடைமழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. பல இடங்களில் பிரதான வீதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. அத்துடன் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளது. மேலும், சில இடங்களில் மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர்.

**250 குடும்பங்கள் மட்டக்களப்பில் இடம்பெயர்வு**

மட்டக்களப்பு ஆயித்திய மலை கிராமசேவகர் பிரிவுக்குட்பட்ட கற்பானைக் கிராமத்தில் அமைந்துள்ள மூன்று சிறிய குளங்கள் நேற்று வெள்ளிக்கிழமை உடைப்பெடுத்துள்ளன. இதனால் ஆயித்தியமலைக்கும், கரடியனாற்றுக்குமான போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது. மேலும் கற்பானை, பள்ளச்சேனை மற்றும் மணிபுரம் ஆகிய இடங்களைச் சேர்ந்த 250 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இடம் பெயர்ந்து மணி புரம் விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் தங்கியுள்ளன. இன்னும் சில குடும்பங்கள் கற்பானை பாலர் பாடசாலையில் தங்கியுள்ளன.

**கிரான் பிரதான வீதி போக்குவரத்துத் தடை**

மட்டக்களப்பு கிரான் - தொப்பிகல பிரதான வீதி வெள்ளத்தில் மூழ்கியதால் ஐந்து கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த சுமார் 1500 குடும்பங்களின் தரைவழிப் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது.

இதை அடுத்து பொது மக்களின் போக்குவரத்துக்காக இயந்திரப் படகுச் சேவைகள் கிரான் பிரதேச செயலகத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கிரான் புலிபாய்ந்தகல் பகுதிகளை நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் நேரில் சென்று பார்வையிட்டுள்ளார். மக்களுடன் கலந்துரையாடியதுடன், நிவாரணங்களை வழங்குவதற்கும் ஏற்பாடுகளை அவர் செய்துள்ளார்.

**40 குடும்பங்கள் அம்பாறையில் இடம்பெயர்வு**

அம்பாறை மாவட்டத்தில் கடந்த இரண்டு நாள்களாகப் பெய்து வரும் அடை மழை காரணமாக அம்பாறை, திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தாழ்நிலப் பிரதேசங்களில் ஏற்பட்ட வெள்ளத்தால் 40 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 300 பேர் இடம் பெயர்ந்துள்ளனர் என திருக்கோவில் பிரதேச செயலாளர் எஸ்.ஜெயராஜன் நேற்று வெள்ளிக்கிழமை தெரிவித்தார்.

திருக்கோவில் முதலாம் பிரிவு ,விநாயகபுரம் மற்றும் காஞ்சிரங்குடா ஆகிய பிரதேசங்களில் வாழ்ந்த மக்களே இடம்பெயர்ந்து உறவினர்களின் வீடுகளில் தங்கியுள்ளனர். இவர்களுக்கான உலர் உணவுகள் வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.


**வீடுகளுக்குள் வெள்ளம்**

அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு மற்றும் அட்டாளைச்சேனை, திருக்கோவில், பொத்துவில், கல்முனை, நிந்தவூர் உள்ளிட்ட கரையோரப் பிரதேசங்களில் தொடர்ச்சியாக மழை பெய்து வருகின்றது. சில பாடசாலைகளில் மாணவர்களின் வரவின்மையால் கல்வி நடவடிக்கைகளும் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

அம்பாறை பிரதான வீதி, கல்முனை பிரதான வீதி உள்ளிட்ட அனைத்து வீதிகளும் வெள்ளத்தில் மூழ்கி யுள்ளன. அத்துடன் போக்குவரத்துகளும், மக்களின் அன்றாட நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டுள்ளன. திருக்கோவில் பிரதேசத்தில் தாழ் நிலப்பகுதிகளில் சில வீடுகளுக்குள் நீர் உட்புகுந்துள்ளது. (ச)

## 'போதைப் பொருள் பாவனையை ஒழிப்போம்':

# ஏறாவூரில் நேற்று விழிப்புணர்வு ஊர்வலம்



மட்டக்களப்பு,ஜன.28

நாட்டில் அதிகரித்து வரும் போதைப் பொருள் பாவனையைக் கட்டுப்படுத்தி மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பேரணி ஒன்று நேற்று வெள்ளிக்கிழமை ஏறாவூர் நகரில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு ஏறாவூர் சுகாதார வைத்திய அதிகாரிப் பிரிவால் ஏற்பாடு செய்யப் பட்டிருந்த இந்தப் பேரணியில் ஏறாவூர் சுகாதார வைத்திய அதிகாரிப் பிரிவின் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும குடும்பநல மருத்துவ மாதுக்கள், கிராம சேவையாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். ஏறாவூர் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திலிருந்து ஆரம்பித்த பேரணி புன்னைக் குடா வீதி வழியாகச் சென்று முடிவடைந்தது.

சகல விதமான போதை தரும் பொருள்களையும் நுகர்வதிலிருந்து தடுக்கும் விதமான விழிப்பூட்டலின் ஒரு பகுதியாக இந்தப் பேரணி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது என ஏறாவூர் சுகாதார வைத்திய அதிகாரி கலையரசி துரைராஜசிங்கம் தெரிவித்தார். (ச)

# கொக்கட்டிச்சோலை படுகொலை 30 ஆம் ஆண்டு நினைவு இன்று

மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை படுகொலை சம்பவத்தின் 30 ஆம் ஆண்டு நினைவு தினம் இன்றாகும். கடந்த 1987 ஆம் ஆண்டு இடம்பெற்ற படுகொலை சம்பவத்தின் 30 ஆண்டுகள் பூர்த்தி அடைந்து விட்டன.

கடந்த 1987 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 28 ஆம் திகதி கொக்கட்டிச்சோலை இறால் பண்ணையில் பணியாற்றிய சுமார் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

தமிழர் தாயகத்தை உலுக்கிய முக்கிய சம்பவங்களுள் ஒன்றான கொக்கட்டிச்சோலை படுகொலைக்கு,சர்வதேச மனித உரிமைகள் அமைப்பு உள்ளிட்ட பல அமைப்புகள் கடும் கண்டனம் வெளியிட்டிருந்தன. (ச)

## யுத்தத்தில் பாதிக்கப்பட்ட

# படையினரின் குடும்பங்களுக்கு விசேட அடையாள அட்டைகள்



மட்டக்களப்பு,ஜன.28

கிழக்கு மாகாணத்தில் கடந்த யுத்தத்தின்போது உயிரிழந்த, அங்கவீனமடைந்த பாதுகாப்புப் படையினரின் குடும்பங்களுக்கு விசேட அடையாள அட்டைகளை வழங்குவதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது என ரணவிரு அதிகார சபையின் தலைவி அனோமா பொன்சேகா தெரிவித்தார்.

மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் யுத்தத்தின்போது உயிரிழந்த, அங்கவீனமடைந்த பாதுகாப்புப் படையினரின் பிள்ளைகள் மற்றும் குடும்பங்களுக்குப் பல்வேறு உதவிகள் வழங்கும் நடவடிக்கை, ரணவிரு அதிகார சபையின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு டேபா மண்டபத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது.

இதன்போது 500 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் மற்றும் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன.

அத்துடன் யுத்தத்தின்போது உயிரிழந்த, அங்கவீனமடைந்த பாதுகாப்புத் தரப்பினரின் குடும்பங்களுக்கு வாழ்வாதார ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ், மட்டக்களப்பு லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன் தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டன. (ச)



திருகோணமலை மாவட்டக் கைத்தொழில் மற்றும் வர்த்தக சம்மேளனத்தின் 2015- 2016 ஆம் ஆண்டுகளுக்கான தொழில் முயற்சிக்கான விருது வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் வியாழக்கிழமை திருகோணமலை இந்து கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. வர்த்தக சம்மேளன தலைவர் கே.குலதீபன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க கலந்து கொண்டனர். தொழில் முயற்சிக்கான விருதுகள் வழங்கப்பட்டமையுடன், கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன. (ச)

# மாணவர்களுக்கு உரிய கல்வி கிடைக்கவில்லை என்றால் எந்தவொரு விடயத்திலும் பயனில்லை என்கிறார் ஜனாதிபதி

கொழும்பு, ஜன.28

மாணவர்களுக்கு உரிய கல்வி கிடைக்கவில்லை என்றால் எந்தவொரு விடயத்திலும் பயனில்லை என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.



நாட்டின் கல்வித்துறையில் சீர்திருத்தங்கள் மற்றும் புதிய முன்மொழிவுகளை உள்ளடக்கிய கல்வி தொடர்பான தேசிய கொள்கை முன்மொழிவுகள் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் வைத்து நேற்றுமுன்தினம் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கல்விக்கொள்கைகள் தொடர்பில் அரசுக்கு ஆலோசனை வழங்குவதற்காக அமைக்கப்பட்டுள்ள தேசிய கல்வி ஆணைக்குழுவும் தேசிய கல்வி நிறுவனமும் இணைந்து ஆய்வுகளை மேற்கொண்டன.

இந்த ஆய்வின் அடிப்படையில் தேசிய கொள்கை சீர்திருத்தங்களை மேலும் பலப்படுத்தி அதனைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லவும் புதிதாக உருவாகும் தேவைகள் மற்றும் சவால்களுக்கு முகங்கொடுக்கக் கூடியவகையிலும் இந்த முன்மொழிவுகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

மேற்படி நிகழ்வில் ஜனாதிபதி மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எமது கல்விக்கொள்கைகளை நோக்கும்போது பாடத்திட்டங்களுக்கு மேலதிகமாகப் பிள்ளைகள் சுயமாகச் செயற்படக்கூடிய வகையிலான கொள்கைகள் உரிய முறையில் நடைமுறைப்படுத்தப் படவில்லை.

மாணவர்களின் ஆக்கத்திறன் மற்றும் திறமைகளுக்கேற்ற சந்தர்ப்பங்கள் கல்விக் கொள்கைகளில் நடைமுறைப் படுத்தப்பட வேண்டியது அவசியமாகும். கல்வித்துறையில் மனித வளங்களைப் போன்று பௌதிக வளங்களும் சமமான முறையில் பகிரப்படாதுள்ளமை தொடர்பான பிரச்சினை இன்னும் தீர்க்கப் படவில்லை. அடிப்படை வசதிகள் கூட இல்லாத பல பாடசாலைகள் இன்றும் நாட்டில் இருக்கின்றன. இது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும்.

அதேபோன்று ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையின் போட்டித்தன்மை மற்றும் அப்பரீட்சை குறித்த பெற்றோர்களின் மனநிலை காரணமாக பிள்ளைகள் அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்கின்றனர். எனவே, புதிய கல்விக் கொள்கைகளைத் தயாரிக்கும் போது இது தொடர்பாக விரிவாகக் கவனம் செலுத்ததப்பட வேண்டும். தேசிய கல்வி ஆணைக்குழு, தேசிய கல்வி நிறுவனம் மற்றும் மாகாணக் கல்வி நிறுவனம் ஆகியன குறைந்தது ஆறு மாதங்களுக்கு ஒரு முறையேனும் ஒன்றுகூடி புதிய மாற்றங்கள் தொடர்பாக கலந்துரையாட வேண்டியது அவசியமாகும்.

இந்த நிகழ்வில் ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ. அபேகோன், தேசிய கல்வி ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் லக்ஷ்மன் ஜயதிலக்க, தேசிய கல்வி நிறுவனத்தின் பணிப்பாளர் கலாநிதி ஜயந்தி குணசேகர ஆகியோரும் அந் நிறுவனங்களின் உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டுள்ளனர். (க)

# தமிழ் இளைஞர்களின் கடத்தல் சம்பவம்; கடற்படை புலனாய்வாளர்கள் விரைவில் கைது!

கொழும்பு, ஜன.28

கொழும்பில் இரண்டு தமிழ் இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் போகச் செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாகக் கடற்படையின் முன்னாள் புலனாய்வுப் பணிப்பாளர் றியர் அட்மிரல் ஆனந்த குருகே மற்றும் லெப். கொமாண்டர் சம்பத் தயானந்த ஆகிய இரு அதிகாரிகள் விரைவில் கைது செய்யப் படவுள்ளனர்.

குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரி நிசாந்த சில்வா, நேற்று முன்தினம் கொழும்பு மேலதிக நீதிவான் நீதிமன்றத்தில் இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த 2009ஆம் ஆண்டு வடிவேல் லோகநாதன் மற்றும் இரத்தினசாமி பரமானந்தன் ஆகியோர், வான் ஒன்றுடன் கடத்திச் சென்று காணாமற் போகச் செய்யப்பட்டனர்.

இந்தச்சம்பவம் தொடர்பான வழக்கு நேற்று முன்தினம் கொழும்பு மேலதிக நீதிவான் நீதிமன்றத்தில் இடம்பெற்றது.

இந்த வழக்கில் குற்றப் புலனாய்வு அதிகாரி நிசாந்த பீரிஸ் அறிக்கை சமர்ப்பித்தார்.

அந்த அறிக்கையில் அவர் -

கடந்த 2009ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதலாம் திகதி வெள்ளவத்தை மற்றும் கொட்டாஞ்சேனைப் பகுதிகளில் வைத்து கடத்தப்பட்ட வடிவேல் லோகநாதன் மற்றும் இரத்தினசாமி பரமானந்தன் ஆகியோர் காணாமற் போயிருந்தனர்.

இந்தக் குற்றச்சாட்டில் ஏற்கனவே, லெப்.கொமாண்டர் தம்மிக அனில் மாபா கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த இரண்டு பேரும் கடத்தப்பட்ட போது. அவர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்ட வான், வெலிசறை கடற்படை முகாமில் 72 பாகங்களாகப் பிரிக்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும், லெப்.கொமாண்டர் தம்மிக அனில் மாபா சார்பில் முன்னிலையான சட்டத்தரணி, இந்த வானில் குண்டுகள் மறைத்து வைக்கப் பட்டிருந்தன எனக் கிடைத்த தகவலை அடுத்தே வான் துண்டு துண்டாக வெட்டப் பட்டு சோதனையிடப்பட்டது என்று கூறினார்.


அதனை குற்றப் புலனாய்வு அதிகாரி நிராகரித்தார். அவ்வாறு சோதனையிடுவதற்கு கடற்படைக்குஅதிகாரமில்லை என்றும், பொலிஸார் மூலம் நீதிமன்றத்தின் அனுமதி பெற்று, குண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவே அதனை செய்திருக்க முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். இதையடுத்து, லெப்.கொமாண்டர் தம்மிக அனில் மாபாவை தொடர்ந்து தடுத்து வைக்க நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

# ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சர்களை பின்தொடர்கின்றனர் புலனாய்வுப் பிரிவினர்!

*முன்னாள் ஜனாதிபதி மஹிந்த கூறுகிறார்*

கொழும்பு, ஜன.28

ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சர்களை புலனாய்வுப் பிரிவினர்பின்தொடர்கின்றனர் என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.



நாரஹேன்பிட்டி அபயாராமய விஹாரையின் பீடாதிபதி முரத்தட்டுவே ஆனந்த தேரரின் 74 ஆவது பிறந்ததினத்தை முன்னிட்டு நடைபெற்ற நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவும் பங்கேற்றிருந்தார்.

இந்த நிகழ்வின் பின்னர் ஊடகவியலாளர்களிடம் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்தசிலதினங்களாகஐக்கிய தேசியக்கட்சியின் அமைச்சர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களைப் புலனாய்வுப் பிரிவினர் பின் தொடர்கின்றனர். என்னுடன் பேச்சு நடத்திய அமைச்சர்கள் தொடர்பில்விசேடகண்காணிப்பு மேற்கொள்ளப் படுகின்றது.

ஆளும் கட்சியில் அங்கம் வகிப்போரே என்னிடம் வந்து கூறுகின்றார்கள். அவர்கள் தமக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்றும் கூறினார்கள். இதன் காரணமாகவே நுகேகொடை கூட்டத்தில் பங்கேற்க வேண்டாம் என நாம் கூறியிருந்தோம்.

ஆளும்கட்சியின் உறுப்பினர்கள் எங்கு செல்கின்றார்கள் என்பது புலனாய்வுப் பிரிவினர் ஊடாகக் கண்காணிக்கப்படுகின்றது. அரசாங்கம் கடுமையாக அச்சமடைந்துள்ளது.

நாட்டில்தற்போது நிதி அமைச்சர் ஜனாதிபதியாகவும், ஜனாதிபதி நிதியமைச்சராகவும் செயற்படுகின்றார்கள்.

அராசாங்கம் அர்ஜூன் அலோசியஸை பாதுகாத்து வருகின்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க)

# மகஸின், அநுராதபுர சிறைகளில் அரசியல் கைதிகள் உண்ணாவிரதம்





கொழும்பு, ஜன.28

கொழும்பு மகஸின் மற்றும் அநுராதபுர சிறைச்சாலைகளில் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் நேற்றுமுன்தினம் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர் என்று சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தமது வழக்குகளை விரைவு படுத்த வேண்டும் என்று கோரியே இவர்கள் இந்தப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

விசாரணையின்றித் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை விடுவிக்க வேண்டும் அல்லது வழக்குத் தாக்கல் செய்ய வேண்டும் என்று முன்னர் உண்ணாவிரதப் போராட்டங்கள் அரசியல் கைதிகளால் முன்னெடுக்கப் பட்டன.

எனினும்,தற்போது தமது வழக்குகள் இழுத்தடிக்கப் படுகின்றன என்று அரசியல் கைதிகள் கவலை வெளியிட்டுள்ளனர். (க)



சர்வதேச சுங்க தினத்தை முன்னிட்டு சுங்க திணைக்களத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் ஜனாதிபதி, நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகியோர் கலந்துகொண்டனர்.

# தற்கொலைகள் குறைய உதவுவோம்!

மாவை நித்தியானந்தன்
(நிறுவுநர், கை கொடுக்கும் நண்பர்கள், யாழ்ப்பாணம்.)

தற்கொலைச் செய்தியொன்றைப் படிக்கும் போதும் கேட்கும் போதும், தம் மனம் நெகிழாதவர் எவரும் இலர். தற்கொலையானது நேரடி உறவினர்களைப் பெருமளவு பாதிக்கும் அதேவேளை, சுற்றம் சூழலில் உள்ளவர்களையும் சமூகத்தையும் கூடவே பாதிக்கிறது. தற்கொலை பற்றிய சில அடிப்படை உண்மைகளைப் புரிந்துகொள்வதன் மூலம், சமூகத்திலுள்ள எல்லோருமே தற்கொலைகளைக் குறைக்க உதவ முடியும்.

தற்கொலைகள் ஏன் நடக்கின்றன? ஒரே விதமான பிரச்சினையால் பாதிக்கப்படும் இருவரில் ஒருவர் தற்கொலை செய்கையில் மற்றவர் அதே வழியை நாடாதிருப்பதேன்?

பரீட்சையில் தோல்வி கண்டு மனமுடைந்திருக்கும் ஒரு மாணவனை உதாரணமாக எடுத்துக் கொள்வோம். சிரமப்பட்டுப் படித்திருந்தாலும் கூட, அந்த மாணவன் கேட்கும் வார்த்தைகள் இவ்வாறு இருக்கக்கூடும்:

*''நீ படித்தது போதாது''*

*''கஷ்டப்பட்டுப் படித்தால் தானே பாஸ் பண்ணலாம்''*

*''நண்பர்களுடன் சுற்றித் திரிந்த நேரத்தில் படித்திருக்கலாம்''*

*''ரீவீ பார்த்தாய். இப்ப விளங்குதோ?''*

*''எல்லாம் அளந்த அளவு தான்''*

புறநடைகள் இருந்தாலும், ஏராளமான மாணவர்கள் இத்தகைய சூழலுக்கு முகம் கொடுப்பது உண்மை. இவர்களில் பெரும்பாலானவர்களுக்குத் தமது தோல்வியைச் சகித்துக் கொள்ளும் பலம் இருக்கும் அதே வேளை, ஒரு சிலர் மட்டும் அவ்வாறன்றி மனச் சோர்வுக்கு உள்ளாகின்றமையும் தற்கொலையை நாடுவதையும் காண்கிறோம்.

இன்னோர் உதாரணமாக, கடன் பழுவால் அல்லற்படும் ஒரு தந்தையை எடுத்துக் கொள்வோம். இவர் எத்தகைய வார்த்தைகளைக் கேட்கிறார்?

*''இவ்வளவு கடனுக்குள் எப்படித் தான் மூழ்கினாய்?''*

*''கடன் எடுக்கும் போது தெரியாதோ, திருப்பிக் கட்ட வேணுமென்று?''.*

*''மனைவி, பிள்ளையைக் காப்பாற்ற வேண்டியவன் நீ''*


*''நானென்றால் பொறுப்பில்லாமல் இப்படிப் போய் மாட்டுப்பட்டிருக்க மாட்டேன்''*

*''உன்னைப் பார்க்கவே பரிதாபமாக இருக்கு''*

*''கஷ்டப்பட்டு உழையப்பா...''*

கடன் பழுவின் பிடிக்குள் சிக்கிக்கொள்ளும் தந்தையர்களில் பலர் எப்படியோ அந்த நெருக்குதல்களுக்கு முகம் கொடுத்துக் கொண்டு தொடர்ந்து வாழ்க்கையை நடத்தும் அதேவேளையில், இன்னும் சிலர் அதைத் தாங்க முடியாது தற்கொலைப் பாதையை நாடுகின்றனர்.

இந்த இரு தரப்பினருக்கும் இடையில் உள்ள வித்தியாசம் என்ன? அதுவே ''தாங்கும் சக்தி'' எனப்படுவது. இது ஆளுக்காள் வேறுபடுகிறது. ஒருவருடைய மன வலியும் வேதனையும் அவரது தாங்கும் சக்தியை மிஞ்சும் போது, அந்த வலியிலிருந்து விடுபடும் ஒரு வழியாகத் தற்கொலையை அவர் நாடுகிறார். தாங்கும் சக்தி குறைவாக உள்ளவர்கள், ஏனையோரை விட விரைவில் மனமுடைந்து போகின்றனர். தற்கொலை என்பது இறப்பதற்கான ஒருவரது விருப்பம் அல்ல என்பதை நாம் நன்கு விளங்கிக் கொள்ளல் வேண்டும். மாறாக, அது மன வலியிலிருந்து தப்பிக் கொள்வதற்கான ஒரு மார்க்கமாகவே உள்ளது.





> *தற்கொலை என்பது இறப்பதற்கான ஒருவரது விருப்பம் அல்ல என்பதை நாம் நன்கு விளங்கிக் கொள்ளல் வேண்டும். மாறாக, அது மன வலியிலிருந்து தப்பிக் கொள்வதற்கான ஒரு மார்க்கமாகவே உள்ளது.*

எனவே, ஒருவரது தாங்கும் சக்தி அதிகரிக்க உதவுவதன் மூலம், அவரைத் தற்கொலையிலிருந்து காப்பாற்ற முடியும். அவரைச்சுற்றியுள்ளவர்களும் சமூகமும் இதை நன்கு செய்ய முடியும். எவ்வாறு?

முதலில், முன் குறிப்பிட்ட உதாரணங்களில் உள்ளது போன்ற, தன்னம்பிக்கையையும் சுயமதிப்பையும் குறைக்கும் வார்த்தைகளைத் தவிர்த்தல் வேண்டும். மனதில் தாங்க முடியாத பாரத்தையும் துயரத்தையும் சுமக்கும் ஒருவருக்கு உடனடியாகத் தேவைப்படுவது அவரது கதையை உண்மையான அக்கறையோடும், உள்ளுணர்வோடும், பொறுமையோடும் கேட்கத்தக்க ஒருவரே. மனதால் பாதிக்கப்பட்ட பலர் தாம் தனிமைப்பட்டுப் போய் விட்டனர் என்றும், தனித்து விடப்பட்டுவிட்டனர் என்றும் நினைக்கிறார்கள். அவர்களைச் சுற்றி ஏராளம் பேர் இருந்தபோதிலும் கூட, அவர்களுக்கு இந்த உணர்வே ஏற்படுகிறது. தம்மில் எவருக்கும் அக்கறை இல்லை என அவர்கள் நம்பத் தொடங்குகின்ற போது, தற்கொலை எண்ணங்களும் கூடவே வளர ஆரம்பிக்கின்றன.

எனவே, தாங்க முடியாத மன வலியினாலும் துயராலும் அல்லற்படும் ஒருவருக்கு, அவரைச் சுற்றியுள்ளவர்களும் சமூகமும் செய்யக் கூடிய மிக அடிப்படையான உதவி, அவர் சொல்வதை அக்கறையுடன் செவிமடுத்தலாகும். இந்த பண்பு எமது சமூகத்தில் அருகிவிட்டதெனப் பலரும் அபிப்பிராயப்படுகின்றனர். செவிமடுப்பதற்குப் பதிலாக, புத்திமதி சொல்லல், கண்டித்தல், எடைபோடுதல், தீர்வு வழங்கல் போன்றவற்றையே பலரும் அவசரப்பட்டுச் செய்கின்றனர்.

பாதிக்கப்பட்டவருக்கு இவை எவ்விதத்திலும் உதவமாட்டா என்பது மட்டுமன்றி, தமக்கு எவருமில்லை என்ற உணர்வுக்கே அவரை இட்டுச் செல்லும். ஒருவரை அவராகவே ஏற்றுக்கொள்வதும், அவரது பிரச்சினைக்கான தீர்வை அவரே கண்டறிய விடுவதும் முக்கியமானவை. அதேவேளை, செவிமடுப்பதன் மூலம் நாம் வழங்கும் உணர்வுரீதியான ஆதரவு அவரது தாங்கும் சக்தியை வலுவடையச் செய்யும். வாழ்க்கையை நம்பிக்கையுடன் பார்க்கவும், தீர்வுகளைத் தேடவும் அவரை உற்சாகப் படுத்தும்.

செவிமடுத்தல் என்பது ஒரு தனிக் கலை. இதை அவசரப்பட்டுச் செய்ய முடியாது. நாம் யாருக்கு உதவ விரும்புகிறோமோ, அவருக்காக எமது நேரத்தை அர்ப்பணிக்கத் தயாராக இருக்க வேண்டும். எமது சொந்த அபிப்பிராயங்களுக்கு எவ்வித முக்கியத்துவமும் கிடையாது; அவர் சொல்வதை நாம் அக்கறையுடன் கேட்பதே முக்கியம். தற்கொலைகளின் எண்ணிக்கை குறைய வேண்டுமானால், எமது சமூகம் இதைச் செய்யத் தயாராதல் வேண்டும். கை கொடுக்கும் நண்பர்கள் போன்ற தொண்டு நிறுவனங்கள் செய்துவரும் பணியும் இது சார்ந்ததே. ★

## தவணை அடிப்படையில் கடன் செலுத்த வேண்டியுள்ளது

### நிதி அமைச்சு கூறுகிறது

2019 ஆம் ஆண்டு வரையான 586 பில்லியன் ரூபா கடனைத் தவணையாகச் செலுத்த வேண்டி உள்ளது என்று நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தத் தொகை சுதந்திர இலங்கையில் ஒரு வருடத்தில் செலுத்த வேண்டிய அதிக கடன் தொகையாகக் கருதப் படுகிறது என்று நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்டுள்ள விசேட அறிக்கை மூலம் அமைச்சு இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

2005 ஆம் ஆண்டில் இருந்து 2014 ஆம் ஆண்டு வரையில் இலங்கையின் முழுமையான கடன் சுமை 233 வீதமாக அதிகரித்துள்ளது.

நிதி அமைச்சு கூறுவதற்கமைய 2014 ஆம் ஆண்டு வரையில் 7 ஆயிரத்து 391 பில்லியன் ரூபா வரை கடன் அதிகரித்துள்ளது.

2005 ஆம் ஆண்டு வரையில் 2 ஆயிரத்து 222 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்ட இலங்கை முழுமையான கடன் 5 வருடங்களுக்குள் அதாவது 2010ஆம் ஆண்டு வரையில் 4 ஆயிரத்து 590 பில்லியன் ரூபாவாகப் பதிவாகியுள்ளது.

இந்த நிலைமையைத் தொடர்ந்து இலங்கை வெளிநாடுகளுக்குச் செலுத்த வேண்டிய கடன் தவணை மற்றும் வட்டி வருடத்துக்கு வருடம் அதிகரித்துக்காணப்படுகின்றது.

அதன் கீழ் 2016ஆம் ஆண்டு வெளிநாட்டுக்கு 269 பில்லிய ரூபா பணம் செலுத்த வேண்டி இருந்தது. 2019ஆம் ஆண்டு வரையில் அந்தக் கடன் பணம் இரண்டு மடங்காக அதிகரித்து 586 பில்லியன் ரூபாவாகியுள்ளது. இந்தக் கடனைத் தவணையாகவே செலுத்த நேரிடும்.- என்றுள்ளது. (ஐ)

## இலங்கையின் வறட்சியான காலநிலை பல பில்லியன் நஷ்டத்தை ஏற்படுத்தும்

### சுட்டிக்காட்டியது ஐ.நா. அமைப்பு

இலங்கையில் காணப்பட்ட வறட்சியான காலநிலையால் பல பில்லியன் ரூபா நஷ்டத்தை எதிர்கொள்ளக் கூடும் என்று ஐக்கிய நாடுகள் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கையின் அண்மைய வரலாற்றில் ஏற்பட்ட மிக மோசமான வறட்சியான காலநிலை தற்போது தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது என்றும் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

நீரேந்துப் பகுதிகளில் நீர் மட்டம் வீழ்ச்சியடைந்துள்ளது. நீர் மின் உற்பத்தி பெரியளவில் பாதிக்கப்பட்டுள்ளது.

அனல் மின் உற்பத்தி ஊடாக நாட்டின் மின்சாரத் தேவை பூர்த்தி செய்யப்படுவதால் பெரியளவில் செலவு அதிகரித்துள்ளது. நீரை சிக்கனமாகச் சேமிப்பது குறித்து அரசு பல்வேறு வழிகாட்டல்களை வழங்கியுள்ளது.

மழையின்றித் தொடர்ச்சியாக வறட்சி நீடிப்பதால் நாடு நிதி நஷ்டத்தை எதிர் நோக்கும். மக்கள் பெரியளவில் சிக்கல்களை எதிர்நோக்கி வருகின்றனர்.-என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)








## சுவிஸில் நடைபெற்ற
# கேணல் கிட்டு நினைவு நாள்

வங்கக் கடலின் நடுவே தியாக வேள்வித் தீயில் சங்கமித்து வீரகாவியமான கேணல் கிட்டு உட்பட பத்து வேங்கைகளின் நினைவுகள் சுமந்த வணக்க நிகழ்வு கடந்த சனிக்கிழமை ஆர்கவ் மாநிலத்தில் எழுச்சியுடன் நடைபெற்றது.

சுவிஸ் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த எழுச்சி நிகழ்வில் பொதுச் சுடரேற்றலுடன், தமிழீழத் தேசியக்கொடி ஏற்றி வைக்கப்பட்டது.

தொடர்ந்து ஈகச்சுடர் ஏற்றப்பட்டு அகவணக்கத்துடன் மலர்வணக்கம் செலுத்தப்பட்டது. மக்களால் மலரஞ்சலி செலுத்தப்பட்ட வேளையில் இசைக்கலைஞர்களால் எழுச்சிப் பாடல்களும் இசைக்கப்பட்டன. (ஐ)

## தமிழ் சினிமாவில் பாடுவதற்கான
# புலம்பெயர் ஈழ யுவதிக்கு வாய்ப்பு



கனடாவில் வாழும் ஈழத் தமிழ் யுவதிக்கு பிரதான தமிழ் சினிமா படத்தில்பாடுவதற்கான வாய்ப்பு கிடைத்துள்ளது.

லக்ஷ்மி சிவனேஸ்வரலிங்கம் என்ற ஈழப் யுவதிக்கேஇந்தவாய்ப்பு கிடைத்துள்ளது. தமிழ் சினிமாவில் விரைவில் திரைக்கு வரவுள்ள போகன் திரைப்படத்திலேயே பின்னணி பாடகியாக அறிமுகமாகிப் பாடல் ஒன்றைப் பாடியுள்ளார்.

இசையமைப்பாளர் டி.இமான் மூலமே, கனடாவில் வாழும் இலங்கைத் தமிழ்ப் பெண்ணான லக்ஷ்மிக்கு இந்த வாய்ப்புக் கிடைக்கப் பெற்றுள்ளது.

இந்திய பிரதான தமிழ் சினிமாவில் பின்னணி பாடகியாக அறிமுகமாகியுள்ள முதல் ஈழ யுவதி லக்ஷ்மி சிவனேஸ்வரலிங்கம் ஆவார்.

லக்ஷ்மி, கனடாவில் தயாரிக்கப்பட்ட 'அப்பா' என்ற படத்துக்குச் சிறுவயதிலேயே பின்னணிப் பாடகியாகவும் அறிமுகமாகியுள்ளார்.

இசைத்துறையில் பட்டம் பெற்ற லக்ஷ்மி, தற்போது ரொரண்டோ பல்கலைக்கழகத்தில் குரல் நடிப்புக்கான விசேடதுறையில் பணியாற்றி வருகின்றார். பல திறமைகளைக் கொண்ட லக்ஷ்மி, ஆங்கிலம், ஹிந்தி, ஜேர்மன், இத்தாலியன், பிரெஞ், லத்தீன் ஆகிய மொழிகளிலும் பாடல்களைப் பாடியுள்ளார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

## பெண்கள் தின விழா

ஆஸ்திரேலியத் தமிழ் இலக்கியக் கலைச் சங்கத்தின் 2017 ஆம் ஆண்டுக்கான முதலாவது நிகழ்வான பெண்கள் தின விழா எதிர்வரும் மார்ச் மாதம் 11 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணி முதல் இரவு 8 மணிவரை பிரஸ்டன் நகர மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (ஐ)

# ஆர்ஜொந்தே தமிழ்ச் சங்க தமிழர் திருநாள் நிகழ்வு!

பிரான்ஸ் பாரிஸின் புறநகர் பகுதியில் ஒன்றான 95 ஆவது மாவட்டமான ஆர்ஜொந்தே பிரதேசத்தில் உள்ள ஆர்ஜொந்தே பிறாங்கே தமிழ்ச் சங்கம் தமிழர் திருநாளாம் தைப்பெங்கலை மிகவும் சிறப்பாகக் கொண்டாடியது.

மாவட்டத்தின் நாடாளுமன்ற உறுப்பினர் பிலிப்பு யூசேப், தமிழர் ஒருங்கிணைப்புக்குழு 95 பிரதேசப் பொறுப்பாளரான மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்த அன்ரனி தாஸ் ஆகியோரது மங்கல விளக்கேற்றலுடன் நிகழ்வு ஆரம்பமானது.

பொங்கல் நிறைவுடன் அரங்க நிகழ்வுகள் இடம்பெற்றன.

இதில் மங்கல விளக்கை மாநகர முதல்வர் ஜோர்ஜ் மொந்தோன், ஆர்ஜொந்தே தமிழ்ச் சங்கத் தலைவர் விமலராஜ், தமிழ்ச்சோலை திருமதி. ராணி, தமிழர் ஒருங்கிணைப்புக்குழு விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கிருபா, தமிழ்த் தேசியச் செயற்பாட்டாளர் பாக்கியநாதன் ஆகியோர் ஏற்றி வைத்தனர். கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ஐ)







# பிரான்ஸ் தமிழ்ச் சங்கங்களின் கூட்டமைப்பு சிறப்பாக நடத்திய தைப்பொங்கல் பெரு விழா!

பிரான்ஸில் உள்ள 64 தமிழ்ச் சங்கங்களின் கூட்டமைப்பு தமிழர் தைப்பொங்கலை கடந்த 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சிறப்பாகக் கொண்டாடியது.

பரிஸின் புறநகர்ப் பகுதியில் ஒன்றான சென்ரனி பிரதேச மண்டபத்தில் முற்பகல் 11 மணிக்கு மங்கல நாதஸ்வரம் இசைக்க பிரான்ஸ் தமிழ்ச்சங்கங்களின் பொறுப்பாளர் பாலன், தமிழ்ச்சோலை தலைமைப் பணியகப் பொறுப்பாளர் ஜெயக்குமாரன், தமிழர் ஒருங்கிணைப்புக்குழு உறுப்பினர்கள், மற்றும் செவினி சூ றோஸ் மாநகர சபை ஆலோசகரும், தமிழின உணர்வாளருமாகிய பிரெஞ் நாட்டவரான டேவிட் பாபிறே , அவரின் உதவியாளர் உட்பட பிரான்ஸ் மூதாளர் இல்லத்தைச் சேர்ந்தவர்களும் தமிழ்ச்சோலை மாணவர்கள், ஆசிரியர்கள், மற்றும் தமிழ்ர் நலன் விரும்பிகள் பொங்கலுக்கான அரிசியிட்டு பொங்கியிருந்தனர்.

பிற்பகல்1.30 மணிக்கு பொங்கல் கலை நிகழ்வுகள் நடைபெற்றன. அழகுக்கோலமிட்டு மங்கல விளக்கு ஏற்றப்பட்டு விருந்தினர்கள் நிகழ்வு மண்டபத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

மங்கல நாதஸ்வர இசையுடன் தமிழே உயிரே வணக்கம் பாடலுக்கான வரவேற்பு நடனத்தை செவரோன் தமிழ்ச்சங்க மாணவிகள் நிகழ்த்தினர். வரவேற்புரையுடன் மயில், பாம்பு நடனங்களை சேர் பொந்துவாஸ் தமிழ்ச்சங்க மாணவிகளும், சுளகு நடனத்தை ட்றான்சி தமிழ்ச்சங்க மாணவியரும் வழங்கினர்.

பொங்கல் கவிதைதையை நோசிலி குரோன் தமிழ்ச்சங்கமும், சென்ரனி தமிழ்ச் சங்கமும் வழங்கியிருந்தன. தமிழர் கலைபண்பாட்டுக் கழகத்தினரின் தபேலா, மிருதங்கம், கடம், தவில், வயலின் இசை கொண்ட தாளவாத்தியக் கச்சேரியும் இடம்பெற்றன, அத்துடன் பட்டி மன்றமும் நடை பெற்றது. புலம் பெயர்ந்த மண்ணில் தமிழர் பண்பாடுகள் பின்பற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றனவா? கைவிடப்பட்டுக் கொண்டிருக்கின்றனவா? என்கின்ற தலைப்பில் நடைபெற்றது.

இருதரப்பினரும் தங்கள் உள்ளக்கிடங்கில் உள்ள கருத்துக்களையும், நடை முறையில் அன்றாடம் காண்கின்ற விடயங்களையும் தெரிவித்து மக்களிடம் கரகோசங்களைப் பெற்றுக்கொண்டனர் .

பொங்கல் சிறப்புரையை தமிழர் ஒருங்கிணைப்புக்குழு சார்பில் பாலசுந்தரமும் நன்றியுரையை நந்தியார் தமிழ்ச்சங்கத் தலைவர் சத்தியகுமாரும் வழங்கியிருந்தனர்.










பொன்.வேணு கிருஷ்ணா

President Donald Trump pumps his fist after addressing the crowd during his swearing-in ceremony on January 20 at the Capitol in Washington, DC. | Getty



### இடைமாறு காலகட்டத்தை ஜனநாயகக் கட்சி எப்படிப் பயன்படுத்தியது?



ஜனநாயகக் கட்சி ட்ரம்ப்பை எதிர்த்து நிற்பதற்கு எதுவொன்றும் செய்யப் போவதில்லை. ஒபாமா தொடங்கி கீழுள்ள தலைவர்கள் வரையிலும் ஜனநாயகக் கட்சியின் தலைமையானது, ட்ரம்ப்பின் இராணுவ வாத மற்றும் ஜன நாயக-விரோத வசைமாரியை ஏதோ இயல்பான ஓர் அரசியல் உரைக்கு செவி மடுப்பது போல உட்கார்ந்து கேட்டுக் கொண்டிருந்தது. இடைமாறு கால கட்டத்தை, உள்வரும் நிர்வாகம் குறித்த சுயதிருப்திப் போக்கைப் பரப்புவதில் ஒபாமா செலவிட்டிருந்தார் என்றால், நாடாளுமன்றத்தின் ஜனநாயகக் கட்சி யினரோ ட்ரம்ப்புடன் இணைந்து வேலை செய்வதற்கும் அவரது நச்சுத்தனமான மற்றும் பிற்போக்குத்தனமான பொருளா தார தேசியவாதத்தைத் தழுவிக் கொள்ள வும் தம்மைத் தயாராக்கினர்.


.( The Democratic Party will do nothing to oppose Trump. The Democratic Party leadership, from Obama on down, sat through Trump's militaristic and anti-democratic diatribe as though listening to a "normal" political address. Obama has spent the transition period spreading complacency about the incoming administration, while the congressional Democrats pledge to work with Trump and embrace his toxic and reactionary economic nationalism.)



### உழைக்கும் மக்கள் கடும் அதிர்ச்சிகளுக்கு முகம்கொடுக்கவிருக்கிறார்கள்

உழைக்கும் மக்கள் கடும் அதிர்ச்சி களுக்கு முகம்கொடுக்கவிருக்கிறார்கள். அவர்களது ஆரம்பக் குழப்பம் என்ன வாயிருந்தாலும் சரி, அவர்கள் கிளிண் டனுககு வாக்களித்திருந்தாலும் சரி, ட்ரம்ப்புக்கு வாக்களித்திருந்தாலும் சரி, அல்லது இருவருக்கும் இடையில் தேர்வு செய்வதற்கு மறுத்திருந்தாலும் சரி, இந்த ட்ரம்ப் அரசாங்கம் அவர்களது எதிரி என்பதை அவர்கள் வெகுவிரைவில் அறிந்து கொள்ள இருக்கின்றனர். அமெ ரிக்க முதலாளித்துவம் அழிவின் பாதை யில் இறங்கி விட்டிருக்கிறது,


(Working people are in for great shocks. Whatever the initial confusion, whether they voted for Clinton, for Trump, or refused to choose between them, they will learn quickly that this government is their enemy. American capitalism has embarked on the road to disaster.)




### ட்ரம்ப் பதவியேற்புக்கு எதிராக அமெரிக்கர்களும் உலகமக்களும்

சனிக்கிழமை(21.01.2017) அன்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நிர்வாகத்துக்கு ஒரு சக்திமிக்க முன் எதிர்பார்த்திருந்திராத எதிர்ப்பைக் காட்டும் விதமாக, மில்லியன் கணக்கான மக்கள் அமெரிக்காவிலும் மற்றும் உல கெங்கிலும் ஆர்ப்பாட்டங்களில் பங்கேற்ற னர்.

இந்த பரந்த எதிர்ப்புக்கள் அதனை ஏற் பாடு செய்தவர் கள் எதிர்ப் பார்த்ததை விட வும் மிக அதிக மாக இருந்த தானது முதலா ளித்துவசெய்தி ஊடகங்க ளுக்கு ஒரு வியப்பாக இருந்தது. இவை ஈராக் கில் படை யெடுப்புக்கு எதிராக 2003 இற்கு பின்னர் நடைபெற்ற உலகளாவிய ஒருங்கிணைந்த ஆர்ப்பாட்டங்கள் போல இருந்தன. அண்டார்ட்டிகாவிலுள்ள அமெரிக்க ஆய்வு நிலையம் உள்ளடங்கலாக ஒவ்வொரு கண்டத்திலுமாக மொத்தம் 600 இடங்களில் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன.



Hundreds of thousands march down Pennsylvania Avenue during the Women's March. REUTERS/ Bryan Woolston




### வாஷிங்டனிலும் லொஸ்ஏஞ்செல்ஸிலும் பத்து இலட்சம் பேருக்கும் அதிகம்;

### இரண்டரை இலட்சம் பேர் சிக்காக்கோவில்; போஸ்டனில் ஒன்றரை இலட்சம் பேர்; ஒரு இலட்சம் பேர் நியூயோர்க் நகரில்

வாஷிங்டன் DC இல் நடந்த பதவி யேற்புக்கு பிந்தைய ஊர்வலம் 5 இலட்சம் பேருக்கும் அதிகமானோரை ஈர்த்தது, அதற்கு முந்தையநாள் ட்ரம்ப்பின் பதவி யேற்புக்கு வந்தகூட்டம் என்று கூறப் பட்டதை விடவும் இருமடங்கு இருந் தது. அதே அளவு லொஸ் ஏஞ்செல்ஸிலும் அணிவகுத்தனர். 250,000 பேர் சிக்காகோ நகரமத்தியில் ஊர்வலத்தில் பங்கேற்றனர். அங்கே கூட்டமிகுதியின் காரணமாக திட்டமிடப்பட்ட ஊர்வலம் இரத்துச் செய்யப்பட்டு, அந்த இடத்தில் வெறு மனே ஆர்ப்பாட்டங்களில் அணிதிரண்ட னர். போஸ்டனில் 150,000 பேர் ஊர் வலத்தில் பங்கேற்றனர்.

### வியட்நாம் போர் எதிர்ப்பு ஆர்ப் பாட்டங்களுக்குப் பின்னர் நடைபெற்ற ஒரு மிகப் பெரிய எதிர்ப்பாக

இது கிட்டத்தட்ட அரைநூற்றாண் டுக்கு முன்னர் வியட்நாம் போர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களுக்கு பின்னர் நடை பெற்ற ஒரு மிகப்பெரிய எதிர்ப்பாக விவ ரிக்கப்படுகிறது. மற்றொரு 100,000 பேர் நியூயோர்க் நகர ட்ரம்ப் டவர் எனு



A portion of the demonstration in Chicago

மிடத்தில் ஊர்வலமாகச் சென்றனர். இதர அமெரிக்க நகரங்களுள் செயின்ட், பால் மின்னசோட்டாவில் 60,000 பேரும் விஸ்கான்சின், மாடிசனில் 75,000 பேருக்கு அதிகமானோரும் பங்கேற்றதும் இவற்றுள் உள்ளடங்கும்.

### லண்டன், மெக்சிக்கோ சிட்டி, பாரிஸ், பேர்லின், பிராகு மற்றும் சிட்னியில்

ஆர்ப்பாட்டங்கள் மெக்சிகோ சிட்டி, பாரிஸ், பேர்லின், பிராகு மற்றும் சிட்னி யில் இடம்பெற்றன. லண்டனில் 100,000 பேரும் அதேபோல பிரிட்டிஷ் நகரங் களான Cardiff, Edinburgh, Leeds, Liverpool, Manchester மற்றும் வட அயர்லாந்திலுள்ள Bristol in Belfast லும் அதேபோல் பங்கேற்றனர்.

ஆர்ப்பாட்டங்கள் இனப்பெருக்க உரிமைகள், அதேபோல பல்வேறு அடையாள அரசியற் பிரச்சினைகள் பற்றியே மையப்படுத்திய எதிர்ப்புக்களை முன்வைத்ததாக ஊடகம் செய்தி அறி வித்தது. ஆயினும், வர்ணனையாளர்கள் ஆர்ப்பாட்டங்களில் பங்கேற்ற பெரும் பான்மைப் பகுதியினர் மூர்க்கத்தனமான இராணுவவாதம், உள்நாட்டு ஒடுக்கு முறை மற்றும் முதலாளித்துவ ஆதரவு கொள்கை பற்றிய ட்ரம்ப்பின் வேலைத் திட்டத்துக்கு எதிர்ப்பு உட்பட, மிகவும் பரந்த அளவிலான பிரச்சினைகளால் நோக்கம் கொள்ளப்பட்டி ருந்தனர் என்று ஒப்புக்கொள்ளுமாறு நிர்ப்பந்திக்கப்பட்ட னர்.

### மாபெரும் போராட்டத்துக்கு வாஷிங்டனில் குவிந்த பெண்ணுரிமை குழுவினர்

அமெரிக்க குடியரசு கட்சியின் நிர் வாகத்தில், தங்களுடைய உரிமைகள் பாதிக்கப்படும் என்று பெண்கள் அஞ்சு கின்றனர்.





தன்னுடைய முதல் அலுவலக நாளில், காலை செபத்தில் பங்குகொண்ட பின் னர், உளவு துறை சேவைகளில் ஒன்றான சிஐஏ எனப்படும் அமெரிக்க மத்திய புலனாய்வுத் துறையின் தலைமைய கத்துக்கு டொனால்ட் ட்ரம்ப் சென்றார்.



இந்த நிறுவனம் அமெரிக்க அதிபர் தேர்தலில் ரஷ்யாவின் தலையீடு பற்றிய அறிக்கையை ட்ரம்ப் விமர்சனம் செய்த பிறகு அதனுடன் முறுகலான உறவை கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத் தக்கது. அதேவேளையில் ஆர்ப்பாட்டங் கள் தொடர்ந்தன.

(கேள்வி தொடரும்...)





# தமிழ்த் தேசிய எழுச்சி

ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றி சிந்தனைப் புரட்சியை முன்னெடுத்தவர்களுள் விடுதலைப் புலிகளின் தத்துவ ஆசிரியரான அன்ரன் பாலசிங்கம் மிக முக்கிய மானவர். அரசியல் ஞானம்மிக்க தத்துவ ஆசிரியர்.

ஈழத் தமிழினத்தின் உயரிய வரலாற்றுப் பதிவு ஏடான 'போரும் சமாதானமும்' என்ற நூலை அவர் படைத்திருக்கின்றார். இலங்கைத் தீவில் தமிழ்த் தேசிய எழுச்சி பற்றி அந்நூலில் அவர் குறிப்பிடும் நுட்பமான – நுண்ணியமான – விடயங்களை இக்கட்டுரைத் தொடரில் நாம் அறிந்து கொள்ளலாம்.




40

## பெங்களூர் பேச்சுக்கள்

ஈழத்தேசிய விடுதலை முன்னணியைப் பிளவுபடுத்தி, அந்த முன்னணியில் அங்கம் வகித்த விடுதலை அமைப்புகளை ஒன்றோடு ஒன்று மோதவிட்டு, விடுதலைப் புலிகள் இயக்கத்தைப் பலவீனப்படுத்த 'றோ' புலனாய்வுத் துறையினர் தீட்டிய சதித்திட்டம் படுதோல்வியில் முடிந்தது. முன்பை விடப் பல மடங்கு பலம்பெற்ற சக்தியாகப் புலிகள் இயக்கம் பூதாகரமாக வளர்ச்சி பெற்றமை ராஜீவ் அரசுக்கு ஏமாற்றத்தையும் கடுப்பையும் ஏற்படுத்தியது. அதுமட்டுமன்றி, இலங்கையின் இனப் பிரச்சினையில் விடுதலைப் புலிகளின் தலைமையை அனுசரித்துப் போக வேண்டிய கட்டாயமும் இந்திய அரசுக்கு ஏற்பட்டது. ஆனால், விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் ஒரு வித்தியாசமான ஆளுமையுடைய மனிதர். கொள்கை யில் உருக்கை ஒத்த உறுதி உடையவர். நெருக்குவாரத்துக்கு நெகிழ்ந்து கொடுக்க மாட்டார். அதிகாரக் கெடுபிடிகளுக்கு அடிபணியமாட்டார். இப்படியான போக்குடைய ஒரு தலைவனை எப்படியாவது தனது வழிக்குக் கொண்டுவர வேண்டும் என இந்திய அரசு கருதியது. 1986 ஆம் ஆண்டு நவம்பர் மாத நடுப் பகுதியில் நிகழவிருக்கும் பெங்களூர் பேச்சுகளுக்கு முன்னராகப் பிரபாகரனைப் படிமானப் படுத்த இந்திய அதிகாரபீடம் எண்ணியது. அதற்கான ஒரு சந்தர்ப்பத்தையும் அது எதிர்பார்த்துக் காத்திருந்தது. அந்த சந்தர்ப்ப சூழ்நிலை 1986 ஆம் ஆண்டு நவம்பர் மாத தொடக்கத்தில் உருவாகியது.

1986 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதலாம் நாள். அன்று தீபாவளி பண்டிகை. சென்னை நகரத்தின் மையத்திலுள்ள சூளைமேடு என்னுமிடத்தில் ஒரு கோரமான இரத்தவெறிச் சம்பவம் நிகழ்கிறது. இத்துன்பியல் நாடகத்தின் கதாநாயகன் டக்ளஸ் தேவானந்தா. இன்று ஈ.பி.டி.பியின் தலைவராகவும் இந்து மத அமைச்சராகவும் பதவி வகிக்கும் தேவானந்தா, அன்று ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் இராணுவப் பிரிவில் பணிபுரிந்தார். தீபாவளி தினமாகிய அன்று நண்பகல் சூளைமேட்டிலுள்ள ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் தலைமைச் செயலகத்துக்கு முன்பாக ஓர் ஓட்டோவில் வந்திறங்கிய தேவானந்தாவுக்கும் ஓட்டோ சாரதிக்கும் மத்தியில் சிறு தகராறு. ஓட்டோ கூலிக்கு பேரம் பேசியதில் ஏற்பட்ட வாக்குவாதம் கோபாவேசம் மிக்க சொற்சண்டையாக வெடித்தது. உணர்ச்சி வசப்பட்ட தேவானந்தா தனது செயலகத்தினுள் பாய்ந்தோடிச் சென்று ஒரு தானியங்கித் துப்பாக்கியுடன் திரும்பி வந்தார். துப்பாக்கியைக் கண்டதுமே பயந்து நடுங்கிய ஓட்டோ சாரதி ஓட்டோவை விட்டு ஓட்டம் பிடித்தான். அவன் ஓடிய திசையை நோக்கி, தேவானந்தா துப்பாக்கியால் சிலாவிச் சுட, துப்பாக்கிச் சன்னங்கள் வீதியில் நடமாடிய அப்பாவிப் பொதுமக்களைப் பதம் பார்த்தன. பத்துப் பேர் வரை படுகாயத்துடன் வீதியில் சாய்ந்தனர். ஓர் இளம் வழக்கறிஞர் தளத்திலேயே கொல்லப்பட்டார். சூளைமேடு அல்லோல கல்லோலப்பட்டது. தமிழ்நாடு எங்கும் கண்டனக் குரல்கள் எழுந்தன.

தமிழ் நாட்டில் இயங்கும் ஈழ விடுதலை அமைப்புகள் மீது கடும் நடவடிக்கை எடுக்குமாறு இந்திய ஊடகங்கள் வற்புறுத்தின. கர்நாடகத்தின் தலை நகரான பெங்களூரில் விரைவில் சார்க் உச்சி மாநாடு நடைபெறவிருப்பதால் தமிழ் அமைப்புகள் மீது கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுத்து, தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கைப் பலப்படுத்துமாறு பிரதமர் ராஜீவ் காந்தி தமிழக முதல்வர் எம்.ஜி.இராமச்சந்திரனைக் கேட்டுக் கொண்டார். இந்தப் பொறுப்பைத் தமிழக





முதல்வர் பிரதிப் பொலிஸ் மாஅதிபர் மோகனதாஸிடம் ஒப்படைத்தார். இதனையடுத்து, தமிழீழ விடுதலை அமைப்புகளை நிராயுதபாணிகளாக்கும் 'புலி நடவடிக்கையை (Operation Tiger) மோகனதாஸ் முடுக்கிவிட்டார். 1986 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 8 ஆம் நாள் அதிகாலை தமிழ்நாடு காவல்துறையின் அதிரடிப் படையினர் விடுதலைப் புலிகளதும் ஏனைய தமிழ் அமைப்புகளதும் இரகசியத் தங்குமிடங்கள், வீடுகள், முகாம்கள், பயிற்சிப் பாசறைகள் ஆகியவற்றைச் சூறையாடி ஆயுத தளபாடங்களைக் கைப்பற்றினர். அத்துடன், அந்த அமைப்புகளின் தலைவர்களையும் கைது செய்தனர்.

பிரபாகரனுடன் நானும் அன்றைய நாள் அதிகாலை எமது வீடுகளில் வைத்து கைது செய்யப்பட்டு வெவ்வேறு காவல் நிலையங்களுக்குக் கொண்டுசெல்லப் பட்டோம். அங்கு பல மணிநேரம் தடுத்து வைக்கப்பட்டு குற்றவாளிகள் போல விசாரணைக்கு உட்படுத்தப்பட்டோம். எங்கள் இருவரையும் பல கோணத்தில் நிறுத்தி படம் எடுத்தார்கள். கைரேகையைப் பதிவு செய்தார்கள். பண்பற்ற வார்த்தைகளால் அவமானப்படுத்தினார்கள். இவை எல்லாம் திட்டமிட்டு நடத்தப்பட்ட இம்சைபோலத் தோன்றியது. இழிவுபடுத்தி, சிறுமைப்படுத்தி பணிய வைக்கலாம் என்ற கபட நோக்கத்துடன் மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கை பிரபாகரனைப் பொறுத்தவரை எதிர்மாறான விளைவையே ஏற்படுத்தியது. பிரபாகரன் கொதிப்படைந்தார். ஒரு குற்றவாளிபோல இழிவுபடுத்தப்பட்டமையை அவரால் ஜீரணிக்க முடியவில்லை. தனது சுயகௌரவத்துக்கு மட்டுமன்றி தமிழீழ சுதந்திர இயக்கத்துக்கு ஏற்பட்ட அவமதிப்பாகவும் அந்த நிகழ்வை அவர் கருதினார். எந்த வகையிலும் இந்திய அழுத்தத்துக்கு நெகிழ்ந்து கொடுப்பதில்லை என உறுதிபூண்டார். இந்தப் புலி நடவடிக்கை சூளைமேட்டுத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துக்கு எதிரான ஒழுங்கு நடவடிக்கையாக நாம் கருதவில்லை. ஏனென்றால், சூளைமேட்டுச் சம்பவத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் எந்தவித சம்பந்தமும் இருக்கவில்லை. விடுதலைப் புலிகளின் தலைமையை மிரட்டிப் பணியவைத்து இந்திய சமரச முயற்சிக்கு விட்டுக் கொடுத்து இணங்க வைக்கும் தந்திரோபாயத்துடன் மத்திய, மாநில அரசுகளால் கூட்டாகத் திட்டமிடப்பட்ட சதியின் அடிப்படையிலேயே இப்புலி நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பது எமக்கு நன்கு புலனாகியது. ஒன்பது நாள்கள் எமது வீடுகளில் தடுப்புக் காவலில் வைக்கப் பட்ட பின்பு, பிரபாகரனும் நானும் பேச்சுக்களுக்காக பெங்களூர் அழைத்துச் செல்லப்பட்ட போதே இந்தியாவின் சூத்திரதார நோக்கு எமக்குப் புலப்பட்டது.

1986 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 17 ஆம் நாள். சென்னை நகரப் புறத்திலுள்ள தாம்பரம் விமானத் தளத்திலிருந்து இந்திய வான்படை விமானம் மூலம் பிரபாகரனும் நானும் பெங்களூர் கொண்டு செல்லப்பட்டோம். அங்கு ராஜ்பவன் விடுதியில் எம்மைத் தங்க வைத்தார்கள். அந்த விடுதிக்குச் சென்றடைய இரவு 10 மணி ஆகி விட்டது. ஒருபுறம் பசி வயிற்றைப் பிடுங்க, களைத்துச் சோர்ந்துபோய் விடுதிக்குச் சென்ற எம்முடன் இரவிரவாக பேச்சுக்களை நடத்தும் நோக்குடன் இந்திய அரச பிரதிநிகள் குழு ஒன்று அங்கு காத்து நின்றது. இந்திய வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் நடவார் சிங், இந்திய வெளியுறவுச் செயலர் வெங்கடேஸ்வரன், வெளியுறவு அமைச்சின் இணைச் செயலர் குல்திப் சதேவ் , இலங்கைக்கான இந்தியத் தூதுவர் டிக்சிட் ஆகியோர் எமக்கு அறிமுகம் செய்து வைக்கப் பட்டனர். கிழக்கு மாகாணத்தை மூன்று கூறுகளாகப் பிரிக்கும் ஜெயவர்தனாவின் எல்லை வரையறைத் திட்டத்தை உடனடியாகவே இந்தியப் பிரதிநிதிகள் எமக்கு எடுத்து விளக்கினார்கள். இந்தியப் பிரதமரும் சிறிலங்கா ஜனாதிபதியும் ஏற்கனவே பெங்களூருக்கு வருகை தந்து, வின்சர் மனோர் விடுதியில் தங்கி நிற்கிறார்கள் என எமக்குத் தகவல் தெரி வித்த இந்தியப் பிரதிநிதிகள், ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு இடைக்காலத் தீர்வாக இந்த எல்லை வரையறுப்பு யோசனையை நாம் ஏற்றுக்கொண்டால் ஜெயவர்த்தனா எம்மிடம் பேசுவதற்குத் தயாராக இருக்கிறார் என எமக்குத் தெரிவிக்கப் பட்டது.

(தொடரும்...)

*கிழக்கு மாகாணத்தை மூன்று கூறுகளாகப் பிரிக்கும் ஜெயவர்தனாவின் எல்லை வரையறைத் திட்டத்தை உடனடியாகவே இந்தியப் பிரதிநிதிகள் எமக்கு எடுத்து விளக்கினார்கள். இந்தியப் பிரதமரும் சிறிலங்கா ஜனாதிபதியும் ஏற்கனவே பெங்களூருக்கு வருகை தந்து, வின்சர் மனோர் விடுதியில் தங்கி நிற்கிறார்கள் என எமக்குத் தகவல் தெரிவித்த இந்தியப் பிரதிநிதிகள், ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு இடைக் காலத் தீர்வாக இந்த எல்லை வரையறுப்பு யோசனையை நாம் ஏற்றுக்கொண்டால் ஜெயவர்த்தனா எம்மிடம் பேசுவதற்குத் தயாராக இருக்கிறார் என எமக்குத் தெரிவிக்கப்பட்டது.*

# வல்லப்பட்டைகளுடன் ஐவர் வெள்ளவத்தையில் கைது!

கொழும்பு, ஜன.28

கொழும்பு, வெள்ளவத்தை பிரதேசத்தில் ஒரு தொகை வல்லப்பட்டைகளுடன் சந்தேக நபர்கள் ஐவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் இந்திய பிரஜை ஒருவரும் அடங்குவார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அந்த ஐவரும் வான் ஒன்றில் நேற்றுமுன்தினம் வல்லப் பட்டையுடன் பயணித்துக் கொண்டிருந்த போதே பொலிஸாரால்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் கல்கிஸை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப் படவுள்ளனர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (எ)

# இலங்கை அகதிகளைப் பாதுகாக்கும் பொறுப்பை சுவிஸ் அரசு மீறியுள்ளது

## குற்றம்சாட்டுகிறது ஐரோப்பிய நீதிமன்றம்

ஜெனீவா, ஜன.28

விடுதலைப் புலி உறுப்பினர் குடும்பம் ஒன்றை இலங்கைக்குத் திருப்பி அனுப்பியதன் ஊடாக, அகதிகளைப் பாதுகாக்கும் பொறுப்பை சுவிற்ஸர்லாந்து அரசு மீறியுள்ளது என்று மனித உரிமைகளுக்கான ஐரோப்பிய நீதிமன்றம் குற்றம் சாட்டியுள்ளது.

2013 இல் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்ட தமிழ்க் குடும்பம் ஒன்று சித்திரவதைகளுக்கு முகங்கொடுத்ததாகத் தொடரப்பட்ட வழக்கிலேயே இந்தத் தீர்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

2009 ஆம் ஆண்டு சுவிற்ஸர்லாந்தில் புகலிடம் கோரிய இலங்கைக் குடும்பத்தின் மனு நிராகரிக்கப்பட்டு அந்தக் குடும்பம் 2013 ஆம் ஆண்டு நாடு கடத்தப்பட்டிருந்தது. கட்டுநாயக்க விமான நிலையத்தில் தடுக்கப்பட்ட அவர்கள் 13 மணித்தியாலங்களாக விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். அதனையடுத்து நாடு கடத்தப்பட்ட ஒருவர் கைது செய்யப்பட்டார்.

அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் இரண்டு வருடங்களின் பின்னர் சிறையிலிருந்து தப்பியிருந்தார். இதே போன்று மேலும் இருவர்நாடுகடத்தப்பட்ட நிலையில் சித்திரவதைகளுக்கு உள்ளாகினர் என்று கண்டறியப் பட்டுள்ளது.

கடந்த ஒக்ரோபர் மாதம் சுவிற்ஸர்லாந்து மற்றும் இலங்கை அரசுக்கு இடையில் அகதிகள் தொடர்பில் உடன்படிக்கை ஒன்று ஏற்படுத்தப் பட்டது. இதில் இலங்கையிலிருந்து வரும் அகதிகளை ஏற்றுக்கொள்வதில்லை என்றும், சுவிற்ஸர்லாந்திலிருந்து நாடு கடத்தப்படுவோர் சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்படமாட்டார்கள் என்றும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

எனினும், அந்த உடன்பாடுகளை மீறி இன்றும் நாடு கடத்தப்படுவோர் சித்திரவதைக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

கடந்த வருடத்தில் 5 ஆயிரம் இலங்கையர்களுக்குப் புகலிடம் வழங்கப்பட்டுள்ளது. ஆயிரத்து 613 இலங்கை புகலிடக் கோரிக்கையாளர்களுக்குத் தற்காலிக விசா வழங்கப் பட்டுள்ளது. எனினும், ஆயிரத்து 316 பேரின் கோரிக்கைகள் இன்னும் விசாரிக்கப் படாமல் உள்ளன என்று சுவிஸ் அரசு தெரிவித்துள்ளது.

இந்தக் குற்றச்சாட்டுக்களை சுவிற்ஸர்லாந்து அரசு சாதகமாகக் கையாளுமாக இருந்தால், அந்த நாட்டில் புகலிடம் கோரியுள்ள இலங்கை அகதிகளுக்கு நல்லதொரு வாய்ப்பாக அமையும் என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (எ)

## தினசரி ராசி பலன் 28.01.2017

துர்முகி வருஷம் 2017 ஆம் ஆண்டு தைத்திங்கள் 15ஆம் நாள் சனிக்கிழமை பிரதமை பி.இ. 5.44 வரை பின்துவிதியை. திருவோணம் இரவு 10.39 வரை. பின் அவிட்டம் சித்தம் முழுவதும் ராகுகாலம். பகல் 9.28 முதல் 10.56 வரை. சுப நேரம்: மா 3.35 முதல் 5.05 வரை. இன்று திவசம் செய்ய வேண்டிய திதி: தைமாத வளர்பிறை பிரதமை.

'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம்:** இன்று விருத்தியான நாள். வியாபாரம் விருத்தியடையும். செய்யும் தொழில் வளர்ச்சியடையும். உத்தியோகத்தில் மேன்மை உண்டாகும். பணம் வந்து சேரும்.

**ரிஷபம்:** இன்று யோகமான நாள். புதிய தொழில் வாய்ப்புக்கள் கிடைக்கும். வீடு, வாகன யோகம் உண்டாகும். சிலருக்கு வெளிநாடு செல்லும் யோகம் உண்டாகும்.

**மிதுனம்:** இன்று அலைச்சல் மிகுந்த நாள். வியாபார விஷயமாக வெளியூர்களுக்கு அலைய வேண்டி வரும். சிலர் கொடுத்த பணத்தைத் திரும்ப வாங்குவதற்கு அலைந்து திரிவார்கள்.

**கடகம் :** இன்று சம பலன்கள் காணப்படுகின்றன. வரவுக்கு மீறிய செலவுகள் உண்டாகும். தேகசுகம் சீராக இருக்கும். வர்த்தகத்தில் மத்திம லாபம் கிடைக்கும். தொழிலில் பிரயாசை அதிகரிக்கும். பயணங்களைத் தவிர்க்கவும்.

**சிம்மம் :** இன்று மேன்மையான நாள். தொழிலில் மேன்மை உண்டாகும். வேலைக்குப் போகும் பெண்கள் உயர்பதவி, ஊதிய உயர்வு என்பன பெறுவார்கள். சிலருக்குக் கௌரவ பதவிகள் கிடைக்கும்.

**கன்னி:** இன்று நன்மையான நாள். வியாபாரத்தில் எதிர்பாராத நன்மை உண்டாகும். செய்தொழில் முன்னேற்றமடையும். உத்தியோகத்தர்களுக்கு உயர்அதிகாரிகளின் கரிசனையால் அதிக நன்மை கிடைக்கும்.

**துலாம்:** இன்று துயரமான நாள். குடும்பத்தில் பிரச்சினைகள் உண்டாகும். தொழிலில் முன்னேற்றம் குறையும். சுயதொழில் ஆதாயம் குறையும்.உறவினர், நண்பர்கள் ஒத்தாசை குறையும்.

**விருச்சிகம்:** இன்று மத்திம பலன்கள் காணப்படுகின்றன. வரவும், செலவும் மத்திமமாக இருக்கும். உத்தியோகத்தில் அலைச்சல், பொறுப்பு அதிகரிக்கும். எடுக்கும் முயற்சிகள் தாமதமாகும். யாருக்கும் பிணை போதல் கூடாது.

**தனுசு:** இன்று அதிஷ்டமான நாள். தனலாபம் அதிகரிக்கும். வெளிநாட்டுப் பணம் வந்து சேரும். உத்தியோகத்தர்களுக்குப் பதவி உயர்வு கிடைக்கும். சிலருக்கு வெளிநாட்டுப்பயணம் அனுகூலமாகும்.

**மகரம்:** இன்று இன்பமான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். உறவினர் வீட்டுச் சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள நேரும். பெண்களின் ஆசைகள் நிறைவேறும்.

**கும்பம்:** இன்று துன்பமான நாள். குடும்பத்தில் வாக்குவாதங்கள் உண்டாகும். சிலருக்குச் செய்யும் தொழில் இழக்க வேண்டி வரும். நண்பர்கள் பகைத்துக் கொள்வார்கள். உத்தியோகத்தில் கவனக்குறைவால் உயர் அதிகாரியின் கண்டனத்துக்கு ஆளாவார்கள்.

**மீனம்:** இன்று மலர்ச்சி நாள். பொருளாதாரம் ஏற்றமடையும். நீண்டகாலம் வாட்டி வதைத்த நோய்கள் நீங்கும். வியாபாரம் ''ஓஹோ'' என்று நடக்கும்.

சந்திராட்டம நாள்: மிருகசீரிடம் 3, 4திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆகிய நட்சத்திரங்களில் உதயமானோருக்கு இந்நாள் அனுகூலமானதாக அமையாது.

## கடற்படையின் கரையோர ரோந்துப் படகு கட்டுமானத்துக்கு சர்வதேச தரச் சான்றிதழ்



கொழும்பு, ஜன.28

இலங்கைக் கடற்படையின் கரையோர ரோந்துப் படகு கட்டுமானத் திட்டத்துக்கு ஐ.எஸ். ஓ. 9001: 2015 எனும் சர்வதேசதரச் சான்று கிடைக்கப்பெற்றுள்ளது.

இலங்கை கடற்படைக் கப்பல் பராக்கிரமவில் அமைந்துள்ள அட்மிரல் சோமதிலக திசாநாயக்க கேட்போர் கூடத்தில் அண்மையில் இந்தத் திட்டத்துக்கான தரச்சான்று வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் இலங்கைக் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன பிரதம அதிதியாகவும் இலங்கை தரநிர்ணய நிறுவனத்தின் தலைவர், கடற்படை பணிப்பாளர் நாயகம், சிரேஷ்ட அதிகாரிகள் மற் றும் கடற்படை வீரர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (எ)

## தடம்புரண்டது தபால் ரயில்

கொழும்பு, ஜன.28

கொழும்பு கோட்டை நோக்கி நேற்றுமுன்தினம் இரவு பயணித்த தபால் ரயில் தலாவ ரயில் நிலையத்தின் அருகில் விபத்துக்குள்ளானதாக ரயில் கட்டுப் பாட்டு அறை தெரிவித்துள்ளது.

அந்த ரயில் பயணித்த தண்டவாளப் பகுதியில் ஏற்பட்டுள்ள தடங்கல் ஒன்று காரணமாகவே ரயில் தடம் புரண்டதாக ஆரம்பக்கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் சாரதி மற்றும் ரயில் பாதுகாவலர் தலாவ பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். (எ)

# தேயிலை மலைகளை காடாக்க அனுமதியோம்

## தமிழ் முற்போக்குக் கூட்டணி நுவரெலியா மாவட்ட எம்பி.திலகராஜ் தெரிவிப்பு

நுவரெலியா, ஜன.28

இயற்கையைப் பாதுகாக்க மழை வீழ்ச்சியை அதிகரிக்க அது அவசியம் என்பதை நாம் அறிவோம். அதற்காக தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் தேயிலை மலைகளைக் காடாக்க அனுமதிக்க முடியாது.

இவ்வாறு தெரிவித்தார் தமிழ் முற்போக்கு கூட்டணியின் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம். திலகராஜ் நாடாளுமன்றில் நேற்று முன்தினம் இடம்பெற்ற காணி பராதீனப்படுத்தல் மற்றும் மட்டுப்படுத்தல் திருத்தச் சட்டம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இந்த விடயத்தை வலியுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது:-

''நாட்டில் அதிகாரப் பகிர்வின் முக்கிய அம்சமாக காணி அதிகாரம் குறித்தே பேசப்படுகின்றது. குறிப்பாக வடக்கு, கிழக்கு பிரச்சினைகளின் மையப் புள்ளியேஇந்தக் காணி அதிகாரங்களைக் கொண்டமைந்ததாக உள்ளது.

''உள்நாட்டில் வளம் கொழிக்கும் தேயிலை இறப்பர் தொழில்கள் முன்னெடுக்கப்படும் பெருந்தோட்டக் காணிகளை எடுப்பார் கைப்பிள்ளையாகக் கையாளும் நடைமுறைகள் இடம்பெற்றுக்கொண்டு இருக்கின்றன. இதனை அனுமதிக்க முடியாது. இது தொடர்பான முறையான சட்டம் ஒன்றை நிறைவேற்ற காணி அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

''இலக்குகளில் ஒன்றாகக் காடாக்கல் நடைமுறை பின்பற்றப்படுகின்றபோது பயிரிடப் படாத காணிகளே காடாக்கலுக்கு உள்ளாக்கப்படல் வேண்டும். இயற்கையைப் பாதுகாக்க மழை வீழ்ச்சியை அதிகரிக்க அது அவசியம் என்பதை நாம் அறிவோம். அதற்காகத் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் தேயிலை மலைகளைக் காடாக்க அனுமதிக்க முடியாது.

''எனவே இத்தகைய காணி தொடர்பான பல்வேறு விடயங்கள் குறித்து உரையாக காணி அமைச்சுத் தனியான விவாதம் ஒன்றை முன்வைக்க வேண்டும்.''-என்றார். (எ)

# உள்நாட்டு அரசியல் நோக்கங்களுக்காக இலங்கை விவகாரத்தில் தலையிட்டார் ராஜீவ்

## சி.ஐ.ஏ. ஆவணத்தில் இந்த விடயம் அம்பலம்

கொழும்பு, ஜன.28

உள்நாட்டு அரசியல் நோக்கங்களைப் பூர்த்தி செய்து கொள்ளும் நோக்கில் முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி இலங்கைவிவகாரங்களில் தலையீடு செய்தார் என்று அமெரிக்க உளவுப் பிரிவான சீ.ஐ.ஏ. தெரிவித்துள்ளது.

சீ.ஐ.ஏயின் இரகசிய ஆவணங்கள்வெளியிடப்பட்டுள்ள நிலையில் இந்தவிடயம்அம்பலமாகியுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

1987 ஆம் ஆண்டு ஹரியானா மாநிலத்தில் நடைபெற்ற தேர்தலை இலக்கு வைத்து, ராஜீவ் காந்தி இலங்கை விவகாரத்தில் தலையீடு செய்தார். குறிப்பாக இலங்கையின் வட பகுதிக்கு இந்திய விமானங்கள் மூலம் உணவு உள்ளிட்ட பொருள்களைக்கொண்டு வந்து வழங்கியிருந்த நடவடிக்கை தமிழ் மக்களைத் திருப்திப்படுத்தி வாக்குகளை வெற்றி கொள்ளும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டது.

1987 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 8 ஆம் திகதி சீ.ஐ.ஏயின் குறிப்பு ஒன்றில் இந்தவிடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இலங்கையுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கை குறுகிய நோக்கிலானது. இலங்கையை, இந்தியா இராணுவ நோக்கங்களுக்குப் பயன்படுத்தக் கூடும்.

தமிழகத்தில்காங்கிரஸ் கட்சி மிகவும் பலவீனமாகக் காணப்பட்ட காரணத்தால் இலங்கை அரசு மீது அழுத்தங்களைப் பிரயோகித்து அதன் மூலம் வடக்குத் தமிழர்களின் நன்மதிப்பை பெற்றுக்கொண்டு அதன் ஊடாகத் தமிழக மாநில மக்களின் அனுதாபத்தைப் பெற்றுக்கொள்ள ராஜீவ் முயற்சித்தார்.- என்றுதெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# அத்துரலியவை பதவி துறக்குமாறு கோருகிறது ஜாதிக ஹெல உறுமய



கொழும்பு, ஜன.28

நாடாளுமன்ற உறுப்புரிமையைத் துறக்குமாறு ஜாதிக ஹெல உறுமய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஜாதிக ஹெல உறுமய கட்சியின் ஹெடிகல விமலசார தேரர் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

கட்சியின் மத்திய செயற்குழுவின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் தேசியப் பட்டியல் ஆசனமொன்று அத்துரலிய ரத்ன தேரருக்கு வழங்கப்பட்டது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ரத்ன தேரர் கட்சியை விட்டு விலகி சுயாதீனமாகச் செயற்பட உள்ளார் என்று அண்மையில் அறிவித்திருந்தார். இந்த நிலையில் நாடாளுமன்ற உறுப்புரிமையை ரத்ன தேரர் துறக்க வேண்டும் என்று விமலசார தேரர் கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மலையக மக்கள் முன்னணியில் இணைந்தார் சந்திரசேகரனின் மகள்

## கட்சியின் உயர்பீட உறுப்பினராகவும் பதவியேற்பு



கொழும்பு, ஜன.28

மலையக மக்கள் முன்னணியின் ஸ்தாபகத் தலைவர் பெரியசாமி சந்திரசேகரனின் வழியில் தனது அரசியல் பயணத்தை முன்னெடுக்கவுள்ளார் என்று சந்திரசேகரனின் புதல்வி அனுசா தர்சினி சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

மலையக மக்கள் முன்னணியில் இதுவரை வகித்து வந்த பதவிகளில் இருந்து சாந்தினி சந்திரசேகரன் சுயமாக விலகிய நிலையில், மலையக மக்கள் முன்னணியின் உயர்பீட உறுப்பினராக அமரர் சந்திரசேகரனின் புதல்வி அனுசா தர்சினி சந்திரசேகரன் நேற்று முன் தினம் முன்னணியின் தலைவரும் ராஜாங்க அமைச்சருமான இராதாக்கிருஷ்ணன் முன்னிலையில் பதவியேற்றுக் கொண்டார்.

இது தொடர்பான ஊடகவியலாளர் சந்திப்பு கொழும்பு அபேகமவில் நேற்று முன்தினம் இடம் பெற்றது.

இதில்கலந்துகொண்டு உரையாற்றிய அவர்- மலையக இளைஞர், யுவதிகளின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முழு முயற்சியுடன் செயற்படவுள்ளளார் என்றும் குறிப்பிட்டார். அத்துடன் மலையகத்தமிழ் மக்களுக்கு அப்பால் இலங்கைத்தமிழ் மக்களுக்காகத் தாம் செயற்படவுள்ளார் என்றும் குறிப்பிட்டுள்ளார்.(ஐ)

# சட்டவிரோத முகவர்களாகச் செயற்பட்ட சந்தேகநபர்களில் மூன்று பேர் விடுவிப்பு

ரொறன்டோ, ஜன.28

சட்ட விரோதமாகத் தமிழர்கள் 500 பேரை கனடாவுக்கு அழைத்து வந்தனர் என்று குற்றம் சுமத்தப்பட்டிருந்த நான்கு பேரில் மூவர் குற்றமற்றவர்கள் என்று உச்ச நீதிமன்றத்தால் கண்டறியப்பட்டுள்ளது.

குனாரொபின்சன் கிறிஸ்துராஜா, லெஸ்லி இம்மானுவேல், நடராஜா மகேந்திரன் மற்றும் தம்பீர்நாயகம் ராஜரட்ணம் ஆகியோர் மீது கனடா குடிவரவு மற்றும் அகதிகள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் குற்றம் சுமத்தப்பட்டது.

2010 ஆம் ஆண்டு, 380 ஆண்கள், 63 பெண்கள் மற்றும் 49 சிறுவர்கள் அடங்கலாக 492 பயணிகள் கப்பல் மூலம் கனடாவுக்கு அழைத்து வரப்பட்டமை தொடர்பில், இந்த நால்வருக்கும் எதிராக அங்கு உச்ச நீதிமன்றத்தில் கடந்த ஒக்டோபர் மாதம் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

ஓர் ஆண்டுக்குள் இரண்டு முறை அந்த பகுதிக்கு அகதிகளை ஏற்றிச் சென்ற கப்பலாக ''சண் சீ கப்பல் அனைவரதும் கவனத்தையும் ஈர்த்துள்ளது.

கடந்த புதன்கிழமை இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது லெஸ்லி இம்மானுவேல், நடராஜா மகேந்திரன் மற்றும் தம்பீர்நாயகம் ராஜரட்ணம் ஆகியோர் குற்றமற்றவர்கள் என்று ஜூரி, நீதிவானுக்கு அறிவித்துள்ள நிலையில், அவர்கள் குற்றமற்றவர்கள் என்று அறிவிக்கப்பட்டது.

குனாரொபின்சன் கிறிஸ்துராஜா தொடர்பில் தகவல் அறிய முடியவில்லை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கிறிஸ்துராஜா என்பவர் சண் சீ கப்பலுக்குச் சொந்தக்காரராக இருந்துள்ளார். இம்மானுவேல் அந்தக் கப்பலின் தலைவராகச் செயற்பட்டுள்ளார்.

தனது தரப்பினரான கிறிஸ்துராஜா, பயணிகளிடம் இருந்து பணம் பறித்துக் கொண்டமைக்கான எவ்வித ஆதாரமும் இல்லை என்று அவரது வழக்கறிஞர் தெரிவித்துள்ளார்.

இலங்கை, உள்நாட்டு யுத்தத்தின் போது அடக்குமுறையிலிருந்து தமிழ் மக்கள் தப்பிப்பதற்கு மனிதாபிமான உதவிகளை வழங்கியுள்ளார் என்று வாதி கிறிஸ்துராஜாவின் வழக்கறிஞர் வாதிட்டுள் ளார் என்று தெரிவிக்கப் படுகின்றது. எனினும் அவர் நிரபராதி என்று நீதிமன் றம் அறிவிக்க வில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மருந்து வகைகளை இறக்குமதி செய்யும் முழுப்பொறுப்பையும் அரசே ஏற்க வேண்டும்

## நாடாளுமன்றில் டக்ளஸ்



கொழும்பு, ஜன.28

- இலங்கைக்குத் தேவையான மருந்துகள் இனம் காணப்படல் வேண்டும். அந்த மருந்து வகைகளை இறக்குமதி செய்யும் முழுப் பொறுப்பும் அரசால் மட்டுமே நிறைவேற்றப்பட வேண்டும்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றும் போது அவர் மேலும் கூறியதாவது:-

இறக்குமதியை நிறுத்தும் நோக்குடன் படிப்படியாக உள்நாட்டில் மருந்து வகைகளை உற்பத்தி செய்வதை விருத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

அத்துடன், தாதியர்கள், மருந்தாளர்கள், ஆய்வு கூடம்மற்றும்இயன்முறை மருத்துவ கற்கைகள் சார்ந்தோர் தொடர்பான துறையை யாழ். பல்கலைக்கழகத்தில் அமைப்பதற்கும், நாட்டின் முதியோர்களின் நலன் கருதி முதியோர்களுக்கான தனியான ஒரு மருத்துவமனையை உருவாக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

யாழ்ப்பாணத்தில்சிறுவர்களுக்கான தனியான ஒரு மருத்துவமனையை உருவாக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

வீதி விபத்துக்கள் ஏற்படும் நிலையில், விபத்துக்குள்ளாகி நபர்களை வைத்தியசாலையில் சேர்ப்பதற்கு மக்கள் முன்வராத நிலையே நாட்டில் காணப்படுகின்றது.

சட்டம் ஒழுங்குகள் தொடர்பில் ஏற்படுத்தப்படும் சிக்கல்களை மனதில் கொண்டு இவ்வாறான செயற்பாடுகளின் போது உதவிகள் செய்ய முன்வராத நிலையே காணப்படுகின்றது.

எனவே, இவ்வாறான நிலையை மாற்றத்தக்க வகையில்ஏற்பாடுஒன்றை கொள்கையாக வகுக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.- என்றார். (ஐ)

# 3 நாள் விஜயம் மேற்கொண்டு வடக்கு வருகிறார் அமைச்சர் ராஜித

கொழும்பு, ஜன.28

வடக்கு மாகாண வைத்தியசாலைகளில் உள்ள பிரச்சினைகள் - குறைப்பாடுகள் தொடர்பில் ஆராய்வதற்காக 3 நாள்கள் பயணம் மேற்கொண்டு சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன வடக்குக்கு விஜயம் செய்யவுள்ளார்.

பெப்ரவரி மாதம் 18 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதிவரை தம்மைச் சந்தித்து சுகாதாரம் சார்ந்த பிரச்சினைகளைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் எடுத்துரைக்கலாம் என்றும் அவர் கூறியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற மருத்துவ (திருத்தச்) சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றியபோதே இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

இந்த விவாதத்தின் போது, நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள வைத்தியசாலைகளில் நிலவும் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டினார்.

இதற்குப் பதிலளித்த போதே சுகாதார அமைச்சர் இந்த விடயங்களைக் கூறினார். வடக்கில் பெப்ரவரி 18,19,20 ஆகிய திகதிகளில் தங்கியிருப்பேன். வைத்தியசாலைகளில் நிலவும் பிரச்சினைகள் பற்றியும் இதன் போது ஆராய்வேன். அப்போது சகல விதமான சுகாதாரப் பிரச்சினைகள் தொடர்பாகவும் என்னிடம் தெரிவிக்கலாம். - என்றார். (ஐ)

## பாலியல் முறைப்பாடு காரணமாக மேகாலயா ஆளுநர் ராஜினாமா!



மேகாலயா மாநில ஆளுநர் வி.சண்முகநாதன் மீது எழுந்துள்ள பாலியல் முறைப்பாடு காரணமாக அவர் திடீரென்று ராஜினாமாச் செய்தார்.

2015 ஆம் ஆண்டு மே மாதம் மேகாலயா மாநில ஆளுநராகச் சண்முகநாதன் நியமிக்கப்பட்டார். அவர், தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் முதல் இவர் அருணாசல பிரதேச ஆளுநர் பொறுப்பையும் மேலதிகமாகக் கவனித்து வந்தார்.

இந்தநிலையில் ஆளுநர் மாளிகைக்குரிய மாண்பைக் குறைக்கும் வகையில், அதை இளம் பெண்களின் கேளிக்கை மன்றமாக சண்முகநாதன் மாற்றிவிட்டார் என்று மேகாலயா ஆளுநர் மாளிகை ஊழியர்கள் குற்றம் சாட்டியிருந்தனர்.

இளம்பெண்கள் வந்து செல்லும் இடமாக, ஆளுநர் மாளிகை மாறிவிட்டது. அவர்களில் பலர், சண்முக நாதனின் அறைக்கே நேரடியாகச் செல்ல முடியும் என்றும் ஆளுநர் மாளிகை ஊழியர்கள் குற்றம் சாட்டியிருந்தனர்.

98 ஊழியர்கள் கையெழுத்திட்டு, ஜனாதிபதி, பிரதமர் ஆகியோருக்கு கடிதம் அனுப்பி இருந்தனர்.

அதையடுத்து ஆளுநர் சண்முகநாதன் தனது பதவியை நேற்றுமுன்தினம் இரவு ராஜினாமா செய்தார்.

இதனை மேகாலயா அரசு வட்டாரங்கள் ஊர்ஜிதம் செய்துள்ளன. (எ)

## தமிழக அரசிடம் விளக்கம் கோரும் தேசிய மனித உரிமை ஆணைக்குழு

### ஏறுதழுவுதல் போராட்டத்தில் ஈடுபட்டவர்களை வெளியேற்றும் நடவடிக்கைகளின் போது இடம்பெற்றவை தொடர்பில்

THE NATIONAL HUMAN RIGHTS COMMISSION India

சென்னை, ஜன.28

ஏறுதழுவுதல் போராட்டத்தில் ஈடுபட்டவர்களை வெளியேற்றிய நடவடிக்கையின் போது மனித உரிமைகள் மீறப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து தேசிய மனித உரிமை ஆணைக்குழு தமிழக அரசிடம் விளக்கம் கோரியுள்ளது.

ஏறுதழுவுதலுக்கு ஆதரவாக தமிழகம் முழுவதும் மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் தொடர் போராட்டம் மேற்கொண்டிருந்த நிலையில் நிரந்தரச் சட்டம் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து பல இடங்களில் போராட்டக்காரர்கள் தமது போராட்டத்தை வாபஸ் பெற்றனர்.

இந்தநிலையில், சென்னை மெரினா கடற்கரையில் போராட்டத்தில் ஈடுபட்டவர்களை வெளியேற்றும் போது பொலிஸார் போராட்டக்காரர்கள் மீது நடத்திய தடியடியில் மாணவர்கள் பலர் காயமடைந்தனர். தடியடியைக் கண்டித்துப் பல பகுதிகளில் மக்கள் போராட்டம் நடத்தியவேளை அவர்கள் மீது பொலிஸார் கல் வீசி தாக்குதல் நடத்தினர்.

மெரினா கடற்கரை அருகே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள்கள், ஓட்டோக்கள் உள்ளிட்ட வாகனங்களை பொலிஸார் தடியால் அடித்து நொறுக்கியுள்ளனர். மேலும் ஓட்டோக்களுக்குப் பொலிஸாரே தீ வைக்கும் சம்பவங்களும் நடைபெற்றுள்ளன.

இந்தநிலையில், வன்முறை ஏற்பட்டபோது பொலிஸார் எடுத்த நடவடிக்கை தொடர்பில் விளக்கம் கேட்டுத் தமிழக தலைமைச் செயலர் மற்றும் பொலிஸ் இயக்குநர் ஆகியோருக்குத் தேசிய மனித உரிமைகள் ஆணையம் கடிதம் அனுப்பியுள்ளது.

அத்துடன் போராட்டம் நடைபெற்ற மெரினா கடற்கரையில், தமிழ்நாடு மனித உரிமை ஆணையக் குழுவினர் நேற்றுமுன்தினம் ஆய்வு செய்தனர்.

அத்துடன் போராட்டத்தின் போது தடியடி நடத்தப்பட்டமை தொடர்பிலும், பொலிஸ் நிலையம் தீ வைக்கப்பட்டமை உள்ளிட்ட வன்முறைச் சம்பவங்கள் குறித்தும் அவர்கள் விசாரணை நடத்த உள்ளனர். (எ)

## ஏறுதழுவுதல் போராட்டத்தில் ஓசாமா பின்லேடனின் படமும்!

### தமிழக முதல்வர் சட்டசபையில் தெரிவிப்பு

சென்னை, ஜன.28

ஏறுதழுவுதல் போராட்டத்தில், போராட்டக்காரர்கள் பயங்கரவாதி ஓசாமா பின்லேடனின் படத்தையும் ஏந்தி இருந்தனர் என்று தமிழக முதல்வர் பன்னீர்செல்வம் தெரிவித்தார்.

கடந்த வாரத்தில் சென்னை, மெரினா கடற்கரையில் நடந்த ஏறுதழுவுதல் போராட்டத்தில் சமூக விரோதிகள் பங்கேற்றனர் என்று முறைப்பாடு எழுந்தது. இந்தநிலையில் சட்டசபையில் எதிர்க்கட்சி தலைவர் மு.க., ஸ்டாலின் இதுகுறித்து நேற்று விளக்கம் கேட்டார். இதற்குப் பதில் அளித்த முதல்வர்.-

**சபாநாயகரிடம் ஆதாரம்**

அமைதியான முறையில் நடந்த போராட்டத்தை சமூக விரோதிகள் தவறான முறையில் திசை திருப்பினர். திசை மாறியதால் தான் தடியடி நடத்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. பொலிஸ் நிலையத்துக்கு அருகே வன்முறைக் கும்பல் தீவைத்தது. போராட்டக்காரர்கள் ஓசாமா பின்லேடன் படத்தை வைத்திருந்தனர். இதுதொடர்பில் சபாநாயகரிடம் சில ஆதாரங்களை வழங்கியுள்ளேன்.

**தனித்தமிழ்நாடு கோஷம்**

அரசு விளக்கம் அளித்தும் போராட்டம் ஓயவில்லை. தடுப்பு வேலிகளைத் தாண்டியதால் தான் கண்ணீர் புகைக் குண்டு வீசப்பட்டது. கலவரம் தொடர்பாக 66 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. 251 பேர்கைது செய்யப்பட்டுள்ளனர். பொலிஸ் நடவடிக்கையால் மக்களின் உயிர் உடைமைகள் பாதுகாக்கப்பட்டன. ஏறுதழுவுதல் போராட்டத்தில் காவிரி பெரியாறு பிரச்சினைகளை எழுப்பினர். தனித்தமிழ்நாடு கோஷமும் எழுப்பப்பட்டது.

**விசாரணை**

சட்டவிரோதக் கும்பல், ஐஸ் ஹவுஸ் வீதி ஔவை சண்முகம் வீதி ஆகியவற்றை நோக்கிச் செல்ல முயற்சி செய்தனர். மெரினா செல்ல முயன்ற பொலிஸார்மீது கல் வீசப்பட்டது. இவ்வாறு வன்முறையில் ஈடுபட்டவர்களால் பொலிஸார் நடவடிக்கை எடுத்தனர். பொலிஸார் அத்துமீறினர் எனக் கூறப்படும் முறைப்பாடு குறித்து விசாரணை நடத்தப்படும். உண்மையிருந்தால் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார் முதலமைச்சர் பன்னீர் செல்வம். (எ)

## ஏறுதழுவுதல் வழக்கு விசாரணை ஜன.31 இல்

டில்லி, ஜன.28

ஏறுதழுவுதல் தொடர்பான வழக்கு விசாரணை எதிர் வரும் 31 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

2016 ஆம் ஆண்டு அறிக்கையைத் திரும்பப் பெறுவதாக மத்திய அரசு உச்ச நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கு விசாரணை நடத்தப்படுகிறது.

மத்திய அரசின் முடிவு பற்றி அற்றோனி ஜெனரல் முகில் ரோகத்ஹி உச்ச நீதிமன்றத்தில் எடுத்துக்கூற உள்ளார்.

ஏறுதழுவுதல் தொடர்பான அனைத்து வழக்குகளும் எதிர் வரும் 31 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட உள்ளன. (எ)

## இந்தியாவில் முதன்முறையாக கடலுக்கடியில் நடந்த திருமணம்!



இந்தியாவிலேயே முதல் முறையாகக் கடலுக்கு அடியில் ஒரு தம்பதி நேற்று முன்தினம் திருமணம் செய்து கொண்டது.

மராட்டிய மாநிலத்தைச் சேர்ந்த நிகில் பவார், கேரள மாநிலம் கோவளத்தில் நீச்சல் வீரராக இருக்கிறார்.

இந்தநிலையில் ஸ்லோவோக்கியா நாட்டைச் சேர்ந்த யுனிகா போச்ரான் என்பவர் கோவளத்துக்குச் சுற்றுலா வந்த போது நிகில் பவாருடன் பழக்கம் ஏற்பட்டது.

இருவருக்கும் இடையிலான இந்த நட்பு பின்னர் காதலாக மாறியது. இதனால் இருவரும் திருமணம் செய்து கொள்ள முடிவெடுத்தனர்.

மகாராஷ்டிரா மாநிலம் சென்று பதிவுத்திருமணம் செய்து கொண்ட அவர்கள், திருமணத்தை வித்தியாசமாகச் செய்ய நினைத்தனர்.

அதன்படி, கடலுக்கு அடியில் சென்று திருமணம் செய்யலாம் என்று முடிவெடுத்து இதற்கான ஏற்பாடுகளையும் செய்தனர்.

அதைத் தொடர்ந்து அவர்கள் நேற்றுமுன்தினம் கடலுக்கு அடியில் சென்று திருமணம் செய்து கொண்டனர்.

கடலில் பயணம்செய்வதற்காகப் பயன்படுத்தப்படும் ஸ்கூபா உடைகளை திருமண ஆடையாக மணமக்கள் இருவரும் அணிந்திருந்தனர்.

சங்குகளால் செய்யப்பட்ட மாலைகளை மாற்றியும் விரலில் மோதிரம் அணிவித்தும் திருமணம் செய்து கொண்டனர்.

இது இந்தியாவில் கடலுக்கு அடியில் நடைபெற்ற முதல் திருமணம் என்று விழா ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (எ)

## இந்தியாவுக்கான ரஷ்யத்தூதுவர் காலமானார்



உடல் நலக்குறைவால் அண்மைக்காலமாகப் பாதிக்கப்பட்டிருந்த இந்தியாவுக்கான ரஷ்யத் தூதர் அலெக்சாண்டர் கடாகின் டில்லியில் உள்ள தனியார் மருத்துவமனையில் (வயது 67) காலமானார்.

2009 ஆம் ஆண்டில் இருந்து இந்தியாவுக்கான ரஷ்யத் தூதராக அலெக்சாண்டர் கடாகின் பணியாற்றி வருகிறார்.

அதேபோல், முன்னர்1999-2004 ஆம் ஆண்டு வரையும் அவர் இந்தியாவுக்கான தூதராக பணியாற்றி இருந்தார். அவரின் மறைவுக்கு பிரதமர் மோடி இரங்கல் தெரிவித்துள்ளார். (ஏ)

## வல்லரசுகள் நாடுகள் வரிசையில் ஆறாம் இடத்தில் இந்தியா!

டில்லி, ஜன.28

உலக வல்லரசு நாடுகள் பட்டியலில் இந்தியாவுக்கு 6 ஆவது இடம் கிடைத்துள்ளதாக பிரபல அமெரிக்க பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

பிரபல அமெரிக்க மாதாந்தப் பத்திரிகையான அமெரிக்கன் பாரின் பொலிசி, 2017 ஆம் ஆண்டுக்கான உலகின் எட்டு வல்லரசு நாடுகள் பட்டியலைத் தயாரித்தது.

அந்தப் பத்திரிகை நடத்திய ஆய்வின் அடிப்படையில் இந்தியாவுக்கு 6 ஆம் இடம் கிடைத்துள்ளது.

அந்தப் பத்திரிகை நடத்திய ஆய்வின் அடிப்படையில் 2017 ஆம் ஆண்டுக்கான வல்லரசு நாடுகளில் முதலாவது இடத்தில் அமெரிக்கா, 2 ஆம் இடத்தில் சீனா மற்றும் ஜப்பான், நான்காம் இடத்தில் ரஷ்யா, 5 ஆம் இடத்தில் ஜேர்மனி, 7 ஆவது இடத்தில் ஈரான் மற்றும் இஸ்ரேல் 8 ஆம் இடத்திலும் உள்ளன.

இந்தியாவைப் பற்றி அந்தப்பத்திரிகை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், உலகின் மிகப்பெரிய குடியரசு நாடாக இந்தியா விளங்குகிறது. ஆங்கிலம் பேசும் மக்கள் தொகையில் இந்தியா 2 ஆம் இடத்தில் உள்ளது.

பிரதமர் மோடியின் சிறப்பான ஆட்சியில் தொழில்துறை மற்றும் பொருளாதார வளர்ச்சியில் வேகமான முன்னேற்றம் கண்டுள்ளது என்றுள்ளது. (எ)

# தீவிரவாதிகளை விசாரிக்க கொடூர விசாரணை முறை

## தீவிரமாகப் பரிசீலிக்கிறார் ட்ரம்ப்

வொஷிங்டன், ஜன.28

அமெரிக்காவில் தீவிரவாதிகளை விசாரிக்க கொடூர விசாரணை முறையைக் கொண்டுவர, தீவிரமாகப் பரிசீலிக்கின்றேன். அத்துடன், குத்திய முள்ளை முள்ளைக் கொண்டு தான் எடுக்க வேண்டும் என்பதை தான் ஆழமாக நம்புகின்றேன் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஊடகம் ஒன்றுக்கு அளித்த செவ்வியிலேயே ட்ரம்ப் இவ்வாறு கூறியுள்ளார். அந்த செவ்வியில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-



''ஐ.எஸ். தீவிரவாத இயக்கத்தினர் தமது போராட்டங்களையும், தண்டனைகளையும் நடைமுறைப்படுத்துகின்றனர். அதனால் அதற்கு பரிகாரம் செய்யும் வகையிலான முறையில் வாட்டர் போர்டிங் சித்திரவதை முறையை மீண்டும் கொண்டுவருவதற்கு முயற்சிக்கின்றேன்.

''அமெரிக்காவில் தீவிரவாதத்தை ஒடுக்குவதற்கும், தீவிரவாதக் குற்றவாளிகளை விசாரிப்பதற்கும் முன்னாள் ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ. புஷ் வாட்டர்போர்ட் எனும் சித்திரவதை முறையை நடைமுறைப்படுத்தியிருந்தார். இருப்பினும் முன்னாள் ஜனாதிபதி ஒபாமா இந்தக் கொடூர சித்திரவதை முறைகளுக்குத் தடையை ஏற்படுத்தியிருந்தார்.

''இந்தநிலையில், வேற்று மதங்களைச் சேர்ந்த அப்பாவி மக்களை ஐ.எஸ். தீவிரவாதிகள் தலையைத் துண்டித்து படுகொலை செய்கிறார்கள். இந்தநிலையில், நாம் அதற்கேற்ற முறையிலேயே விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும். அத்தோடு முள்ளை முள்ளால்தான் எடுக்கவேண்டும் என்பதை தான் முழுமையாக நம்புகின்றேன்.''-என்றார்.

''இந்த விசாரணை முறையால் கைதிக்கு ஒரு கட்டத்தில் நுரையீரல் சேதம், மூளைச் சேதம் என்பன ஏற்படுவதோடு, சில வேளைகளில் உடல் அசைவுகள் அதிகமானால் எலும்பு உடைவுகள் மற்றும் உயிராபத்துகள் ஏற்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

## ட்ரம்ப் ஜனாதிபதியானதை அடுத்து நெருக்கடியில் ராஜாங்கத் திணைக்களம்

### சிரேஷ்ட அதிகாரிகள் பலர் பதவி துறப்பு



அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் பதவி ஏற்று, முதல் வார காலப் பகுதியிலேயே, அந்த நாட்டின் ராஜாங்கத் திணைக்களத்தில் உள்ள முக்கிய சிரேஷ்ட அதிகாரிகள் பதவி விலகியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ராஜாங்கத் திணைக் களத்தின் நிர்வாகப் பிரிவைச் சேர்ந்த முக்கியஸ்தர்கள் பலர் குழுவாக விலகிச் செல்கின்றனர் என்று கூறப்படுகிறது. மேலும் அவர்களே ராஜாங்கத் திணைக்களத்தின் சுமுக நகர்வுக்குக் காரணமாக இருந்தவர்கள் என்றும் கூறப்படுகின்றது.

இவ்வாறு அவர்களின் பதவிவிலகல் புதிதாக ராஜாங்கச் செயலாளராகப் பதவி ஏற்கவுள்ள றெக்ஸ் தில்லர்சனுக்குப் பெரும் நெருக்கடியை ஏற்படுத்தும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. டொனால்ட் ட்ரம்ப் குறித்துப் பல்வேறு தரப்பினரால் தற்போது அதிருப்தி வெளியிடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ)

## ஆப்கனில் கடும் பனிப்பொழிவு; ஒருவாரத்தில் 30 பேர் சாவு!

### டார்சர் மாவட்டத்தில் வெப்பநிலை பூஜ்ஜியம் டிகிரி

காபூர், ஜன.28

ஆப்கானிஸ்தானில் கடும் பனியால் ஒரு வாரத்துக்குள் 27 குழந்தைகள் உட்பட 30 பேர் பலியாகினர். இந்த மரணங்கள் அங்கு பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

வட ஆப்கானிஸ்தான் ஜாவ்ஸ் ஜான் மாகாணத்திலுள்ள டார்சாட் மாவட்டத்தில் அதிக பனிப் பொழிவு இடம்பெற்றுள்ளது. இந்த நிலையில், அந்தப் பிராந்தியத்தின் வெப்ப நிலை பூஜ்ஜியம் டிகிரிக்குக் குறைவாக உள்ளது.

இந்தக் காலநிலையால் அந்தப் பிராந்தியத்திலுள்ள சுமார் 700 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. மேலும் குளிர் தாங்கமுடியாமல் ஒருவார இடைவெளியில் 27 குழந்தைகள் உட்பட 30 பேர் உயிரிழந்துள்ளனர்.



மேலும் பாதிக்கப்பட்ட கிராமங்களில் இருந்து சுகாதார மையங்களுக்குச் செல்லும் வீதிகள் பனிக்கட்டிகளால் நிரம்பியுள்ளன என்றும், 50 செ.மீ. அளவுக்கு மேல் பனிப்பொழிவு நிகழ்ந்துள்ளதால் மக்கள் வெளியே நடமாட முடியாத நிலை உருவாகியுள்ளது என்றும் அந்த நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (எ)

## பிரிட்டன் அரசு பிரேரணை வெளியீடு

### ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து விலகுவதற்கான

லண்டன், ஜன.28

ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் வெளியேறுவதற்கான அதிகாரபூர்வ நடவடிக்கைகளை ஆரம்பிப்பற்கு நாடாளுமன்றத்தின் ஒப்புதல் கோரும் வரைவுப் பிரேரணை ஒன்றைப் பிரிட்டன் அரசு வெளியிட்டுள்ளது.

இந்த விவகாரத்தில் முடிவெடுக்க நாடாளுமன்றத்துக்குத்தான் அதிகாரம் உள்ளது.

ஆனால் அரசுக்கு இல்லை என்று கடந்த செவ்வாய்க்கிழமை உச்சநீதி மன்றம் உத்தரவு பிறப்பித்திருந்த நிலையில் அரசு இந்தநடவடிக்கையை எடுத்துள்ளது.

இதற்கிடையே, ஐரோப்பிய நாடாளுமன்றத்தைச் சேர்ந்த நெதர்லாந்து நாட்டு உறுப்பினர் ஒருவர், பிரிட்டனில் தொடர்ந்து தங்க நினைக்கும் ஐரோப்பிய ஒன்றியப் பிரஜைகளுக்கு ராஜ்ஜியத் தடைகளை பிரிட்டன் அரசு விதிப்பதாக குற்றஞ்சாட்டியுள்ளார். (எ)



ஆஸ்திரேலிய தினம் ஜனவரி 26 ஆம் திகதி கொண்டாடப்படுகிறது. இந்தநிலையில் ஆஸ்திரேலிய பூர்வீகக் குடிமக்களைச் சேர்ந்த ஒரு பிரிவினர் தங்களது நாடு அந்நியர்களின் ஆக்கிரமிப்புக்கு உள்ளான தினம் என்று எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். ஆஸ்திரேலிய தினமான நேற்றுமுன்தினம் எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் ஆயிரக்கணக்கானோர் ஒன்று கூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஆஸ்திரேலியாவின் சிட்னி, மெல்பேர்ன், பிரிஸ்பேர்ன் உள்ளிட்ட நகரங்களில் இந்தப் போராட்டம் நடைபெற்றது.

## அமெ. பயணத்தை ரத்துச் செய்தார் மெக்சிக்கோ ஜனாதிபதி

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் டுவிட்டர் பதிவைத் தொடர்ந்து, தனது அமெரிக்கப் பயணத்தை மெக்சிக்கோ ஜனாதிபதி பீனா நீட்டோ ரத்துச் செய்துள்ளார்.

அமெரிக்கா-மெக்சிக்கோ இடையில் எல்லைப்பாது காப்புச் சுவர் அமைக்க வேண்டும் என்றும், அதற்கான செலவை மெக்சிக்கோ ஏற்கவேண்டும் என்றும் ட்ரம்ப் கூறியிருந்தார். எனினும்சுவர்கள்மீது மெக்சிக்கோவுக்கு நம்பிக்கை இல்லை.எப்போதுமே அதற்கான செலவை ஏற்கப் போவதில்லை என்று மெக்சிக்கோ ஜானாதிபதி அறிவித்தார்.

சுவருக்கான செலவை ஏற்க விருப்பமில்லை எனில் அமெரிக்கப் பயணத்தை ரத்து செய்து விடுங்கள் என்று மெக்சிக்கோ ஜனாதிபதிக்கு, ட்ரம்ப் தனது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்திருந்தார். ட்ரம்ப்பின் இத்தகைய பதிவைத் தொடர்ந்து மெக்சிக்கோ ஜனாதிபதி பீனா நீட்டோ, அவரது அமெரிக்க பயணத்தை ரத்துச் செய்துவிட்டார்.

### பச்சிலைப்பள்ளிபிரதேச பண்பாட்டுப் பெருவிழா

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தின் பண்பாட்டுப்பெருவிழா எதிர்வரும் 31 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை பிற்பகல் 2 மணிக்கு வேம்பொடு கேணி சி.த.க. பாடசாலையில் இடம்பெறவுள்ளது.

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலரும் கலாசாரப் பேரவையின் தலைவருமான திருமதி ப.ஜெயராணி தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சு.அருமைநாயகமும், சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் சி.சத்தியசீலன், வடமாகாண கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் திருமதி செ.வனஜா ஆகியோரும் கலந்து கொள்வர்.

நிகழ்வில் பசுந்துளிர் என்ற நூல் வெளியீட்டும் இடம்பெறவுள்ளது. அத்துடன் பிரதேச கலைஞர்கள் 'கலைத் தென்றல்' விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர். (ஐ-21)

# போரால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் வாழ்வாதாரம் மீளமைக்கப்பட வேண்டும்

## இனம் சார்ந்த முன்னேற்றத்துக்கு இது அவசியம் என்கிறார் மாகாணசபை உறுப்பினர் விந்தன்



யாழ்ப்பாணம், ஜன.28

போரால் பாதிக்கப்பட்ட எமது மக்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்ப வேண்டியது அவசியம். இதற்கு மாகாண மட்டத்தில் துரிதகதியில் அர்ப்பணிப்புடன்செயற்படவேண்டும்.

இவ்வாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் தெரிவித்தார்.

போரால் பாதிக்கப்பட்டவறுமை நிலையில் உள்ள யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட இருபது குடும்பங்களுக்கு கடந்த செவ்வாய்க்கிழமை 20 தையல் இயந்திரங்களைத் தனது பிரமாண நிதியில் ஒதுக்கீடு செய்து வழங்கினார்.

நயினாதீவு, நாரந்தனை, புளியங்கூடல், தம்பாட்டி, மாதகல், நெடுந்தீவு, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம் போன்ற பிரதேசங்களைச் சேர்ந்த பயனாளிகளுக்கே இந்தத் தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டன. கிராம அபிவிருத்தித் திணைக்களத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில், உதவிகளை வழங்கி அவர் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றும் போதே தெரிவித்தவை வருமாறு:-

போரால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதை எமது தலையாய கடமையாக நாம் மேற்கொள்ளவேண்டியுள்ளது.

போர்காரணமாக எமது மக்கள், உடைமைகள் மற்றும் தொழில் செய்வதற்கான அடிப்படைக் கட்டுமானங்கள் என்பவற்றை இழந்துள்ளனர். அவ்வாறு இழந்துநிற்கும் மக்களை மீண்டும் வாழ்வாதார ரீதியில் மீள்விப்பதற்கு நாட்டின் ஆட்சியாளர்கள் தயாரில்லை.

போரில் மக்களின் உயிர்களையும் உடைமைகளையும் அழித்தது இலங்கை அரசேயாகும்.

இலங்கையில் இனமுரண்பாடுகளைத் தீர்க்காது மீண்டும் மீண்டும் இன ஒடுக்குமுறையை இராணுவ பலம் கொண்டு எம்மில் பிரயோகித்தமை காரணமாகவே நாம் ஆயுத மேந்தவேண்டி வந்தது. அந்த ஆயுதப் போராட்டத்தை போரியல் நீதிக்கு மாறாக அரசு ஒடுக்கியது. அவ்வாறு ஒடுக்கியதுடன் மட்டும் கதை முடியவில்லை. எம்மை நடைப் பிணங்களாக வாழவைக்க வேண்டும் என்ற திட்டமிட்ட பின்புலத்துடன் எமக்கென்று இருந்த சகலதையும் அரசு அழித்துவிட்டது.

இவ்வாறு அழிக்கப்பட்டதன் விளைவு எம்மால் இன்று சராசரி வாழ்வாதாரத்தைக்கூடக் காப்பாற்ற முடியாத பேரவலத்துக்குள் நாம் தள்ளப்பட்டு நிற்கின்றோம்.

இந்த நிலையில், எமது வடக்கு மாகாண சபையும் அதன் உறுப்பினர்களான நாமும் எம்மால் இயன்ற உதவிகளைப் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆற்றுகின்றோம்.-என்றார். (ஐ)

# பூநகரி ஆதார வைத்தியசாலைக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீர்!

## சாயிபாபா மத்திய நிலையம் ஏற்பாடு

கொழும்பு சத்திய சாயி பாபா மத்திய நிலையத்தின்50ஆவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டுப் பல்வேறு சேவைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்த வகையில், பூநகரியிலுள்ள ஆதார வைத்திய சாலைக்குச் சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீர் சேவை வழங்கப்படவுள்ளது.

கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் வேண்டுகோளுக்கு அமைய, சுத்திகரிக்கப்பட்ட நீர் வழங்கும் சேவை பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி முற்பகல்11மணியளவில் அங்கு ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது என்று கொழும்பு ஸ்ரீ சத்ய சாயி பாபா மத்திய நிலையத்தின் தலைவர் எஸ்.என். உதய நாயகம் தெரிவித்துள்ளார்.

வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் இந்தத் திட்டத்தை ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் சேவைத் திட்டங்களான கல்வி, மருத்துவம், நீர் விநியோகம் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு இயங்கிவரும் சாயி நிலையம், சாயி பக்தர்களின் அனுசரணையில் இந்தத் திட்டத்தை வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# முல்லை. வர்த்தக நிலையங்களில் நள்ளிரவில் திருட்டுச் சம்பவங்கள்



முல்லைத்தீவு நகரில் நேற்று நள்ளிரவு இரண்டு வர்த்தக நிலையங்கள் உடைக்கப்பட்டுத் திருடப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவுப் பொலிஸ் நிலையத்துக்கு அருகில் உள்ள பல்பொருள் அங்காடி ஒன்றிலும் மற்றும் மாவட்ட செயலகத்துக்கு அருகில் உள்ள ஆடையகம் ஒன்றிலும் இந்தத் திருட்டுகள் இடம்பெற்றுள்ளன.

பல்பொருள் அங்காடியில் சுமார் 60 ஆயிரம் ரூபா பணமும் மற்றும் சிகரெட் வகைகளும் திருடப்பட்டுப் போயுள்ளன என்றும், ஆடை விற்பனை நிலையத்தில் ஆடைகள் திருடப்பட்டுள்ளன என்றும் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தத் திருட்டு சம்பவங்கள் தொடர்பில் முல்லைத்தீவுப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ-81)

### மாற்றுத் திறனாளிகள் அமைப்பின் ஆரம்பம்

தென்மராட்சிப் பிரதேச 'மாற்றுத் திறனாளிகளின் நிறுவனம்' என்னும் அமைப்பு இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு மறவன் புலோ கிழக்குப் பொது நோக்கு மண்டபத்தில் ஆரம்பிக்கப்படஉள்ளது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினர்களாக யாழ்.மாவட்டச் செயலர் நா. வேதநாயகனும், யாழ். மாவட்ட சமூக சேவைகள் ஒருங்கிணைப்பாளர் கிரிஷாந்தி விக்னேஸ்வரனும், வட மாகாணசபை உறுப்பினர் கே. சயந்தனும், சிறப்பு விருந்தினர்களாகத் தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி வேந்தினி பாபுவும், சாவகச்சேரி பிரதேச சபை செயலர் மு. கோடீஸ்வரனும் கலந்து கொள்வர்.

இந்த நிறுவனத்துக்குக் காணி அன்பளிப்பாக வழங்கிய நன்கொடையாளர் க.சண்முகநாதன், கைதடி நபீல் பாடசாலை ஓய்வுநிலை அதிபர் க.கோபாலகிருஷ்ணன் மற்றும் வடமராட்சி செவிப்புலனற்றோர் சங்கத் தலைவர் சு.செந்தில்நாதன் ஆகியோர் நிகழ்வில் உரையாற்றுவர். (ச)

### பழைய மாணவர் சங்கக்கூட்டம்

சித்தன்கேணி வட்டு. இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு வள்ளியம்மை மண்டபத்தில் நடைபெறும் என்று செயலாளர் அறிவித்துள்ளார். (ச)

# வவுனியாவில் கடும் மழையால் வெள்ளக்காடாக தாழ் நிலங்கள்!





வவுனியா, ஜன.28

வவுனியாவில் நேற்று முந்தினம் நள்ளிரவு முதல் பெய்த கடும் மழையால் தாழ் நிலப் பகுதிகள் வெள்ளக் காடாகியுள்ளன. மக்களின் இயல்பு வாழ்க்கை முழுமையாகப் பாதிப்படைந்துள்ளது.

மழை காரணமாகத் தாழ் நிலப் பகுதிகளில் வீதிகளில் வெள்ள நீர் பெருக்கெடுத்துப் பாய்ந்து வருகிறது. சில பகுதிகளில் மக்கள் குடிமனைகளுக்குள் வெள்ள நீர் புகுந்துள்ளது.

பூந்தோட்டம் நரசிங்கர் கோவிலடி, பெரியார் குளம், திருநாவற்குளம் ஆகிய பகுதிகளில் வெள்ளம் சில வீடுகளுக்குள் புகுந்துள்ளது.

வவுனியா நகர உள்வட்ட வீதியில் நேற்று அதிகாலை முறிந்து விழுந்த பெரிய மரத்தால் அப்பகுதியில் மின் விநியோக வயர்கள் அறுந்து மின் தடைப்பட்டுள்ளது. (ஐ-100)

# இந்தியாவுக்கு எதிரான இருபதுக்கு 20 போட்டியில் முழுத் திறமையை வெளிப்படுத்தி வெற்றி பெற்றோம்!

## இங்கிலாந்து அணியின் தலைவர் மோர்கன் மகிழ்ச்சி

கான்பூர், ஜன.28

இந்தியாவுக்கு எதிரான இருபதுக்கு 20 ஓவர் போட்டியில் முழு திறமையை வெளிப்படுத்தியதால் வெற்றி பெற்றோம் என்று இங்கிலாந்து அணித் தலைவர் மோர்கன் தெரிவித்துள்ளார்.

இந்தியா- இங்கிலாந்து அணிகள் மோதிய முதல் இருபதுக்கு 20 போட்டி நேற்றுமுன்தினம் கான்பூரில் இடம்பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா 20 ஓவர்களில் 7 விக்கெட் இழப்புக்கு 143 ஓட்டங்களை எடுத்தது. டோனி 36 ஓட்டங்களையும், சுரேஷ் ரெய்னா 34 ஓட்டங்களையும், கோஹ்லி 29 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பின்னர் விளையாடிய இங்கிலாந்து 18.1 ஓவர்களில் 3 விக்கெட் இழப்புக்கு 148 ஓட்டங்களை எடுத்து 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. அணித் தலைவர் மோர்கன் 51 ஓட்டங்களையும், ஜோரூட் 46 ஓட்டங்களையும் எடுத்து வெற்றிக்கு முக்கிய பங்கு



வகித்தனர்.

இந்த வெற்றி குறித்து இங்கிலாந்து அணித் தலைவர் மோர்கன் தெரிவித்தவை வருமாறு:-

இந்திய சுற்றுப் பயணத்தில் நாங்கள் பெற்ற முழுமையான வெற்றி இது வாகும். முழுத் திறமையை வெளிப்படுத்தி இருக்கிறோம். எங்களது பந்து வீச்சாளர்கள் சிறப்பாக செயல்பட்டனர். டைமல் மில்லஸ், ஜோர்டான் அணிக்கு என்ன தேவையோ அதைச் செய்தனர்.

சிறிய மைதானத்தில் இந்திய துடுப்பாட்டக்காரர்களுக்கு நன்கு நெருக்கடி கொடுத்தனர். மத்திய ஓவரில் மொயின் அலி பந்து வீச்சு அற்புதமாக இருந்தது. இதுதான் ஆட்டத்தின் முக்கியமானது. விராட் கோஹ்லி ஆட்டமிழந்தது தான் மிக திருப்புமுனையாக இருந்தது. சாம் பில்லிங்ஸ், ரோய் நல்ல தொடக்கத்தைக் கொடுத்தனர் என்றும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்த இருபதுக்கு 20 போட்டியில் தோல்வி அடைந்தமை குறித்து விராட் கோஹ்லி தெரிவித்தவை வருமாறு:-

எங்களை விட இங்கிலாந்து வீரர்கள் எல்லா வகையிலும் சிறப்பாக ஆடினர் என்பதை ஒப்புக் கொள்கிறேன். பந்து வீச்சு, களத்தடுப்பு, துடுப்பாட்டம் என அனைத்திலும் அபாரமாகச் செயல்பட்டனர். வெற்றிக்கு அவர்கள் தகுதியானவர்கள். எதிரணி நன்றாக ஆடும் போது எழுந்து நின்று பாராட்ட வேண்டும். அப்படி தான் இங்கிலாந்தின் ஆட்டம் அமைந்தது. கடின முனைப்புடன் கொஞ்சம் பவுன்சாக சரியான அளவில் பந்து வீசிய இங்கிலாந்து பந்து வீச்சாளர்களுக்கே ஒட்டுமொத்த சிறப்பும் உரித்தானது. இந்த ஆடுகளத்தில் 30 முதல் 35 ஓட்டங்கள் குறைவாக எடுத்து விட்டதாக நினைக்கிறேன். தவறுகளில் இருந்து வீரர்கள் பாடம் கற்றுக்கொள்ள வேண்டும்.

நான் தொடக்க ஆட்டக்காரராக இறங்கியதால், பேட்டிங் வரிசையை மேலும் சமப்படுத்த ஒரு வாய்ப்பு கிடைத்தது. அதாவது மத்திய வரிசையில் கூடுதலாக ஒரு துடுப்பாட்ட வீரரை சேர்க்க முடிந்தது. சூழ்நிலையை பொறுத்து அடுத்த ஆட்டத்தில் தொடக்க வீரராக ஆடுவது குறித்து முடிவு செய்வேன். ரோகித் சர்மா இருந்திருந்தால் ராகுலுடன் தொடக்க வீரராக இறங்கியிருப்பார் என்றும் தெரிவித்துள்ளார்.

## ஆஸ்திரேலியாவிடம் தோல்வி: பதவி இழக்கிறார் அசார் அலி!

இஸ்லாமாபாத், ஜன.28

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஒருநாள் போட்டி தொடரை இழந்ததையடுத்து அசார் அலியிடம் இருந்து அணித் தலைவர் பதவியை பறிக்க பாகிஸ்தான் கிரிக்கெட் சபை முடிவு செய்துள்ளது என்று தகவல் வெளியாகியுள்ளன.

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான 5 போட்டி கொண்ட ஒரு நாள் தொடரை பாகிஸ்தான் 1-4 என்ற நிலையில் இழந்தது.

இதனால், பாகிஸ்தான் ஒரு நாள் போட்டி அணி தலைவர் அசார் அலி நெருக்கடிக்கு ஆளாகி இருக்கிறார்.

ஒரு நாள் போட்டி அணிக்கு விக்கெட் காப்பாளர் சர்ப்ராஸ் அகமது புதிய தலைவராக நியமிக்கப் படவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, ஆஸ்திரேலியாவிற்கு எதிரான 5 ஆவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் மெதுவாக பந்து வீசியதால் அசார் அலிக்கு ஒரு போட்டியில் விளையாட தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியா - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான 5 ஆவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் முதலில் துடுப் பெடுத்தாடிய ஆஸ்திரேலியா 350ஓட்டங்களுக்கு மேல் குவித்தது.

பாகிஸ்தான் பந்து வீசும்போது குறிப்பிட்ட நேரத்திற்குள் பந்து வீச வில்லை. 2 ஓவர்களை குறிப்பிட்ட நேரத்திற்குள் வீசவில்லை.

இதனால் தலைவர் அசார் அலிக்கு 40 சத வீதம் அபராதமும் ஒரு போட்டியில் விளையாட தடையும் விதிக்கப் பட்டுள்ளது. இதனால் ஏப்ரல் மாதம் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிராக பாகிஸ்தான் விளையாடும் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் அசார் அலி விளையாட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.




## நியூஸிலாந்து தொடரிலிருந்து ஸ்மித் விலகுகிறார்!

மெல்போர்ன், ஜன.28

நியூஸிலாந்துக்கு எதிராக இடம்பெறவுள்ள டெஸ்ட் தொடரிலிருந்து ஆஸ்திரேலிய அணியின் தலைவர் ஸ்டீவன் ஸ்மித் விலகியுள்ளார். பாகிஸ்தான் அணிக்கெதிரான இறுதி ஒருநாள் போட்டியின் போது ஸ்மித்தின் கணுக்காலில் ஏற்பட்டுள்ள உபாதை காரணமாக இவர் தொடரிலிருந்து வெளியேறியுள்ளார்.



## வன்னி உதைபந்தாட்டச் சமர்!

புதுக்குடியிருப்பு, ஜன.28

வன்னி மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட கழகங்களுக் கிடையில் 'வன்னி உதைபந்தாட்டச் சமர்' இடம்பெறவுள்ளது.

விக்கினேஸ்வரா விளையாட்டுக் கழகம் நடத்தும் இந்த உதைபந்தாட்டத் தொடருக்கு 'சுவிஸ் தாயக விருட்சம்' மற்றும் சுவிஸ் விளையாட்டுக் கழகம் என்பன அனுசரணை வழங்குகின்றன. இந்த உதைபந்தாட்டப் போட்டிகள் புதுக்குடியிருப்பு விளையாட்டுக் கழக மைதானத்தில் இன்று சனிக்கிழமை மற்றும் நாளை ஞாயிறுக்கிழமை காலை 8 மணி முதல் இரவு 10 மணிவரை இடம்பெறவுள்ளன. வெற்றிபெறும் அணிகளுக்கு இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான பணப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

# பாகிஸ்தானை பந்தாடியது ஆஸ்திரேலியா: கடைசிப் போட்டியில் 57 ஓட்டங்களால் வெற்றி!



## சாதனைகளை நிலைநாட்டினார் டேவிட் வோர்னர்!



அடிலெய்ட் , ஜன.28

பாகிஸ்தானுக்கு எதிரான 5 ஆவது மற்றும் கடைசி ஒரு நாள் கிரிக்கெட் ஆட்டத்தில் 57 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ஆஸ்திரலியா வெற்றிபெற்றுள்ளது. இதன்மூலம் 5 போட்டிகள் கொண்ட இந்தத் தொடரை ஆஸ்திரேலியா 4-1 என்ற கணக்கில் கைப்பற்றியுள்ளது. அந்த அணியின் தொடக்க வீரர்களான டேவிட் வோர்னர் 179 ஓட்டங்களையும், டிராவிஸ் ஹெட் 128 ஓட்டங்களையும் குவித்தனர். இந்த ஜோடி முதல் விக்கெட்டுக்கு 41.3 ஓவர்களில் 284 ஓட்டங்களைக் குவித்தது. இது ஆஸ்திரேலியாவின் ஒரு ஜோடி குவித்த அதிகபட்ச ஓட்டங்களாகும். அதே நேரத்தில் ஒரு நாள் கிரிக்கெட் வரலாற்றில் தொடக்க ஜோடி ஒன்றால் எடுக்கப்பட்ட 2 ஆவது அதிகபட்ச ஓட்ட எண்ணிக்கையாகும். இலங்கை அணியின் ஜெயசூரிய-உபுல்தரங்க ஜோடி 2006 இல் இங்கிலாந்துக்கு எதிராக 286 ஓட்டங்களைக் குவித்ததே சாதனையாக உள்ளது.

ஆஸ்திரேலியாவின் அடிலெய்ட் நகரில் நேற்று நடைபெற்ற இந்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வென்று, முதலில் ஆஸ்திரேலிய அணி துடுப்பெடுத்தாடியது.

டிராவிஸ் ஹெட் நிதானமாக ஆட, டேவிட் வோர்னர் வெளுத்து வாங்கினார். 34 பந்துகளில் அரைச் சதம் கண்ட வோர்னர், 78 பந்துகளில் சதத்தைப் பெற்றார்.

இதனால் 31 ஆவது ஓவரில் 200 ஓட்டங்களைக் கடந்தது ஆஸ்திரேலியா. தொடர்ந்து வேகம் காட்டிய வோர்னர் 107 பந்துகளில் 150 ஓட்டங்களைப் பெற்றார். மறுமுனையில் நிதானமாக ஓட்டங்களைச் சேர்த்த டிராவிஸ் ஹெட் 121 பந்துகளில் சதத்தைப் பெற்றார். இது, ஒரு நாள் போட்டியில் அவர் அடித்த முதல் சதமாகும். ஆஸ்திரேலியா 41.3 ஓவர்களில் 284 ஓட்டங்களை எட்டிப் பிடித்த போது வோர்னரின் விக்கெட்டை இழந்தது ஆஸி.இரட்டைச் சதமடிப்பார் என எதிர்பார்க்கப்பட்ட அவர் 128 பந்துகளில் 5 சிக்ஸர், 19 பவுண்டரிகளுடன் 179 ஓட்டங்களைக் குவித்து ஜுனைத் கான் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

பின்னர் களமிறங்கிய அணித் தலைவர் ஸ்டீவன் ஸ்மித் 4 ஓட்டங்கள், மக்ஸ்வெல் 13 ஓட்டங்கள், மத்யூ வேட் 8 ஓட்டங்கள் என அடுத்தடுத்து வெளியேறினர்.

இறுதியில் 50 ஓவர்களில் 7 விக்கெட் இழப்புக்கு 369 ஓட்டங்களை ஆஸ்திரேலியா குவித்தது. இதன்மூலம் ஒரு நாள் போட்டியில் பாகிஸ்தானுக்கு எதிராக அதிகபட்ச ஓட்டப் பெறுதியை ஆஸ்திரேலியா பதிவு செய்தது.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி, 49.1 ஓவர்களில் 312 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தது. தொடர்நாயகன், ஆட்டநாயகன் என இரு விருதுகளையும் டேவிட் வோர்னர் தட்டிச் சென்றார்.

இந்த ஆட்டத்தில் சதமடித்ததன் மூலம் ஒரு சீசனில் அதிக சதமடித்தவரான இலங்கை வீரர் குமார் சங்ககாரவின் சாதனையை (6 சதம்) டேவிட் வோர்னர் சமன் செய்துள்ளார். இந்தப் போட்டியோடு சேர்த்து கடைசியாக விளையாடிய 11 இன்னிங்ஸ்களில் 6 ஆவது சதத்தை வோர்னர் விளாசியுள்ளார். அந்தச் சாதனையை செய்த முதல் வீரர் என்ற பெருமையையும் பெற்றுள்ளார்.

இதுவரை 5 முறை 150 ஓட்டங்களுக்குமேல் வோர்னர் குவித்துள்ளார். இதன்மூலம் ஒரு நாள் போட்டியில் அதிகமுறை 150 ஓட்டங்களைக் குவித்தவரான சச்சினின் சாதனையையும் சமன் செய்துள்ளார்.

## இறுதிப் போட்டியில் சானியா ஜோடி!

மெல்போர்ன் , ஜன.28

ஆஸ்திரேலிய ஓபன் கிராண்ட்ஸலாம் டென்னிஸ் தொடரின் கலப்பு இரட்டையர் இறுதிப் போட்டியில் இந்திய வீராங்கனை சானியா, குரோஷியாவின் டோடிச் ஜோடி முன்னேறியுள்ளது.

ஆஸ்திரேலிய ஓபன் கிராண்ட்ஸலாம் டென்னிஸ் தொடர், மெல்போர்ன் நகரில் இடம் பெற்று வருகிறது. இதன் கலப்பு இரட்டையர் பிரிவு அரையிறுதியில் இந்தியாவின் சானியா, குரோஷியாவின் இவான் டோடிச் ஜோடி, ஆஸ்திரேலியாவின் சமந்தா ஸ்டோசர், சாம் குரோத் ஜோடியைச் சந்தித்தது.

முதல் செட்டை 6-4 என கைப்பற்றிய சானியா ஜோடி, அடுத்த செட்டை 2-6 என பறிகொடுத்தது. வெற்றியாளரை நிர்ணயிக்கும் கடைசி செட்டில் அசத்திய சானியா ஜோடி 10-5 என தன்வசப்படுத்தியது.

ஒரு மணி நேரம் 18 நிமிடம் நீடித்த போட்டியின் முடிவில் சானியா, டோடிச் ஜோடி 6-4, 2-6, 10-5 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது.



வன்னி மாவட்டத்தைத் தழுவிய தெரிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான
"வன்னி உதைபந்தாட்டச் சமர்"
இடம் : புதுக்குடியிருப்பு விளையாட்டுக்கழக மைதானம்.
காலம் : இன்று (28.01.2017) சனிக்கிழமை
நாளை (29.01.2017) ஞாயிற்றுக்கிழமை
நேரம் : காலை 8 மணி முதல் - இரவு 10 மணி வரை
குறிப்பு : ரூபா 200,000 பெறுமதியான பணப் பரிசில்கள் வழங்கப்படும்.
ஒழுங்கமைப்பு உதவி : விக்கினேஸ்வரா விளையாட்டுக் கழகம், புதுக்குடியிருப்பு.
அனுசரணை: "சுவிஸ் தாயக விருட்சம்" மற்றும் சுவிஸ் உதைபந்தாட்டக் கழகங்கள்.
(சி/184)



# தெற்கில் ஐ.தே.க - ஸ்ரீ.சு.க இணைந்ததைப் போன்று வட,கிழக்கில் தமிழ் - முஸ்லிம்கள் இணையவேண்டும்

## எமது உரிமைகளைப் பெற அதுவே வழி என்கிறார் அமைச்சர் ரிசாட்

(எஸ்.நிதர்சன்)

'தெற்கில் இரு துருவங்களாக இருந்த ஐக்கிய தேசியக் கட்சியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் தமது கொள்கை வேறுபாடுகளுக்கு அப்பால் நாட்டின் நலன்களுக்காக ஒன்றுபட்டுச் செயற்படுவதைப் போன்று வடக்கு - கிழக்கில் உள்ள தமிழ் - முஸ்லிம் தலைமைகளும் கொள்கை வேறுபாடுகளுக்கு அப்பால் ஒன்றுபட்டுச்செயற்படவேண்டும் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் கைத்தொழில் வாணிபத்துறை அமைச்சருமான ரிசாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தவும் பொருளாதாரத்தை முன்னேற்றவும் மாத்திரமே இந்த இணைவு அவசியம். மாறாக, பல்வேறு கொள்கைகளைக் கொண்ட அரசியல் கட்சிகள் அரசியல் ரீதியாக ஒன்றிணைய முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும், வடக்கு - கிழக்கு இணைப்பு என்பது சாத்தியமற்றது என்றும் அவர் கூறினார். வடக்கு மாகாண சபையின் நடவடிக்கைய பார்த்தால் வடக்கு கிழக்கு இணைப்பை கோர முடியாது போல் உள்ளது. எமது கட்சியின் கொள்கையும் அதுதான். வடக்கு கிழக்கு இணைப்பு தொடர்பில் ஒவ்வொரு கட்சிக்கும் ஒவ்வொரு நிலைப்பாடு உள்ளது. ஆனால் இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ, அல்லது தமிழரசுக் கட்சியோ யாருடனும் பேசவில்லை என்றும் அவர் கூறினார்.

சர்வதேசவர்த்தகக்கண்காட்சி யாழ். பொது நூலகக கேட்போர் கூடத்தில் நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகியது. இங்கு உரையாற்றுகையிலேயே அமைச்சர் ரிசாட் பதியுதீன் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் -

எட்டாவது சர்வதேசகண்காட்சியில் கலந்து கொள்வதையிட்டு நான் மகிழ்ச்சியடைகிறேன். நீண்டகாலமாக நடைபெற்ற யுத்தம் யாழ்.மாவட்டம் உட்பட வடக்கு மாகாணத்தை மிகவும் பாதித்துள்ளது. இதனால் பல லட்சக்கணக்கான மக்கள் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர். அருகிலிருக்கின்ற இந்தியாவிலே ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் அகதிகளாக வாழ்கின்றனர்.

தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் இணைந்து தெரிவுசெய்த தற்போதைய ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் இருவேறு கட்சிகளைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் நாட்டின் நலன்களைக் கருத்தில்கொண்டு இணைந்துள்ளனர். நாட்டிலே நிரந்தரமான சமாதானத்தை ஏற்படுத்த வேண்டுமென்று அவர்கள் விரும்புகின்றார்கள்.

நமது நாட்டை ஒரு பொருளாதார வளமுள்ள நாடாக மாற்ற வேண்டும் என்பதற்காக தமக்கிடையே இருக்கின்ற கருத்து வேறுபாடுகள், கொள்கை வேறுபாடுகளைப் புறந்தள்ளி நல்லாட்சி என்ற பெயரிலே ஆட்சி அமைத்திருக்கின்றனர்.

வடக்கு-கிழக்கில் உள்ள தமிழ் பேசும் மக்கள் நல்லாட்சியை சரியான முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அதே போல, கடந்த 30 வருடங்களாகத் துன்பத்திலும் துயரத்திலும் வாழ்கின்ற எமது மக்களின் கண்ணீரைத் துடைக்க வடக்கு - கிழக்கில் இருக்கின்ற அரசியல்வாதிகளும் ஒன்றுபடவேண்டும். இந்தச் சந்தர்ப்பத்தை அவர்கள் சரியாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

கடந்த காலங்களிலே எமக்கிடையே இடைவெளிகள் ஏற்பட்டிருந்தாலும் பொதுவான, நல்ல விடயங்களுக்காக நாம் ஒன்றிணைந்து எமது பிரதேசங்களை முன்னோக்கிக் கொண்டு செல்ல வேண்டும்.

மேலும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து புனர்வாழ்வு பெற்று சமூகத்துடன் இணைக்கப்பட்டுள்ளவர்களின் வாழ்வை வளப்படுத்தி அவர்களது கரங்களைப் பலப்படுத்த வேண்டும். ஏனைய மாகாணங்களில் வாழ்ந்த இஸ்லாமிய மக்களையும் அவர்களின் சொந்த இடங்களில் குடியமர்த்த வேண்டும்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும். தொழில் வாய்ப்பு இல்லாதிருக்கின்ற இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படவேண்டும். இயங்காமல் இருக்கின்ற தொழிற்சாலைகளை மீள இயக்க வேண்டும்.

அரசியல் தலைமைகளாகிய நாம் இவற்றைச் செய்யாமல் இருந்தால் எதிர்காலம் எங்கள் மீது குற்றம் சுமத்தும். எங்களைப் பழித்துரைக்கும். நாம் மக்களுக்குத் துரோகம் செய்தவர்கள் ஆவோம்.

வடக்கு மாகாண முதலமைச்சர், மற்றும் உறுப்பினர்களும் கிழக்கு மாகாண முதலமைச்சர் மற்றும் உறுப்பினர்களும் வடக்கு, கிழக்கிலே இருக்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒன்றுசேர்ந்து செயற்படவேண்டும். அவ்வாறு செயற்பட்டால் இரண்டு மாகாணங்களும் எதிர்காலத்திலே வளர்ச்சிப் பாதையில் பயணிக்க முடியும்.

இதற்கு உதவி செய்ய இந்தியா உட்பட சர்வதேச நாடுகள் தயாராக இருக்கின்றன. அதே போன்று தென்னிலங்கையிலும் நல்ல மனமுடைய அரசியல் தலைமைகளும் இருக்கின்றன. ஆகவே நீண்டகாலமாக இருக்கின்ற இனப்பிரச்சினைக்கும் தீர்வைக் காண்பதோடு பொருளாதார வளமுள்ள பிரதேசமாக வடக்கையும் கிழக்கையும் நாங்கள் அபிவிருத்தி செய்ய முடியும். - என்று கூறினார். (ம)

## கச்சதீவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்திக் குறிப்பு ஒன்றை கடற்படையின் வடபிரதேச பிரதித் தளபதி கொமண்டோர் எச்.ஆர். பி.குணவர்த்தனா அனுப்பிவைத்துள்ளார்.

அதில் அவர் தெரிவித்துள்ள விடயங்களின் சாரம் வருமாறு:-

கடற்படையினர் அந்த மீனவர்களைத் தாக்கினர் என அச்செய்தியில் கூறப்பட்டுள்ள போதிலும், கிடைக்கப்பெற்றுள்ள சாட்சியங்களின்படி அத்தகைய வகையிலான சம்பவங்கள் இடம்பெறவில்லை.

நெடுந்தீவில் இருந்து கடற்றொழிலுக்குப் புறப்பட்ட தியோகுப்பிள்ளை ஞானராசா, சகாயன் செல்வம், மரியதாஸ் வசந்தராஜா ஆகியோர் 22 ஆம் திகதி தங்களின் செயலிழந்த படகில் கரையை நோக்கி இழுபட்டு வந்துள்ளனர். கடற்படையினர் அவர்களைக் காப்பாற்றி, உணவளித்து பாதுகாப்பாக வீடு திரும்புவதற்கு எரிபொருளும் வழங்கினர்.

எனினும், மேற்படி மீனவர்களுக்கும் கடற்படையினருக்கும் இடையில் மொழிபுரிதல் பிரச்சினை இருந்தமை தெளிவாகியுள்ளது. அதனால், இந்த மீனவர்களின் பாதுகாப்புத் தொடர்பாக அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட தகவல்கள் அவர்களால் தவறாகப் புரியப்பட்டு, அதன் விளைவாக இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்தப் பின்புலச் சூழலிலேயே தங்களின் செய்தி பிரசுரமாகியுள்ளது. அது, இலங்கைக் கடற்படை தொடர்பில் வாசகர்களுக்கு விரும்பத்தகாத கருத்து நிலை தவறான முறையில் ஏற்படுத்தியிருக்கும்.

ஆனால், கடலில் தத்தளிப்போரை - அவர்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவராயினும் - காப்பாற்றுவதில் இது தொடர்பான சர்வதேச ஒப்பந்தங்களில் கூறப்பட்ட விதிமுறைகளை எப்போதும் மதித்து தீவிரமாக கடைப்பிடிப்பதை இலங்கை அரசின் வல்லமை மிக்க ஒரு படை என்ற வகையில் இலங்கைக்கடற்படை எப்போதும் வழமையாகக் கொண்டுள்ளது என்பதை சுட்டிக் காட்ட விரும்புகின்றேன். இது போன்ற பல்வேறு முன்னைய சம்பவங்கள் இதனை நிரூபிக்கும்.

கடலில் தத்தளிப்போரைக் காப்பாற்றி உதவும் விடயத்தில் இலங்கைக் கடற்படை ஆற்றி வரும் பங்கு, பணி குறித்து பொது மக்களை - குறிப்பாக இப்பிரதேச மீனவர் சமூகத்தை - மேற்படி செய்தி தவறாக வழிநடத்தக்கூடி யது. - என்று அதில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

**ஆசிரியர் குறிப்பு**

*01.மேற்படி 'மீனவர் தாக்கப்பட்டனர்' என்ற செய்தி கடந்த 24 ஆம் திகதிய காலைக்கதிர் நாளிதழின் முதலாம் பக்கத்தில் வெளியாகிய அதேசமயம், அன்றைய பத்திரிகையின் 19 ஆம் பக்கத்தில் 'காப்பாற்ற வேண்டிய கடற்படையினரே காயப்படுத்தியமை கண்டிக்கத்தக்கது' என்ற தலைப்பில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரட்ணத்தின் அறிக்கையும் பிரசுரமாகியிருந்தது.*

*02. மேற்படி செய்தி எமது பத்திரிகையில் பிரசுரமாவதற்கு முந்திய நாளே அதே விடயத்தை உறுதிப்படுத்தி, சுட்டிக்காட்டி, மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரட்ணத்தின் அறிக்கை ஆசிரிய பீடத்துக்குக் கிடைத்துவிட்டது. மீனவர் சங்கம் மற்றும் மீனவர் சமாஜப் பிரதிநிதிகளுடன் தொடர்பு கொண்ட பின்னர் அவரும் அந்த விடயத்தை எமக்கு ஊர்ஜிதப்படுத்தியிருந்தார். அவற்றின் அடிப்படையிலேயே காலைக்கதிர் 24 ஆம் திகதிய முன்பக்கச் செய்தி பிரசுரிக்கப்பட்டது.* (ஆ-ர்)

## முஸ்லிம் ஊடகர்கள் இன்று யாழ். வருகை

யாழ்ப்பாணம், ஜன.28

காத்தான்குடி முஸ்லிம் மீடியா பேரத்தின் பிரதிநிதிகள் இன்று யாழ். மாவட்டத்துக்கு வருகை தரவுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் வடமாகாண முதலமைச்சர், வடமாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் அரசியல் பிரமுகர்கள் ஆகியோரை அவர்கள் சந்தித்துக் கலந்துரையாடுவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

யாழில் மீள்குடியேறி வாழும் முஸ்லிம் மக்களின் அடிப்படை வாழ்வுநிலை பற்றியும் அவர்கள் நேரில் சந்தித்து உரையாடவுள்ளார்கள். இது விடயமாக யாழ். - கிளிநொச்சி முஸ்லிம் சம்மேளனத்தையும் சந்தித்து பிரச்சினைகளை அவர்கள் ஆராயவுள்ளனர். (இ-19)

# ஹட்டனில் மோசமான விபத்து ஓட்டோ நாசம்; இருவர் பலி!



ஹற்றன் குடாஓயா பகுதியில் நேற்று மதியம் முச்சக்கர வண்டியும் லொறியும் மோதியதால் ஏற்பட்ட விபத்தில் இருவர் பலியாகியுள்ளமையுடன் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

ஹற்றனிலிருந்து தலவாக்கலை நோக்கிச் சென்ற லொறி ஒன்றும் கொட்டகலையிலிருந்து ஹற்றன் நோக்கி சென்ற முச்சக்கரவண்டி ஒன்றும் ஹற்றன் - குடாஓயா பிரதான வீதியில் நேருக்கு நேர் மோதுண்டு விபத்துக்குள்ளாகின. விபத்தில் ஓட்டோ மோசமாகச் சிதைவடைந்துள்ளது.

இதன்போது முச்சக்கர வண்டியில் பயணித்த பெண் ஒருவர் உள்ளிட்ட இருவர் உயிரிழந்துள்ளமையுடன் மேலும் ஒருவர் காயமடைந்துள்ளார்.

பத்தனை - திம்புள்ள பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய விஜயகுமாரன் சத்தியமலர் மற்றும் 26 வயதுடைய பாக்கியராஜா ஆகியோரே உயிரிழந்துள்ளனர்.

முச்சக்கரவண்டியின் சாரதியான 23 வயதுடைய ரவிச்சந்திரன் என்பவர் காயமடைந்ததுள்ளார்.

உயிரிழந்த பெண்ணின் சடலமாக டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

லொறிச் சாரதியின் கவனயீனம் காரணமாகவே இவ் விபத்து ஏற்பட்டுள்ளது எனத் தெரிவித்த ஹற்றன் பொலிஸார் லொறியின் சாரதியைக் கைது செய்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஒ)

# சர்வதேசப் பொலிஸாரின் மூலம் உதயங்கவைக் கைது செய்ய முயற்சி

கொழும்பு, ஜன.28

ரஷ்யாவுக்கான முன்னாள் இலங்கைத் தூதுவர் உதயங்க வீரதுங்கவைக் கைது செய்வதற்காக சர்வதேசப்பொலிஸார் ஊடாக நடவடிக்கை எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது என பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவினர் நேற்று நீதிமன்றத்திற்கு அறிவித்தனர்.

மிக் விமானக் கொள்வனவு தொடர்பான ஆவணங்கள் விமானப் படையினரிடமிருந்து காணாமல் போனமை சம்பந்தமாக விரிவான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என விசாரணை அதிகாரிகள் நீதிமன்றத்திற்குத் தெரியப்படுத்தியுள்ளனர்.

மிக் விமானக் கொள்வனவு வழக்கின் சந்தேக நபரான ரஷ்யாவுக்கான முன்னாள் இலங்கைத் தூதுவர் உதயங்க வீரதுங்கவை சர்வதேசப் பொலிஸார் ஊடாகக் கைதுசெய்யுமாறு கொழும்பு கோட்டை நீதிமன்றம் அண்மையில் பிடியாணை பிறப்பித்திருந்தது.

பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவினரின் வேண்டுகோளின் படி இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. (ஒ)

## கைதடி சித்த மருத்துவமனையில்

# தேசிய சுதேச மருத்துவ மாநாடும் கண்காட்சியும் நேற்று ஆரம்பமாயின



வடமாகாண சுதேச மருத்துவத் திணைக்களமும் யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவ பிரிவினரும் கைதடி சித்த மருத்துவ வைத்தியசாலை நிர்வாகத்தினரும் இணைந்து ஒழுங்கமைத்த முதலாவது தேசிய சுதேச மருத்துவ மாநாடும் கண்காட்சியும் நேற்று வெள்ளிக்கிழமை காலை கைதடி சித்த மருத்துவமனையில் ஆரம்பமாகி நடைபெற்றன.

நிகழ்வில் வடமாகாண போக்குவரத்து மற்றும் மீன்பிடி அமைச்சின் செயலாளர் எஸ். சத்தியசீலன், யாழ் பல்கலைக் கழக துணைவேந்தர் வசந்தி அரசரட்ணம், மகரகம ஆயுர்வேத திணைக்களத்தின் ஆணையாளர் எல்.எச். திலகரட்ண, யாழ். பல்கலைக்கழக பேரவை உறுப்பினர் எஸ். கே.சிற்றம்பலம் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் மற்றும் மீன்பிடி அமைச்சின் செயலாளர் எஸ். சத்தியசீலன் ஆகியோர் காலை 9.45 மணிக்கு கண்காட்சியை நாடாவெட்டி ஆரம்பித்து வைத்தனர். அதனைத் தொடர்ந்து யாழ் பல்கலைக்கழகத்தின் சித்த மருத்துவ பீட மாண வர்களின் கண்காட்சி இடம்பெற்றது.

கண்காட்சியின் ஏராளமான பகுதிகள் பனை ஓலை, தென்னோலை, வைக்கோல் போன்ற இயற்கை பொருட்களினால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. அத்துடன் பல்வேறு மூலிகைகள், மூலிகைகளால் ஆன மருத்துவ பொருட்கள், பாணிகள் காட்சிப்படுத்தப்பட்டு அவை தொடர்பாக பார்வையாளர்களுக்குத் தெளிவூட்டப்பட்டது.

கைதடி, நாவற்குழிப் பிரதேசப் பாடசாலை மாணவர்கள் நேற்று கண்காட்சியைப் பார்வையிட்டனர். இந்நிகழ்வின் இரண்டாம், மூன்றாம் நாள் நிகழ்வுகள் இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் காலை 8 மணிக்கு ஆரம்பமாகும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ம-21)

காலைக்கதிர் Kalaikkathir

# இலங்கையில் நிலைமை சீரடையவில்லை அகதிகளைத் திருப்பி அனுப்பாதீர்கள்!

## ஐ.நா. குழு வெளிநாடுகளிடம் கோரிக்கை

இலங்கையில் சித்திரவதைகளுக்கு ஆளாகக்கூடிய அச்சுறுத்தலை எதிர்நோக்கியுள்ள, வெளிநாடுகளில் தஞ்சமடைந்துள்ள ஈழத் தமிழர்களை நாடு கடத்த வேண்டாம் என ஐக்கிய நாடுகள் சபை வெளிநாடுகளிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கையில் கடந்த ஏப்ரல் மாதத்திலும் வெள்ளைவான் கடத்தல்கள் இடம்பெற்றுள்ளன என ஆதாரங்களுடன் தகவல்களை வெளியிட்டுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் சித்திரவதைகளுக்கு எதிரான குழு, இலங்கையின் நீதிமன்றம், சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் பொலிஸார் உட்பட சட்டம் ஒழுங்கை நிலைநாட்டும் அனைத்துத் தரப்பினரையும் கடுமையாக விமர்சித்து நீண்ட அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

தற்போதைய அரசிலும் வெள்ளை வான் கடத்தல்கள், கைதுசெய்யப்படுபவர்கள் பாலியல் ரீதியிலான வன்கொடுமைகளுக்கு உட்படுத்தப்படல் போன்றன நடைபெறுகின்றன.

படையினருக்கு எதிராக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் கட்டமைப்பு ரீதியாக விசாரணை செய்வதற்கு முடியாமை மற்றும் சட்டமா அதிபர் திணைக்களம் சுயாதீன நிறுவனமாக இயங்காமை ஆகிய விடயங்கள் நீதியை நிலைநாட்டுவதற்குப் பெரும் தடையாக உள்ளன.

தற்போதைய சட்ட கட்டமைப்பு, இராணுவம் உட்பட முப்படையினர், பொலிஸார், சட்டமா அதிபர் திணைக்களம், நீதிமன்றம் ஆகியவற்றை மறுசீரமைப்புக்கு உட்படுத்தாமையால் சித்திரவதைகள் தொடரக்கூடிய ஆபத்துக்கள் நீடித்து வரு கின்றன என ஐக்கிய நாடுகள் சபையின் சித்திரவதைகள் தொடர்பான குழு வெளியிட் டுள்ள 24 பக்கங்களைக் கொண்ட புதிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரி.ஐ.டி மற்றும் சி.ஐ.டி யினர் தொடர்ந்தும் உடல் மற்றும் உள ரீதியான சித்திரவதைகளை முன்னெடுத்து வருகின்றனர் என தெரிவிக்கும் ஐக்கிய நாடுகளின் சித்திரவதைகளுக்கு எதிரான குழுவின் தலைவர் பேராசிரியர் யுவான் மெந்தெஸ் இவை தொடர்பில் விசாரணை நடத்தப்படாமை தொடர்பில் விசனம் வெளியிட்டுள்ளார்.

அத்துடன் சித்திரவதைகளுக்கு உட்படுத்திப் பெற்றுக்கொள்ளும் ஒப்புதல் வாக்குமூலங்களை எந்தவித கேள்விக்கும் உட்படுத்தாது அப்படியே சாட்சியாக ஏற்றுக்கொள்ளும் நீதிமன்றத்தின் நடைமுறையை வன்மையாகக் கண்டிக்கும் மெந்தெஸ் இந்த நடவடிக்கைகள் சித்திரவதைகளை தொடர்ந்தும் ஊக்குவிக்கின்றன எனவும் தெரிவித்துள்ளார்.

சித்திரவதைகளுக்குத் துணையாக இருக்கும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை உடனடியாக இரத்துச் செய்ய வேண்டும் என வலியுறுத்தியுள்ள ஐ.நா அதிகாரி அதற்குப் பதிலாகக் கொண்டு வரப்படவுள்ள உத்தேச சட்டமூலம் சர்வதேச விதிமுறைகளை முழுமையாக ஏற்றுக்கொண்டதாக இருக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார்.

சித்திரவதைகள் தொடர்பில் விசாரணைகளை நடத்தி வழக்குத் தொடர்ந்து தண்டனை பெற்றுக்கொடுப்பதற்காக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் கடந்த 2015 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைய போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் நம்பிக்கையை வென்றெடுப்பதற்கு நிலைமாறு கால நீதிப்பொறிமுறையை உண்மையான அர்ப்பணிப்புடன் நிறைவேற்ற வேண்டும் என்றும் யுவான் மெந்தெஸ் இலங்கை அரசை வலியுறுத்தியுள்ளார். (ஓ)

## கர்ப்பவதி படுகொலையைக் கண்டித்து கடையடைப்பும் மனிதச் சங்கிலியும்

### ஊர்காவற்றுறையில் நேற்று இடம்பெற்றன



ஊர்காவற்றுறை, ஜன.28

ஊர்காவற்றுறையில் கர்ப்பவதித் தாயான மேரி றம்சியாவின் படுகொலையைக் கண்டித்து ஊர்காவற்றுறை வெகுஜன அமைப்புகளின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நேற்று இரு மணித்தியால கடையடைப்பும் மனிதச் சங்கிலிப் போராட்டமும் இடம்பெற்றது.

ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தின் முன்பாக இடம்பெற்ற மனிதச்சங்கிலிப் போராட்டத்தில் மாணவர்கள், பொதுமக்கள், பிரதேச இளைஞர், யுவதிகள் மற்றும் பலர் உணர்வுபூர்வமாகக் கலந்துகொண்டனர்.

மனிதச்சங்கிலிப் போராட்டத்தின் நிறைவில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் யாழ். அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் ஆகியோருக்கான மகஜர்கள் பிரதேச செயலக கணக்காளரிடம் கையளிக்கப்பட்டன.

இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் றம்சியாவின் படுகொலைக்கு உடனடியாக உரிய தீர்வு காணப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர். மேலும், இனிமேல் இவ்வாறான ஒரு துன்பியல் நிகழ்வு நடைபெறாமல் பெண்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினர். (ம-21)

## தனியார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கழக மருத்துவபீடத்தில் ஆரம்பித்த இந்த நடை பவனி யாழ்.மாவட்டச் செயலகம் வரை சென்று நிறைவடைந்தது.

மேற்படி தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிராக யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் கடந்த ஒரு வாரமாக வகுப்பு பகிஷ்கரிப்புகளை மேற்கொண்டு வருகின்றனர். இதன் தொடர்ச்சியாகவே நேற்று வெள்ளிக்கிழமை கவனயீர்ப்பு நடைபவனி இடம்பெற்றது.

நேற்றுக் காலை யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீடத்திற்கு முன்பாக குழுமிய மாணவர்கள் அங்கிருந்து கால்நடையாகப் புறப்பட்டனர்.

இந்தப் பவனி பலாலி வீதியூடாக நகர்ந்து கோயில் வீதியூடாக வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரனின் இல்லத்துக்குச் சென்றது.

அங்கு வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரனிடம் ஆறு அம்சக் கோரிக்கையை வலியுறுத்தி, மகஜர் ஒன்றும் மருத்துவபீட மாணவர்களினால் கையளிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து இந்தப் பவனி யாழ். மாவட்டச் செயலகம் வரை சென்றது. அங்கு யாழ்.அரச அதிபரிடம் மகஜர் கையளிக்கப்பட்டது. தொடர்ந்து வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் சென்று அவருக்கான மகஜரும் கையளிக்கப்பட்டது.

கவனயீர்ப்பு நடைபவனியில் ஈடுபட்டவர்கள் பின்வரும் கோரிக்கைகளை வலியுறுத்தியிருந் தனர்.

மாலபே 'சைட்டம்', மருத்துத் துறை கல்விக்கு இன்னும் அரசாங்கத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளவில்லை. இதனால் அந்தக் கல்லூரியின் MBBS பட்டக் கல்விக்குப் புதிய மாணவர்களை இணைத்துக் கொள்வதை நிறுத்த வேண்டும்.

சைட்டத்திலிருந்து கல்வி கற்று வெளியேறிய மாணவர்களுக்கு அதற்கான அங்கீகாரத்தை அரசாங்கம் வழங்க வேண் டும்.

மருத்துவக் கல்வியின் பாதுகாப்பையும் நோயாளிகளின் பாதுகாப்பையும் உறுதி செய்வதற்கு இலங்கையின் அரசமைப்பின்படி உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். (ம- 21)

## முதலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளார்.

மஹிந்தவின் பாதுகாப்பு தொடர்பாக ஆராயும் முகமாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது என அவர் கூறினார்.

நுகேகொடையில் நடைபெற்ற 'புரட்சியின் ஆரம்பம்' பேரணியில் உரையாற்றிய அவர், முன்னாள் ஜனாதிபதியின் வாகனம் என்ற போர்வையில் தாம் பிறிதொரு வாகனத்தை அனுப்பி பாதுகாப்பு நிலைமை தொடர்பாக பரீட்சித்தோம் எனத் தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதியின் வருகையை குறிக்கும் வகையில் கூட்டத்தில் உரையாற்றிக் கொண்டிருந்த ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தமது உரையை இடைநிறுத்தினார்.

அந்தத் தருணத்தில் நிகழ்ச்சியை நெறிப்படுத்திக் கொண்டிருந்த அறிவிப்பாளர் முன்னாள் ஜனாதிபதியை வரவேற்கும் வகையிலான அறிவிப்புக்களை மேற்கொண்டார்.

எனினும் அந்த வாகனத்தில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வராத நிலையில் சற்று நேரம் கழித்து அந்த வாகனம் பின்னோக்கி நகர்ந்தது.

மீண்டும் தமதுரையை ஆரம்பித்த ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ, பாதுகாப்பு நிலைமைகளை ஆராயும் வகையில் மஹிந்தவுக்குப் பதிலாக போலியொன்றை எடுத்து வந்தோம் என தெரிவித்தார். (ஓ)

## உத்தேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'புரட்சியின் ஆரம்பம்' என்ற தலைப்பில் முன்னெடுக்கப்பட்ட இந்தக் கூட்டத்தில் கூட்டு எதிரணியை உற்சாகப்படுத்தும் விதத்தில் அலை அலையாக மக்கள் கூட்டமாகக் கலந்துகொண்டனர் எனச் செய்தி ஏஜென்ஸிகள் தெரி வித்தன.

கூட்டு எதிரணியின் முக்கிய பிரமுகர்கள் அனைவரும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர். விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் விமல் வீரவன்ஸ, அண்மையில் நாடாளுமன்றில் ஆற்றிய உரை அங்கு திரையில் ஒளிபரப்பப்பட்டது.

கூட்டத்தில் மஹிந்த கூறிய முக்கிய விடயங்கள் வருமாறு:-

2015 ஜனவரி 9 ஆம் திகதி காலை 6 மணிக்கு நான் ஜனாதிபதி மாளிகையை விட்டு மெதமுலனவுக்குக் கிளம்பினேன். ஓய்வுபெற்று வீட்டில் கொஞ்சக் காலம் செலவிடுவதே என் நோக்கமாக இருந்தது. ஆனால் மக்கள்தான் 'இல்லை. நீங்கள் ஓய்வுபெறமுடியாது. திரும்ப வாருங்கள்' என்று வற்புறுத்தினார்கள்.

அதேவேளை மைத்திரிபால சிறிசேனவுக்கும் நாம் ஒன்றைக் கூற விரும்புகிறோம். ஓய்வு பெற இருந்த என்னை மீண்டும் இழுத்து வரும் வேலைகளைச் செய்தவர் நீங்கள்தான்.

நிறைவேற்று அதிகாரத்தை நாடாளுமன்றத்திடம் ஒப்படைக்கப் போவதாக அரசு உறுதியளித்தது. ஆனால் அரசு, அதனைச் செய்யவில்லை. அந்தப் பணியைத் தள்ளி வைத்துவிட்டு மோசடியான அரசமைப்பு ஒன்றைக் கொண்டு வர முயல்கிறது. அதைத்தான் நாங்கள் எதிர்க்கிறோம்.

நாட்டில் பிரச்சினைகள் இருந்தால் உரையாடல் மூலம் அதனைத் தீர்க்க வேண்டும். நாங்கள் அரசைப் பேச்சுக்கு அழைத்தோம். ஆனால் அவர்கள் அந்த அழைப்பை ஏற்கவில்லை. மஹிந்த ராஜபக்ஷவுடன் எதுவும் வைத்துக்கொள்ள வேண்டாம் என வெளிநாடுகளில் உள்ளோர் அவர்களுக்குச் சொன்னமையால்தான் அப்படி நடந்து கொண்டார்கள்.

ஏன் தெரியுமா? நாங்கள் ஏகாதிபத்தியவாதிகளுக்குதலை வணங்கி, காலில் விழமாட்டோம். அதனால்தான் அப் படிக் கூறியுள்ளார்கள்.


மக்களை ஏமாற்றியே இந்த அரசு ஆட்சிக்கு வந்தது. இப்போது அது நாட்டைக் கடனில் தள்ளியுள்ளது.

இந்த அரசு மிகப் பெரிய கடன்களை வாங்கித் தள்ளியுள்ளது. ஆனால் மக்களுக்கும் நாட்டுக்கும் அது எதுவுமே செய்யவில்லை.

அரச நிறுவனங்களையும், அரச சொத்துக்களையும் இந்த அரசு விற்கின்றது. காணிகளையும் துறைமுகங்களையும் அந்நிய நாடுகளுக்குத் தாரை வார்க்கின்றது. இது நாட்டைக் காட்டிக் கொடுக்கும் செயலாகும். - என்றார் அவர். (உ)

## காற்றுடன் கூடிய மழையால்

# கிளி.நாகேந்திரா வித்தியாலயத்தின் வகுப்பறைத் தொகுதிகள் சேதம்



கிளிநொச்சியில் நேற்று முன்தினம் காற்றுடன் கூடிய பெருமழை பெய்ததால் பாடசாலை ஒன்றின் தற்காலிக வகுப்பறைக் கூரைகள் தூக்கி வீசப்பட்டன.

நேற்று முன்தினம் இரவு கிளிநொச்சியில் காற்றுடன் கூடிய பெருமழை பெய்தது. இதன் போது கிளிநொச்சி புளியம் பொக்கணை கல்வெட்டித்திடல் நாகேந்திரா வித்தியாலயத்தின் தற்காலிக வகுப்பறை கட்டடம் சேதமடைந்தது. அதன் கூரைகள் காற்றினால் தூக்கி வீசப்பட்டன.

தரம் ஒன்று தொடக்கம் க.பொ.த சாதாரண தரம் வரையான வகுப்புக்களைக்கொண்ட மேற்படிப் பாடசாலையில் நான்கு வகுப்புக்கள் மட்டுமே நிரந்தரக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன.

கிராமப்புறப் பாடசாலையான மேற்படிப் பாடசாலை மாணவர்கள் சிறந்த முறையில் கல்வி கற்பதற்கு நிரந்தரக் கட்டட வசதிகளை ஏற்படுத்தித் தரவேண்டும் என மாணவர்களின் பெற்றோரும் பழைய மாணவர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-70)

## மஹிந்தவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ராஜபக்ஷவிடமிருந்து தமக்கு அறிவுறுத்தல் கிடைத்தது என்று விநாயகமூர்த்தி முரளிதரன் கூறினார்.

தான் நன்றிக்கடன் செலுத்துவதற்கு மறப்பதில்லை. அதனால் மஹிந்த ராஜபக்ஷ செய்த நன்மைக்காக அவருக்கு நன்றிக்கடன் செலுத்த வேண்டும். நாட்டை மீட்டெடுத்த தலைவர் என்ற வகையில் மஹிந்த ராஜபக்ஷவுக்கு நன்றிக் கடன் செலுத்துமாறு அனைவரையும் கோருகின்றேன் - எனவும் விநாயகமூர்த்தி முரளிதரன் கூட்டத்தில் உரையாற்றும் போது தெரிவித்தார். (ஓ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.01.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.